Registered as a News Paper பக்கங்கள் 20 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

சிறப்பிதழ்

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மாசி 08 [19-02-1993] வெள்ளிக்கிழமை ஓசை 01

## உப உணவுச் செய்கைக்கு மண்ணெய் வழங்கப்படும்

வரட்சியினால் நெல் விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாட்டை மேலும் மோசமாக்கியுள்ளது இதனைக் கருத்திற்கொண்டு உப உணவுப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன நெல் அறுவடை முடிந்ததும் உப உணவுப் பொருள்களான குரக்கன் பயறு கௌபி என்பனவற்றைப் (20 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரிப் பாதை விவகாரம் செய்திக்கு புலிகள் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பாதையை திறப்பதற்கு விடுதலைப் புலிகள் நேரடியாக மறுத்துள்ளதாக அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் கூறியதாக கொழும்பு பத்திரிகையில் வெளிவந்த செய்திகளை விடுதலைப் புலிகள் இயக்கம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

"இந்தச் செய்திகள் தவறானவை. பூநகரிப் பாதையை திறப்பதற்கு விடுதலைப் புலிகள் முற்றாக மறுத்துவிடவில்லை. பூநகரி இராணுவத்தை போக்குவரத்துப் பாதையிலிருந்து தென்புறமாக ஒரு மைல் தூரம்வரை விலகிநின்று மக்கள் சுதந்திரமாக பயணம் செய்ய அனுமதிக்குமாறே யோசனை தெரிவித்தோம்" என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வமான பேச்சாளர் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

பூநகரி இராணுவத்தை வாபஸாகாதவரை பூநகரி பாதையூடாக பொதுமக்கள் பயணம் செய்வதற்கு விடுதலைப் புலிகள் முற்றாக மறுத்துள்ளதாக கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐ நா. உயர்ஸ்தானிகராலய தலைமையதிகாரி கூறியதாக கொழும்பு பத்திரிகைகள் செய்திகள் பிரசுரித்துள்ளன. இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் பேச்சாளரிடம் கேட்டபோது.

"பூநகரிப் பாதையைத் திறப்பது பற்றி கொழும்பிலுள்ள ஐ. நா. உயர் ஸ்தானிகராலய அதிகாரி திரு ரியூட்டருடன் நாம் கடந்த 13 ஆம் திகதி பேச்சுக்களை நடத்தினோம். பூநகரியிலிருந்து இராணுவத்தை முற்றாக வாபஸ்பெறுமாறு நாம் நிபந்தனை விதிக்கவில்லை. அங்கு தரித்து நிற்கும் இராணுவத்தைப் பாதையிலிருந்து சிறிது தூரம் விலகி நிற்குமாறு மட்டுமே கேட்டுக் கொண்டோம். இராணுவக் காவல் சாவடிகள் இன்றி மக்கள் சுதந்திரமாகப் போக்குவரத்துச்செய்வதற்கு ஒழுங்கு செய்யுமாறும். இந்த யோசனையை அரசு தரப்பிற்குத் தெரிவித்து பதில் கூறுமாறும் நாம் திரு. ரியூட்டரிடம் கேட்டுக்கொண்டோம்" என்று (20 ஆம் பக்கம் பார்க்க)



ஈழநாதம் மூன்றாண்டுகளைக் கடந்து நான்காவது ஆண்டில் உறுதியுடன் அடி எடுத்து வைக்கின்றது. 1990-ல், இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கையில், அடிப்படை வசதிகள் கூட முழுமையாக பூர்த்தி செய்யப்படாத நிலையில் ஈழநாதம் வெளிவரத் தொடங்கியது. அதேவேளை, இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் ஏற்பட்ட சமாதானமும் சில மாதங்களே நீடித்ததினால், ஈழநாதம் தனது மூன்றாண்டு காலத்தையும் பெரும் நெருக்கடியில் மத்தியில் கடந்து வந்துள்ளது.

அதிலும் கடந்த வருடம் ஈழநாதத்திற்குமிகவும்துயர் மிகுந்த ஆண்டாகும். ஈழநாதம்எதிர்பாராதவிதத்தில்தனது நிர்வாகப் பொறுப்பாளர் மேஜர் அழகனை இழந்தது. ஈழநாதம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் உழைத்த மேஜர் அழகனின் இழப்பு சகலருக்கும் பேரிடியாகவே இருந்தது.

இந்நிலையிலும், ஈழநாதம் தன் இலட்சியத்தில் இருந்து சிறிதும் வழுவாது முன்னேறிச் சென்றுள்ளது. இதற்கு மக்களிடம் இருந்து தொடர்ந்து கிடைத்து வரும் ஆதரவும், எமது பத்திரிகை விற்பனையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்புமே போதுமான சான்றுகளாகும். அதாவது, ஈழநாதம் இன்று தமிழ் மக்களின் நம்பிக்கைக்கும், அபிமானத்திற்கும் உரிய ஒரு பத்திரிகையாக வளர்ச்சி கண்டுள்ளமை எமக்கு மகிழ்ச்சி ஊட்டுவதாகவுள்ளது

இவ்வளர்ச்சிக்கு நிறுவனத்தினர் எவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டாலும், மக்கள் அளிக்கும் ஆதரவே அடிப்படையானது என்பதில் சந்தேகமில்லை. இந்நிலையில், எமது பத்திரிகைக்கு கடந்த காலத்தில் ஒத்துழைப்பு தந்து ஊக்குவித்த தமிழீழ மக்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கும் அதேவேளை எதிர்காலத்திலும் இதேபோன்றுஒத்துழைப்பு வழங்கி, ஈழநாதத்தின் வளர்ச்சிக்கு மேன் மேலும் உதவி புரிவீர்கள் என ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

## மீட்புநிதி சேகரிப்பு

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாளை முற்பகல் 9 00 மணி தொடக்கம் 11 00 மணி வரை கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும், 11 30 மணி தொடக்கம் 2.30 மணிவரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் சாவகச்சேரி பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பிற்பகல் 3 00 மணி தொடக்கம் 5 00 மணிவரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் மீட்புநிதி செலுத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் தெரிவித்துள்ளார்.

# புலிகள் மாற்று யோசனை கூறியது உண்மையே

### ஐ. நா. யாழ். பிரதிநிதி ஊர்ஜிதம்

(யாழ்ப்பாணம்)

பூநகரியிலிருந்துஇராணுவம் விலகி நிற்க மறுக்கும் பட்சத்தில், கிளாலிக்கடற்பரப்பு மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி, மக்கள் போக்குவரத்திற்கு அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமென விடுதலைப் புலிகள் யோசனை தெரிவித்திருந்தனர்.

இவ்வாறு அகதிகளுக்கான ஐ நா. உயர்ஸ்தானிகராலய யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு அசோக்குமார் கூறினார். கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் ஐ நா. அதிகாரி திரு ரியூட்டருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் பங்கு பற்றிய திரு அசோக்குமார். பூநகரிப் பாதையை திறப்பதற்கு புலிகள் ஒரேயடியாக மறு (20 ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்களுக்கும் இலவச நிவாரணம் வழங்குக

(யாழ்ப்பாணம்)

அரசாங்க ஊழியர்களுக்கும் இலவச நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என அரசாங்க அதிபரிடம் நேற்று கோரிக்கை விடப்பட்டது. செயலகத்தில் நடைபெற்ற திணைக்களங்களுக்கான கூட்டத்தில் இக் கோரிக்கை விடப்பட்டது

தற்கால பிரச்சினையைக் கருத்திற்கொண்டு மாதம் ஒரு முறையாவது அரசாங்க ஊழியர்களுக்கும் இலவச உலர் உணவு வழங்கப்பட வேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (சி.பா)

# தபால் பொதிகள் தேக்கம் அஞ்சல் அதிகாரி விசனம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான தபால்கள் தொடர்ச்சியாக அனுப்பி வைக்கப்படாமல் தடைசெய்யப்பட்டுவருவதும் குறிப்பாக வெளிநாட்டு தபால்கள் உடைக்கப்படுவதையிட்டும் வடமாகாண அஞ்சல் அதிபர் நாயகம் எஸ். எம் சேதுகாவலர் விசனம் தெரிவித்தார்.

நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்ற திணைக்களத் தலைவர்களுக்கான கூட்டத்திலே அவர் இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில்; தான் கூட்டுப்படை தலைமையலுவலக உயரதிகாரிகளுடன் பேச்சு நடாத்தியபோது அவர்கள் சந்தேகத்திற்கு இடமான சில கடிதங்களையே உடைப்பதாகவும் ஏனைய கடிதங்கள் உடைக்கப்படாமல் அனுப்பப்படும் எனவும் உறுதியளித்தனர் ஆனால் தொடர்ந்து கடிதங்கள் பெருமளவு உடைக்கப்பட்டு அனுப்பப்படுவதையொட்டி கவலை தெரிவித்துள்ளார். இதேவேளை அண்மைக் காலங்களில் தபால்கள் உடைக்கப்பட்டு இரண்டு இலட்சம் அமெரிக்க டொலரிற்கு மேல் படையினர் எடுத்துள்ளனர் எனவும் ஆனால் இப்படி பெறப்பட்ட பணத்தில் ஒரு சிறு தொகையை குற்றப் பணமாக எடுத்துக் கொண்டு மிகுதியை அனுப்புவதே நடைமுறை எனவும் யாழ். அரச அதிபரிற்கு அவர் சுட்டிக்காட்டினார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## குமணவில் தபால் பொதிகள்

திருக்கோணமலைக்கு நேயாளிகளுடன் சென்ற 'குமண' கப்பல் மீண்டும் நோயாளிகள் உட்பட 79 பேருடன் பருத்தித்துறை துறைமுகத்தை வந்து (20 ஆம் பக்கம் பார்க்க)

## 'வெளிச்சம்' இன்று வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலை. பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான கலை இலக்கிய. சமூக மாசி மாத இதழ் 'வெளிச்சம்' 'கேணல் கிட்டு' அவர்களின் நினைவுச் சிறப்பிதழாக இன்று வெளிவருகின்றது (20 ஆம் பக்கம் பார்க்க)

**உளவாளிகள்!!!**

**அவதானமாக இருக்கவும்..**

பெடியளின்ரை முகாமைப்பற்றிக் கதைக்கின்றாரா? உஷ்.....



மூன்றாவது ஆண்டு நிறைவுச்

## வரி விளம்பரம்

**ஒலிவ் ஸ்நானப்பவுடர்**

சீயக்காய், வெந்தயம், பயறு, அரப்பு, எலுமிச்சம்கோது, சீரகம் மற்றும் இயற்கை மூலிகைகளைக் கொண்டு தயாரித்தது. எண்ணெய் முழுக்குக்கு இயைந்த இயற்கை சாதனம். பக்கற் விலை, ரூ. 3/- மட்டுமே. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனை ஆகின்றது. -மில்க்வைற். (சி/6037)

**சேவை**

'றெனி மூக்குக்கண்ணாடியகம் உங்கள் கண்களைபரிசோதித்து கண்ணாடி சரியாக வழங்கப்படும். இல. 288, நாவலர்வீதி, ஆனைப்பந்தி (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (4308)

**மீரா பிரசுரங்கள்**

இளைஞர்களின் மனதைக் கெடுக்காமல் அவர்களைச் சிந்திக்க வைக்கும் நாவல்கள், விடியலைத்தேடி, அக்கினி. இல்லத்தில் சில உள்ளங்கள், மீண்டும் புதிதாய்ப் பிறப்போம், சுவடுகள், விண்ணில் அல்ல விடிவெள்ளி. (4210)

**திருக்கணித பஞ்சாங்கம்**

ஸ்ரீமுகபுதுவருட (1993-94) திருக்கணித பஞ்சாங்கம் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது. வியாபாரிகளுக்குத்தகுந்த கமிஷன் உண்டு. விலைரூபா 65.00 பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (4281)

**சைனா மகசீன்**

கொப்பிகள், புத்தகங்களுக்கு கவர்போடக்கூடிய சைனா மகசீன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, அர்ச்சுனாவீதி, யாழ்ப்பாணம். (4062)

**சலனம்**

சென்னை ஃபிலிம் சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம்பற்றிய விமர்சன சஞ்சிகை இருமாத இதழாக வெளிவருகின்றது. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம். 405, அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (4063)

**போத்தல்கள் தேவை**

ஜாம், பியர், கோடியல்ஸ் போத்தல்கள் தொடர்ந்து எம்மால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. Taste Line Industies (Pvt) Ltd, 14, SeeniorLane, Jaffna. (சி-6046)

**மிருதங்கம்**

புதிய மிருதங்கம் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் ஓடருக்கு சலுகையுடன் செய்துதரப்படும். தரகர் தேவையில்லை. நேரில்வரவும். கோவிந்தபிள்ளை விஜயகுமார். மிருதங்க தொழில் நிலையம், 192/1 நாவலர்வீதி, பெருமாள் கோவிலடி. யாழ்ப்பாணம். (4270)

**தையலகம்**

மங்களகரமான வைபவங்களுக்கு- பெண்களுக்கான சாறி பிளவுஸ்கள், அலங்கார ஆடைகள், பாடசாலை மாணவருக்கான சீருடைகள், நவீன முறையில் குறித்த தவணையில் வேலை செய்து கொள்ள, திலகா மகளிர் தையல் அகம், 163, நாவலர் வீதி, (மனோகரா தியேட்டர் சந்தி யாழ்ப்பாணம். (சி/5964)

**5. 3. 93 சனிமாற்றம்**

14. 4. 93 இல் செவ்வாய் மாற்றம், 1.6.93 வரை வியாழன் வக்கிரம் கைரேகை சாஸ்திரமும் அடங்கியது ரூ. 8/-எங்கும் விற்பனையாகின்றது. (நூலாசிரியர் Prot. சத்தியதாஸன்) பாலாஜி புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (4311)

**கல்தேக்கு விதை**

கல்தேக்கு விதை நாற்று இடுவதற்குத் தேவை. -மில்க்வைற்- (சி/6038)

**பெற்றுக் கொள்ளவும்**

பவுண்கட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். யாழ். வர்த்தகர் சங்கம் 21 நவீனசந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம். (4064)

**சோதிடம்**

உங்கள் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கும் நேரத்தில் - ஜாதகம் எழுத, பலனறிய, பெயரமைக்க, விவாகப் பொருத்தம் பார்க்கவேலணைச்சோதிடர் V.A. சிவராசா, 152 B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (4315)

## 91-வது நாள் நினைவஞ்சலி



### அமரர் கணபதி நரசிங்கம்

(சவூதி அரேபியாவில் அகாலமரணமானார்)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 26 - 6 - 1944 | 20 - 11 - 1992 |

திதி 19 - 2 - 1993

எம்மிதயத்தின் ஒளிவிளக்கே
எங்கள் வாழ்வின் குலவிளக்கே
சவூதிக்கு சென்று நாலு வருடம் மட்டும்தான்
மூன்று மாதத்தில் அப்பா வருகிறேன் என்னுயிர்ச்
செல்வங்களே கலக்கம் வேண்டாமென்றீர்
அப்பா வருவாரென்று வழிமேல் விழி வைத்து
ஆசையுடன் காத்திருந்தோம் காலனவன்
ஏமாறச் செய்தானே!
பூவாக பொன்னாக எமை வளர்த்த அப்பாவே!
எந்தநிலை வந்தாலும் நாணயமாய்
எதிர்நீச்சல் போட்டு வெற்றி கொள்ளல் வேண்டுமென
அறிவான வாசகங்களை எமக்கெடுத்துச் சொல்வீரே
அப்பா! நீங்கள் கனவாக எமக்கு நினைத்த காரியங்கள்
கருகிப் போகாது நனவாக்கி வைத்திடுவோம்
உங்கள் மேல் ஆணையன்றோ அன்புத் தெய்வமே
ஆத்மா சாந்தி அடைவாராக.

அன்புத் தெய்வத்தின் பிரிவினால் தத்தளிக்கும்
அன்பு மனைவி: செல்வரத்தினம்
தவச்செல்வங்கள்: மதனரூபி
அருண்ரூபி
விஜயரூபன் மற்றும்
உற்றார், உறவினர்.

நரசிங்கம் செல்வரத்தினம்
சிங்கைநகர்,
புலோலி தெற்கு,
புலோலி.

(சி-6029)

யாழ்ப்பாணத்தில்
மின்பொருள்களுக்கான தேவையை
பூர்த்திசெய்ய நாடுங்கள்

**யாழ்ப்பாணம்எலக்ரிக்கல்ஸ்**

94, (6) அர்ச்சுனா (ஸ்ரான்லி)வீதி,
யாழ்ப்பாணம்.

தமிழீழத்தின் மக்கள் தினசரியாம்
ஈழநாதம்
மூன்றாம் ஆண்டு முடிவடைந்து
நான்காம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கும்
இவ்வேளையில்
வளர்ச்சியுற வாழ்த்துகின்றோம்.

(சி-6036)

ஈழநாதம் வாழ. வளர
எமது இதயபூர்வமான
நல் வாழ்த்துக்கள்.

நிர்வாகம்,
**வடபிராந்திய**
**வர்த்தக ஊழியர் சங்கம்,**
தலைமைச் செயலகம்,
237, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

(4314)

## நினைவு கூருகின்றோம்...
## 1993. 02. 19

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - மூதூர் நீலாப்பொல பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின போது வீரச்சாவெய்திய

**பெரியவன்** (வேலுக்குட்டி ஜீவராசா - 2-ம் வட்டாரம், கட்டைபறிச்சான், மூதூர் - திருமலை)

**ஆறுமுகம்** (பத்தக்குட்டி அற்புதன் - எல். பி.03, கிளிவெட்டி, மூதூர் - திருமலை)

முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக்கொல்லப்பட்ட - ஒருபெண் உட்பட -03 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில்சிறிலங்காப்படையினர்மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 05 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு தேசவிரோதக்குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

❋ **பாபு** (சபாபதி கோபாலசிங்கம் - தங்கநகர், மூதூர் - திருமலை)

இதே ஆண்டு இந்தியப்படையினராற் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்- அளவெட்டி வடக்கைச் சேர்ந்த தமிழிளைஞன்

1989 ஆம் ஆண்டு யாழ்- சுழிபுரம் பகுதியிற் தேசவிரோதக் குழுவினராற் சுட்டுக் கொல்லப்பட்ட உயர் வகுப்பு மாணவர்களாகிய, 2 தமிழிளைஞர்கள்.

1992ஆம் ஆண்டு மட்டக்களப்பு - மாவடி ஓடைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**ஓமன்** (செல்வநாயகம் விஸ்வநாதன் - குமாரவேலியார் கிராமம், செங்கலடி - மட்டு)

வவுனியாவில் இதே தினம்வரையான சில காலப் பகுதிக்குட் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது காணாமற் போன 200க்கும் மேற்பட்ட தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

❋ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-6040)

# துணைவேந்தரின் ஆசிச்செய்தி



'ஈழநாதம்' செய்தித்தாள் தனது மூன்றாவது ஆண்டை நிறைவு செய்து' நான்காம் ஆண்டைத் தொடங்கும் இந்தத் தருணத்தில் அதனை வாழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பத்திரிகைகள் - அதுவும் நாள்தோறும் வெளிவரும் செய்தித்தாள்கள்- மிகுந்த பொறுப்புடனும், அவதானமாகவும் செயலாற்றக் கடமைப்பட்டுள்ளன. நாட்டின் நிலைமைகளையிட்டும், உலக நிகழ்வுகளையிட்டும் சரியான, உண்மையான விளக்கத்தை மக்களிடையே உண்டு பண்ணும் பணியிலே செய்தித்தாள்கள் முன்னின்று உழைத்தல் வேண்டும். வெறும் இலாப நோக்குடன் பரபரப்பான செய்திகளைப் பரப்புவதைத் தவிர்த்து, சமூக, பொருண்மிய மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் எண்ணங்களை வளர்த்தெடுப்பதே நன்மை தருவதாகும். எப்பொழுதும் பிறருடைய தயவை எதிர்பார்த்து ஏங்கிச் சோர்வடையும் போக்கை விடுத்து நம்மவரெல்லாம் தன்னம்பிக்கையுடனும், ஊக்கத்துடனும் உழைத்து உயர்வு காண்பதற்குச் செய்தித் தாள்கள் சிறப்பாக உதவலாம்.

இந்த வகையிலே தற்சார்பும், உறுதியும், திடமும் வாய்ந்த ஒரு சமூகத்தை வளர்த்தெடுக்கும் பணியில் 'ஈழநாதம்' ஆர்வம் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. இவ்வாறான உயரிய இலட்சியங்களைப் பற்றுக்கோடாகக் கொண்ட 'ஈழநாதம்' இன்னுமின்னும் வலிமையும் வளமும் பெற்று மேன்மேலும் சிறந்த சாதனைகளை ஈட்டுதல் வேண்டும் என்பதையே நல்லெண்ணம் கொண்ட அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

'ஈழநாதம்' அந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் என்று நம்புகிறேன்.

புதிய ஆண்டிலே 'ஈழநாதத்'தின் செழுமையும் சிறப்பும் பன்மடங்கு பெருகிப் பொலியட்டும்.

பேராசிரியர் அ. துரைராசா
துணைவேந்தர். யாழ்.பல்கலைக்கழகம்.

## ஈழநாதம் எங்கள் இதயநாதம்

- புதுவை இரத்தினதுரை

ஈழநாதமே!
எங்கள் இதயநாதமே
உனக்கு அகவை மூன்றாச்சா?
நேற்றுப் போலிருக்கிறது உன்பிறப்பு.
உன் ஜனனம் நிகழ்ந்ததும்
சிலர் ஜாதகம் கணித்தனர்.
அபசகுனமாக
அற்ப ஆயுள் என்றெனர்.
இன்று நீ நிமிர்ந்து நடக்கின்றாய்
காலத்தின் குரலாக உன்நாத ஒலி
காதில் விழும் போதெல்லாம்
நெஞ்சம் மகிழ்ச்சியால் நிரம்புகிறது.
காலை விடிய எம்வாசலில் வந்து
கதவை நீ தட்டும் போது
அந்த முழுநாளுமே ஆனந்தமாகக் கழிகிறது.
அட்டதிக்குகளையும் அருகில் வரச்செய்யும்
அதிசயம்
உனக்கு மட்டும் தெரிந்த ரகசியம்.
ஊரெல்லாம் சேர்த்த உண்மைகளைக் கோர்த்து
ஒருமாலை கட்டுகின்றாய்.
உலகத் திசையாவும் அலசி, அதிகாலை
உலை மூட்டிப் படைக்கின்றாய்.
ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுப்பது போல்
ஒருநூறுபேர் சேர்ந்து
உனக்கு ஒப்பனைகள் செய்கின்றனர்.
காலையில் நீ
கைவீசி நடக்கவேண்டு மென்பதற்காக
சிலருக்கு
எல்லா ராத்திரியும் சிவராத்திரியாகிறது.
'அழகன்' உன்னை அழகாக்கினான்.
அடுத்து வந்தவன்
உனக்கு வளம் சேர்க்கிறான்.
சரித்திரம் படைக்கும் தலைவனின்
செல்லப் பிள்ளை நீ.
அதனால் உனக்குத் தொல்லைகள் இல்லை.
களத்தில் வீரர்கள் புண்படும் போதெல்லாம்
கண்ணீர் வடிக்கின்றாய்
எதிரியின் பாசறை எரிந்திடும் போதினில்
எழுந்து நீ பாடுகின்றாய்.
இந்த உறவு எப்படி வந்தது?
உன் ஆணிவேர் இந்தப் பூமிக்குள்தானே
புதைந்திருக்கிறது.
உன் வாசலுக்குவரும் ஒவ்வொரு தடவையும்
நான் பெருமையால் நிமிர்வதுண்டு.
ஏனென்று தெரியுமா?
எங்களால் எதுவும் முடியும்
என்பதற்காகவே!
'தமிழீழம் பிறந்தது'
ஒருநாள் இது உனக்குத் தலைப்புச் செய்தி
அதுவரைக்கும், ... ...
அப்பாலும் ... பலகாலம் ....
இப்பாரில் நீ வாழ்வாய்.
'ஈழநாதமே!'
எங்கள் இதயநாதமே!
உனக்கு வாழ்த்தெழுதும் ஒவ்வொரு வருடமும்
நான் வாழ்வேன்.
என் வாழ்த்தும் உனக்கு வாழ்வளிக்கும்.
'ஈழநாதமே!' வாழி!!

# அரசியற்துறை பொறுப்பாளரின் வாழ்த்துச்செய்தி



உலக வரலாற்றைப் பொறுத்தவரை புரட்சிகர மாற்றங்களின் ஒரு முக்கிய ஊடகமாக புதினப் பத்திரிகைகள் இருந்து வருகின்றன. இன்று உலகளாவிய ரீதியில் மனித வாழ்வின் அன்றாட நிகழ்வுகள், அவர்களிடையான பிரச்சினைகள் மக்களது எதிர்காலம் என்பவற்றுக்கு முதன்மை கொடுத்து பத்திரிகைகள் வெளிவருகின்றன. பத்திரிகை என்பது மக்களின் குரலாக இருப்பதால் ஒரு நாட்டைப் பொறுத்த வரை அங்குள்ள மக்களை அதிகம் எது பாதிக்கின்றதோ அது சம்பந்தமான நிகழ்வுகளே அங்குள்ள பத்திரிகைகளின் முக்கிய செய்தியாக இருக்கின்றது. பத்திரிகையானது மனித மேம்பாட்டுக்கு துணைபோவதுடன் அறிவியல் ரீதியான புரட்சிக்கருத்துக்களை கொண்டிருப்பது அப்பத்திரிகையின் தன்மையை மெருகூட்டுவதாக அமையும்.

விடுதலைப் போராட்டம் முனைப்படைந்து வரும் இக்காலகட்டங்களில் மக்களை விடுதலை உணர்விலிருந்து பிரிக்க முடியாது என்பதை பேரினவாத பாஸிஷ அரசுகள் உணர்ந்து கொள்ளத் தவறவில்லை. இதனால் மக்களை நேரடியாக நசுக்குவதை விட அவர்களின் உணர்வுகளை மழுங்கடிப்பதன் ஊடாக போராட்ட உணர்வைக் குறைக்க முனைகிறது இத்தகைய செயல்முறைக்கு இலங்கை அரசும் விதிவிலக்காக அமையமுடியாது. இக்கால கட்டத்தில் வெகுஜன சாதனங்களை தம்வசம் வைத்திருப்பதும், அவற்றின் மீது அளவு கடந்த கட்டுப்பாடுகளை பிரயோகிப்பதும் அதனது தலையாய நோக்கமாகும். எனவே இதனது நோக்கை சிதறடிக்கும் வகையில் தமிழீழத்தில் பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவை எமது விடுதலைப் போராட்டத்தை முதன்மைப்படுத்துவனவாகவே அமைகின்றன. சிறிலங்கா பேரினவாத அரசு பொருளாதார இராணுவ அடக்குமுறையுடன் வெகுஜன தொடர்பு சாதனங்கள் ஊடாகவும் எம்மீது வன்முறைகளைப் பிரயோகிக்கின்றது. இவ்வாறான வேளையில் தமிழீழத்தில் இடம் பெறும் நிகழ்வுகளை மக்கள் அறிந்து கொள்ள இங்கு வெளிவரும் பத்திரிகைகள் அளப்பரிய சேவைகளை ஆற்றுகின்றன. இந்தவகையில் சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது திணிக்கும் வன்முறைகளை உள்நாட்டில் இருப்பவர்களும் வெளிநாட்டில் இருப்பவர்களும் அறியும் வகையிலும் சேவை செய்வதாக ஈழநாதம் பத்திரிகை செயற்படுவது எம்மைப் பெருமைப்படுத்துவதுடன் பேரினவாத சிறிலங்கா அரசை அச்சப்படுத்தவும் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்தை கொண்டிருப்பவர்களை கண்டிக்கவும் தவறவில்லை.

தமிழீழ விடுதலைப்போர் ஏற்பட்டு முனைப்புப்பெறத் தொடங்கியதன் பின் இங்குள்ள பத்திரிகைகள் யாவும் சுதந்திரமாக இயங்க ஆரம்பித்தன. ஈழநாதம் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு மக்களுக்கான தனது பணிகளில் மூன்று ஆண்டுகளைப் பூர்த்தி செய்திருப்பதுடன் மக்கள் மனதில் நிலையான இடத்தைப் பிடித்துள்ளது. பத்திரிகைச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி ஈழப்போராட்டம் மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகள் ஆகியவற்றை வெளிக்கொணர்ந்து பத்திரிகையானது எவ்வாறான காலகட்டத்தில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று முன்னுதாரணமாக விளங்குகின்றது. வெறும் ஊகங் களின் ஊடாக செய்திகளை வெளியிட்டு மக்களின் ஆவலை ''புஸ்வாணம்'' ஆக்கிவிடாமல் ஆதாரத்தின் அடிப்படையில் செய்திகளை வெளியிடுவது இதனது முக்கிய அம்சமாகும்.

பத்திரிகையின் செய்முறைக்கு நடுநிலைமை அவசியமானது இவ்வகையில் ஈழநாதம் பத்திரிகையானது எமது போராட்டத்தின் தன்மை அதன் செயற்பாடுகளை தெளிவாக பக்கச்சார்பற்ற நிலையில் உணரவைக்கும் ஊடகமாக இருந்து வருவது பாராட்டுக்குரியது. சிறிலங்கா அரசு எம்மீது செலுத்தும் அழுத்தங்களை உடனுக்குடன் கண்டிப்பதுடன் அரசின் கபடத்தனத்தையும் முன்கூட்டியே மக்களுக்கு அறிவித்து மக்களை விழிப்பூட்டும் கருவியாகவும் செயற்பட்டு வருகிறது. ஈழநாதம் பத்திரிகையில் வெளிவரும் அம்சமானாலும் தற்போதைய பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டிய வழிமுறைகளை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. அத்துடன் மக்கள் விடும் தவறுகளையும் உடனுக்குடன் சுட்டிக் காட்டி மக்களின் நல்ல நண்பனாக விளங்குகிறது.

ஒரு பத்திரிகையின் நலமான ஆயுள் மக்களின் கையிலேயே தங்கியுள்ளது. மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து மக்களை உணர்வூட்டும் தன்மையில் செயல்படும் இப்பத்திரிகை மக்களுக்கான தனது பணிகளில் மூன்றாண்டுகளைப் பூர்த்தி செய்து இருப்பது பாராட்டுக்குரியதாகும். இந்த வகையில் ஈழநாதம்பத்திரிகையில் பன்முகப்பட்ட பணிகளை வாழ்த்துவதுடன் மக்கள் தொண்டே முதன்மையானது என்பதைக் கருத்திற் கொண்டு மக்களுக்கான பணிகளை இப்பத்திரிகை மேன்மேலும் ஆற்ற வளர்ந்து கொள்ள வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

சு.ப தமிழ்ச்செல்வன்
அரசியற்துறை பொறுப்பாளர்,
தமிழீழம்.

நான்காம் ஆண்டில்
வீறுடன் நுழையும்
மக்கள் தினசரி
ஈழநாதத்தின்
பணிகள் தொடர

மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்

V

# ஸ்ரீ தாமோதர விலாஸ்

403, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[சி- 59927]

---

தரமான கலர்,
கறுப்பு - வெள்ளை'
என்லாஜ்மென்ட்
படங்களுக்கும்

அவசரமான
றப்பர் சீல்
வகைகளுக்கும்

## தரன்
ஸ்ருடியோ

189, மின்சார நிலைய
வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6017)

---

திக்கெட்டும் திகழும் செய்திகளை திரட்டி
தீஞ்சுவையுடன் அள்ளித் தரும்
மக்கள் தினசரி ஈழநாதமே
பல்லாண்டு காலம் பணிதொடர

V

வாழ்த்துக்கள்

## கங்கா என்ரபிறைசெஸ்

காகிதாதிகள் மற்றும் அச்சகப் பொருள்கள்
விற்பனையாளர்கள்
358, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி- 5991)

---

தரணியெங்கும் புகழ் படைத்த
தாயகத்தின் விடுதலைப் போருக்கு
உரம் சேர்க்க உழைத்திடும்

ஈழநாதமே
உன் பணி தொடர வாழ்த்துகின்றோம்.

## ஈஸ்வரி ஜுவல்லர்ஸ்

177, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/5994]

---

நாதத்தின் ஒலி நாடெங்கும் ஒலிக்கட்டும்!
இன்று நாலாவது ஆண்டினுள் பிரவேசிக்கும்
ஈழநாதத்திற்கு
எம் இனிய வாழ்த்துக்கள்

★ உங்கள் வாழ்நாளில் வரும் மங்களகரமான நிகழ்வுகளை அதி நவீன 'கலந்துற வாடும்' (Mixing Camara) கமரா மூலம் தரமான முறையில் அமைத்து அதனை உங்கள் வாழ்நாளின் பொன்னான பொக்கிசமாக்கிடவும்,

★ புதிய, பழைய திரைப்படங்களை பதிவுசெய்துகொள்ளவும்,

★ வீடியோ படக் கசெட்டுக்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும்,

## சுப்பஸோ வீடியோ சென்ரர்

198/5 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(திறமான முறையில் மிக்ஸிங் செய்துகொடுக்கப்படும்)

(சி-6051)

---

ஈழநாதத்தின் இதய ஒலி எங்கும் பரவட்டும்

மரங்களை வளர்த்து
மண்வளம் பேணுவோம்.

## மில்க்வைற்

உற்பத்திகளை
பயனுக்குக்கொண்டு
தொழில் வளம்
பெருக்குவோம்.
உங்களுக்கு உ தவிட
எங்களுக்கு உதவுங்கள்



(சி-6020)

---

நாலாம் ஆண்டில் வீறுடன் நுழையும்
'ஈழநாதம்' தினசரிக்கு
எங்கள் வாழ்த்துக்கள்.


## யாழ். றிக்கோ
## சுவீற் அன் கிறீம் கவுஸ்

இல- 352, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

[சி-6022]

**ஈழநாதம்**

**மூன்றாம் ஆண்டு நிறைவுப் போட்டி**
**முதலாம் பரிசு பெற்ற சிறுகதை**




"உவன் இன்னும்எழும்பேல்லையோ" அப்பு தான். அப்பு தான் அப்பிடிக் கேட்பார். அப்புவின்குரலைக்கேட்டாலே காதுக்கை இலையான் பூந்த மாதிரி ஓர் எரிச்சல். அவர் கனக்க கதைக்க மாட்டார். ஒரு வசனம், இரண்டு வசனம் தான். அந்த ஒரு வசனத்திலை மூன்று விசயம் எனக்கு விளங்க வேணும். உவன் இன்னும் எழும்பேல்லை. உவன் நெடுக பிந்தியே எழும்புவான். இனி இப்படியெண்டால் உதை விழும். இந்த மூன்றும் சேர்ந்துதான். "உவன் இன்னும் எழும்பேல்லையோ". அப்புவுக்கு மெல்லக் கதைக்கத் தெரியாது. அப்பு ஒரு விதம். அம்மா இன்னொரு விதம். அம்மாகதைச்சால் கதைக்கிற ஆளுக்கே கேளாது. அப்பா என்றால் கோபம். அம்மா என்றால் பாவம். இந்த பாவமும், கோபமும் சேர்ந்து என்னைப் பெத்து விட்டினம். நான் ஒரு கோப பாவம்.

முற்றத்தில் அப்புவோட ஆரோ கதைக்கினம். கனகம்மான், பொன்னுக்குஞ்சியன், சின்னண்ணன் இப்பிடி சிலர். கோயிலில ஏதோ விசேசம் போல. அப்பு தான்கோயில் மணியம். மற்றவையும் பரிபாலன சபையில இருக்கினம். எங்கட முருகையன் கோவிலில முந்தி அப்புவின் அப்புதான் மணியம். இப்ப அப்பு பிறகு ஆர்? நானோ? இருக்காது, உது அப்புவோட சரி.

திறப்புக் கோர்வையை எடுத்து பையில போட்டு, சைக்கிளில கொழுவி, சைக்கிளை தள்ளிக் கொண்டு வாறன். "அப்பு நான் கடைக்குப் போறன்" அப்புவுக்குச் சொன்னன், ஏன் சொல்லுவான். எனக்குஅதைவிட்டால்வேறை என்ன? அப்புவுக்கு சந்தையுக்கை பலசரக்கு கடை ஒன்று இருக்கு. கடைப்பெயர், வரி கட்டுகிறது, லைற்பில் கட்டுகிறது, எல்லாம் அப்புவின் பேரிலையே தவிர மற்றதெல்லாம் நான் தான். சைக்கிளை கேற்றால ஏற்றி றோட்டுக்கு வரஅப்பு சொன்னார் "குஞ்சா நான் கடைக்கு இண்டைக்கு வரமாட்டன். சூரன் போர். தெரியும் தானே" அப்பு ஏன் சொன்னார். நான்கிட்டவரேக்கை சொல்லயில்லை. போக விட்டு கூப்பிட்டுச் சொல்லுறார். அப்புவோடை கதைக்கிறதே புளி நெறுக்கிற மாதிரி ஒரு அரியண்டம். அப்பு கடைக்கு வரமாட்டாராம். இப்பவே அப்பிடி? ஒரு வருசத்தில முந்நூற்று அறுபத்து அஞ்சு நாள் என்று நினைக்கிறேன். அப்புவுக்கு முந்நூறு நாளும் கோயிலில ஏதோ ஒன்று. தை மாதம் தைப்பூசத்தில துவங்கி மார்கழி திருவெம்பா முடியுற வரைக்கும் அப்புவுக்கு முருகையன் கோவிலில அலுவல். கோயில் மணியமாவே பிறந்தவர் மாதிரி. என்னை விட்டால் வேறு ஒரு தரும் செய்ய ஏலாது என்று ஒரு கதை. எங்கட ஊர் சனமும்அப்பிடித் தான். கந்தசஷ்டி எப்பஎன்று பஞ்சாங்கத்தைப் பாராயினம் அப்புவைத்தான் கேட்பினம். அப்புதான் இப்பிடி என்றால் அம்மா என்னபெறும்?விரதம். ஒரே விரதம் தான். பங்குனி உத்தரம், சித்திரைப்பொங்கல் வைகாசி அம்மன் திருவிழா. ஆனியில சந்நிதி, ஆடியில நல்லூர், ஆவணியிலமாவிட்டபுரம், புரட்டாதி வல்லிபுரம், இப்பிடியே வருசம் பன்னிரண்டு மாதமும் விரதம். மச்சம் என்றதைக் கண்ணாலும் காண ஏலாது.

சைக்கிளில ஏறி அதைமிதிக்கிறன். எனக்கென்று இந்தஉலகத்தில இரண்டு பொருள். ஒன்றுஇந்ததிறப்புக்கோர்வை. மற்றது இந்தச் சைக்கிள். சைக்கிளா அது காண்டில், பார் எல்லாம் ஒரேநிறம்.எடுக்கிறபோது கறுப்போ சிவப்போஎன்று.சொல்லமுடியாது. அப்பு கதைக்கேக்கை அந்த காலத்து "றலி" என்று பெருமையாகச் சொல்லுவார். ஒரு நாள் எங்கட பூனை கிணற்றுக்கை விழுந்து செத்துப்போச்சு. அப்பு அந்தப் பூனையைப் பற்றி பெரிசா சொல்லி, அந்தக் கிணறு கட்டினது எப்பிடி என்றதையும் விலாசமாகச் சொல்லிப்பெருமைப்பட்டவர். கோயில் முடக்காலை திரும்புறபோதுகோயிலைப்பார்த்து மனதுக்குள்ளே கும்பிட்டன். கோயிலடியில ஆட்கள் வீதியைக் கூட்டுகினம். சூரன் தண்டிகையை வெளியில வைத்து தூசி தட்டுகினம். சூரனின் தலைகளையும் துடைக்கினம். ஓ! இண்டைக்கு சூரன் போர். பின்னேரம்சூரன் ஆட்டுவினம். பார்க்கநல்லா இருக்கும்.அப்பு தான்முன்நின்று நடத்துவார். சூரன் ஆட்டுகிற நேரம் அப்பு ஓடி ஓடி அலுவல் பார்ப்பார். அப்பு சொல்லுற மாதிரித் தான் எல்லாம் நடக்கும்.அப்பு ஓடர் குடுக்க மற்றவை ஓடி ஓடிச் செய்வினம். சரியா யுத்த களத்திலே கொமாண்டர் மாதிரி. வாக்கி டோக்கிதான் இல்லை.

கடை வாசலில இறங்கி, சைக்கிளை ஓரமாவிட்டு, பையைக் கழற்றிக் கொண்டு சந்தைக்குள் போறன்.வாசல் சுவரில ஒரு நோட்டீஸ். என்னது? முருகையன் கோவில் சூரன் போர்.மூன்று மணிக்கு க.சிதம்பரம் "கந்தர் அநுபூதி" என்ற விஷயமாக பிரசங்கம். நாலு மணிக்கு சூரன் போர். அப்புவின் வேலைதான். கோவில் வருமானத்துக்கும் ஒரு செலவு. கீழே அப்புவின் பெயர் பெரிய எழுத்தில. ஆனால் புதியதமிழில பரிபாலனசபைத் தலைவர்திரு. தி.முருகேசு.அப்புவின் பேரை வாசிக்க வே உருளைக்கிழங்கு நெறுக்கிற மாதிரி ஒரு சினம். கடைக் கம்பியை இழுத்து, தறாங்கை தட்டி, பலகைகளை கழட்டி, கடையைக் கூட்டி, மஞ்சள் தண்ணி தெளித்து, சாம்பிராணி காட்டி, சுவாமிக்கு பூ வைத்து, வழக்கமான வேலை நான் படிக்கேல்லையே தவிர கடை வேலை எல்லாம்அத்துப்படி. ஒரு கிலோ உருளைக் கிழங்கை நெறுக்காமல் எடுத்துக் கொடுப்பன். கூட, குறை என்றால் படிதான் பிழை. நான் அல்ல. அப்பாச்சியே சொல்லுவ "குஞ்சு நீ படிச்சிருந்தால்பெரியாளாவருவாய்" எண்டு. நான் எப்பிடியும் பெரியாளா வருவன்தானே. அவ ஏன் சொன்னா? நான் ஐஞ்சாம் வகுப்பு வரையும் படிச்சனான். பிறகு இல்லை. ஏன் என்று எனக்கு தெரியும். அஞ்சாம் வகுப்பு படிக்கேக்கை எனக்கு செங்கமாரி வருத்தம் வந்து பிறகு மங்கமாரியாக்கிப் போச்சு. அப்பு செய்யாத இங்கிலீஸ் வைத்தியம் இல்லை. அம்மா வையாத ஒப்பாரியும் இல்லை.அப்பாச்சிவேண்டாத தெய்வமும் இல்லை. கடைசியாக அப்பாச்சி எனக்கு நேர்த்தியும் வைச்சு, அரியாலைச் சின்னத்தம்பி பரியாரியிடம் கொண்டுபோய்வைச்சிருந்தவ. அப்பாச்சி தான் என்னோடை நிண்டவ. சின்னத்தம்பி பரியாரியாரின் பட்டைக் கஷாயம், சூரணம், எண்ணெய் என்று ஆறு மாதம் ஒரே மருந்து மக்கட்டு. நான்ஒரு வலிச்சசீவன். தப்பியே விட்டேன். அப்பாச்சியின் நேர்த்தியோ, சின்னத்தப்பி பரியாரியாரின் மூன்று தலைமுறை வைத்தியமோ, நான் தப்பி விட்டேன். என்னைத் தவிர மற்ற எல்லோருக்கும் பெரிய சந்தோஷம். ஆறு மாதம் எனக்கு ஆறு வருசம் மாதிரி.வருத்தம் மாறியும் வருத்தக்காரன் என்ற பெயரோடு வீடு வந்து சேர்ந்தேன்.ஆறுமாத மருந்தோடை வருத்தம் என்ன தோற்றமும் மாறிப்போச்சு. கண்ணாடியில் பார்த்தன். எனக்கே ஒரு மாதிரியாகிப் போச்சு. ஊமல் காயை தடியில கொழுவின மாதிரி ஒரு தோற்றம். நெஞ்செது, வயிறெது என்று தெரியாத ஒரு உருநாடு. ஆறு மாதம் படிப்பு போய் பிறகும் அஞ்சாம் வகுப்பே. கஷ்டம் தான் பள்ளிக்கூடத்தில பொடியள், என்னைப் பகிடி பண்ணுவினம். பேசாமல் நிண்டிட்டிட்டன். கொஞ்ச நாள் வீட்டில. பிறகு அப்புவுக்கு உதவி செய்ய என்று கடைக்குப் போய் பிறகு எனக்கு கடையும் அப்புவுக்கு கோயிலுமாகிப் போச்சு.

சந்தையில சனம் குறைவு. இண்டைக்கு உபவாசம். பாறணைக்கு சாமான் வாங்கிற சிலபேர். வியாபாரம் அதிகம் இல்லை. இண்டைக்கு இப்பிடித்தான். தேத்தண்ணி எடுப்பம். கடையில ஆரை விட்டிட்டு போவம்? முந்தியெண்டால் குணம் எடுத்து வருவன். குணம் இப்ப இல்லை. அவன் இயக்கத்துக்கு போட்டான். குணம் காலியில கடையில நிண்டு, எண்பத்தி மூன்று கலவரத்துக்கை இவன் மட்டும் தப்பி கப்பலில வந்தவன். கொஞ்ச காலம் எங்கட கடையில நிண்டவன். பிறகு ஒரு நாள் இயக்கத்துக்கு போறன், என்று சொல்லிப் போட்டான். எப்பவாவது வருவான். "குஞ்சு, அடிபாட்டுக்கு போறன். வீரனா வருவனோ, மாவீரனா வருவனோ தெரியாது. உன்னைப் பாத்திட்டுப் போவம் என்று வந்தனான்' என்று சொல்லுவான். அவனைக் காண எனக்கு ஆசை. யூனிபோம் போட்டு, மிஷின் கண்ணும் கொண்டு சிமாட்டா நடந்து வருவான். ஆமி யூனிபோம் அவனுக்கு நல்ல வடிவு, எனக்கு...! எப்பிடி? தெரியாது. நான் போடேல்லை. குணமும் ஆமி தானே. எங்கடைஆமி இந்தநெல்லியடிச் சந்தியில எத்தனை இந்தியன் ஆமி..! சிங்கள ஆமி களை நான் கண்டிருக்கிறன். ஆனால்இந்தக் குணம் ஒரு வித்தியாசமான ஆமி. தோற்றம் சின்னன் உசார் கூட. சென்ற் போத்தல் மாதிரி. சின்னப்போத்தல் - வாசனையும் - விலையும் கூடத்தானே! இந்தியன் ஆமியும் - சிங்கள ஆமியும் - குணமும். ஒப்பிட்டுப் பாக்கிறன். கடையில சம்பளத்துக்குநிற்கிற ஆட்கள் மாதிரி அந்த ஆமிகளும் கடைச் சொந்தக்காரன் மாதிரி குணமும். பெரிய வித்தியாசம் தான்,

மாரியப்பன் கடையில ஈழநாதத்தை இரவல் வாங்கினன். எனக்கு பேப்பர் பார்க்க வேணும்.நான்புத்தகம்படிக்கேலையே தவிர பேப்பர் படிச்சனான். எங்கடை கடையில சாமான்வாங்கிறஎல்லார் வீட்டுஇறப்பில செருகி இருக்கிற கடதாசி துண்டுகள் எல்லாம் நான் வாசிச்சது தான். காசு குடுத்துப்பேப்பர் வாங்கினால் அப்பு நெருப்பெடுப்பார், இரவல் தான். தலையங்கம் வலுசூடாக இருக்கு "வளலாய் பக்கமாக ஆமி நகரத் திட்டம் - புலிகள் எதிர்கொள்ளத் தயார்".

எனக்கு விளங்குது. ஒரு அடிபாடு இருக்கு. எனக்கு மிளகாய்ச் சாக்கை உதறிய மாதிரி ஒரு எரிச்சல், எனக்கு ஒரு வித நடுக்கம், சினம்... எல்லாம். குணமும் போவன் தானே. குணம் மாதிரி எத்தனை குணம்கள். சிங்கள ஆமியை முன்றே விடக் கூடாது. எனக்கு குணம் மாதிரிச் சுடத் தெரியாது. இருந்தாலும் வாற கோபத்துக்கு இரண்டு கிலோ படிக் கல்லாலை சிங்கள ஆமிக்கு மூஞ்சையில அடிப்பன். உவங்களைத் துரத்த வேணும். இல்லையெண்டால் எங்களைத் துரத்துவங்கள். முந்தி "லிபரேசன் ஒபரேசன்"க்கு ஓடினது மாதிரி நாங்கள் வரணிக்கும் வவுனிக் குளத்துக்கும் இனியும் ஓடுறதே.

றோட்டிலை ஏதோ பரபரப்பு. என்ன அது? மேசை லாச்சியைப் பூட்டி திறப்பை எடுத்துக் கொண்டு றோட்டுக்கு ஓடுறன். ஒரு சேனை சனம். றோட்டிலை ஒரே வாகனங்கள். எல்லாம் பொடியங்கட ட்ரக்குகள். ஒரு சேனை ஆயுதம். கன பொடியன்கள், பெட்டையள் வரிசையிலை போகினம். ஓ ! பேப்பர் தலையங்கம் உண்மையோ?! பெரிய அடிபாடு இருக்கு போல .. திடீரென்று ஒரு ட்ரக் பிறேக்கடிச்சு நிற்குது. ஒரு பொடியன் ட்ரக்கிலிருந்து குதிக்கிறான். ஆ ! குணம். கடைக்குத் தான் வாறான்.குணம்ஓடி வந்தான் அவன் கண்களில் ஒரு வித வெறி - இரண்டில் ஒன்று பார்க்கிறன் என்றொரு வேகம். ஓடி வந்தவன் பெரிசா மூச்சு விட்டான். மூச்சே சுடும் போலை. சாம்பிராணித் தட்டு மாதிரி அவன் மனம் புகையுது போல அவசர அவசரமாக சொன்னான்.

"குஞ்சு அடிபாட்டுக்கு போறன். எப்ப அடிபாடு என்று தெரியாது. இண்டைக்கு நாளைக்கு எந்த நேரமும் நாங்கள் தயாராக இருக்கிறம். பெரிய யுத்தத்துக்கு நாங்கள் ஆயுத்தப் படுத்துறம். உன்னை பார்த்திட்டு போக வந்தனான். நான் வாறன்".

"குணம் கொஞ்சம் நில்லு" நான் கடையுக்கை ஓடிப்போய் கையிலை அம்பிடுறதை எடுத்துக் கொண்டு அவனுக்கு பின்னால ஓட வேணும் போல ஒரு வேகம். சுவாமி படத்தில இருந்த சந்தனக் குப்பியை எடுத்து வாறன். குணத்தின் நெற்றியிலை ஒரு பொட்டு வைச்சன். அவன் கண்கள் மின்னியது.

"குணம் .. உனக்கு மட்டுமே உன்னைப் போல எத்தனை ஆயிரம் குணம்கள் .. எல்லோருக்கும் பொதுவில உனக்கு பொட்டு வைக்கிறன் தெரியுமே"

நான் தான் சொன்னன். உப்புச் சாக்கு உவனித்தது மாதிரி அவன் கண்கள் உவனிப்பது தெரியுது. குணம் போனான் - போட்டான் அல்ல.

திருப்பிக் கடைக்கு வாறன். மனம் சரியில்லை. புளி மூட்டை கனத்தது மாதிரி மனம் கனதியாய் இருக்கு, தராசுத் தட்டுக்கள் மாதிரி மனம் ஊசலாடுது. என்னது? .. ஏன் அப்பிடி? ஏதோ ஒரு அநியாயம் எங்கையோ நடக்குது?... எங்கை?... ஆ... பிடிபடுகுது. இது தான்... குணமும் குணத்தின்ரை ஆட்களும் ஒரு போருக்கும்ஆயத்தப்படுத்துகினம்.

அப்புவும் அப்புவைப் போலை ஆட்களும் சூரன் போருக்கு ஆயத்தப்படுத்துகினம்.

குணம் உண்மையான ஒரு போருக்கும் - அப்பு எப்பவோ நடந்ததாம் ஒரு பொம்மைப் போருக்கும் தயாராகினம்.

உயிரைக் காக்க போராட ஆயத்தம் பண்ண வேண்டிய மக்களை அப்பு திசை திருப்புகிறார். போராட்ட உணர்வை -பக்தி உணர்வாக மாற்றிக் காட்டுகிறார்.

சிங்கள அசுரர்களுக்கு முன்னுக்கு இளம் முருகன்கள் போராடப் போகிறார்கள்.

அப்பு மரச்சூரனுக்கு முன்னுக்கு சுவாமியை விட்டு நடித்துக் காட்டப் போகிறார். பீரங்கி முழக்கத்திலே குணம் போராடுற நேரம்-பறைமேள முழக்கத்திலே அப்புகள் சதிராடப்போகினம். விடப்பிடாது. . . . விட மாட்டன். இண்டைக்கு சூரன்போர் நடக்க விடமாட்டன். என்ன செய்வம்? என்ன செய்யிறது . . ? அப்புவுக்குச் சொல்லுவமோ? வேண்டாம் அப்பு சன்னதம் ஆடுவர். அது பிசகு, கனகம்மான் வேண்டாம். அவர் சரி வரார், சின்னண்ணன் அதுவும் வேண்டாம், ஆருக்குச் சொல்ல . . ? எனக்கு ஒரு பதற்றம். கச்சான் தின்டிட்டு தண்ணி குடிக்காத மாதிரி ஒரு தவிப்பு. ஆருக்குச் சொல்ல..?

கடையைப் பூட்டி திறப்பை பையில போட்டுக் கொண்டு சைக்கிளில ஏறுறன். சைக்கிள்
(17 ஆம் பக்கம் பார்க்க)

மூன்றாவது


மூன்றாவது ஆண்டை நிறைவு செய்யும்

# ஈழநாதம் தினசரிக்கு

எமது நல் வாழ்த்துக்கள்

வரும் ஆண்டுகளிலும் அதன் பணிசிறப்புற எமது வாழ்த்துக்கள்

தரம் குன்றாத் தங்கத்திற்கு தவறாதுநாடவேண்டிய இடம்:



# நியூ லலிதா ஜுவல்லறி

( தங்கப் பவுண் நகை வியாபாரம் )

74/1, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

(சி-5966)

நாலாவது ஆண்டுக்குள் நுழையும்


# ஈழநாதம் தினசரிக்கு

நம் நல் வாழ்த்துக்கள்

நகையுலகில் நம்பிக்கையுடன்

நாடவேண்டிய இடம்:

# ராதிகா ஜுவல்லர்ஸ்



( தங்கப்பவுண் நகை வியாபாரம் )

222, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

(சி 5967)



# சிறுகதை

# புதிய பேர்களுக்காய்...

வசந்தன்

காற்று ஊளையுடன் வீசியடித்தது. இரண்டு வருடங்களாக வேயப்படாத கூரையை ஒரு தரம் தூக்கிப் போட்டது. பின் சரசரத்தது. இருள். படர்ந்து நெஞ்சை அழுத்தும் இருள்.

நடுச்சாமம் கடந்து விட்டது. கிழவி படுத்திருந்தாள். விழிகள் திறந்திருந்தன. சுருங்கிய ஓரங்களில் ஈரப்படுகை. புதிதாயும், காய்ந்தும்.

மனம் வெறுமையாக இருந்தது. சோகமான வெறுமை. விழிகளை வெட்டியும், திறந்தும், அகட்டியும் எதையோ தேடினாள். இருள். இருளுக்குள் தேடுவதால் என்ன கிடைக்கப் போகிறது!

காற்று படலையில் மோதியது. 'சடக்' என்ற சத்தம். படலை அசைந்து நின்றது.

'அப்பு வந்திட்டுதோ' கிழவி பதைத்துப்பதறி எழுந்தாள். எதுவுமில்லை. வாய் முணுமுணுத்தது. இல்லை அழுதது. படலையை விலக்கி வெளியில் பார்த்தாள்.

நிழலாக அசைவதுபோல...கண்களை வெட்டி வெட்டிப் பார்த்தாள். இல்லை. எதுவுமேஇல்லை. சோர்ந்து போனாள். கால்களை மடித்து குந்தி இருந்தாள்.

சிவப்பிப் பசு அழுதது; அவலமாக. அது தாயைத் தேடுது அல்லது அதுவும் கிழவனைத் தேடுதாக்கும். தெரியவில்லை. ஆனால், இரவுக்கு கொடுமையான அவலச் சத்தம்.

கிழவி அப்படியே இருந்தாள். இனி அவள் சரியமாட்டாள்; விடியும் வரைக்கும்.

நினைவுகளின் பாரம் நெஞ்சை தாங்க முடியாமல் அழுத்தும் போது மட்டும் அழுவாள். அமைதியை குலைக்கும் மெல்லிய குரலில் ஒப்பாரி; அந்த இருளுக்கு பயமூட்ட.

''என் ராசாதி ராசா நீ என்னை விட்டு எங்க போனாய் ஓடோடி வாராயோ... என்னட்ட வாராயோ'' இடையிடையே விம்மி விழுங்கினாள். அழுதாள். அது அப்புவின் வரலாறு; அவளுடையதும் தான்.

★ ★

கிழவனுக்கு கிழவி; கிழவிக்கு கிழவன். இதைத் தவிர வேறில்லை. இதுதான் உறவு, உலகம், வாழ்க்கை எல்லாமே.

மண் குடிசை. பின்பக்கமாக தோட்ட நிலம். இப்போது புதர் மண்டி காய்ந்து வரண்ட நிலம். இரண்டு பசுக்கள்.

வெள்ளைச்சிப்பசு ஆச்சிக்கு பிள்ளை மாதிரி. இல்லை, பிள்ளைதான். நீண்டகாலமாக நிற்கிறது. சிவப்பி அதனுடைய கன்று. மற்றும்படி வாழ்க்கையின் பிடிமானத்துக்கு எதுவுமே இல்லை.

பல வருடங்களுக்கு முன்னம் அப்படி ஒரு பிடிப்பு இருந்ததாக ஞாபகம் இருக்கிறது. அது மகன் இருக்கையில்.

நல்ல முத்துக் கிழவர் அந்த ஊரில் நெஞ்சு நிமிர்ந்து வாழ்ந்தவர். எண்பத்தெட்டு எண்பத்தொன்பது வயது. இதுவரை நாளும் ஒருவரிடமும் கைநீட்டி அறியாத மனிதர்.

அவர்களின் வாழ்வுப் பிடிப்பெல்லாம் மகன்தான். அவன் நல்லவன். அப்படித்தான் ஊரவரும் சொன்னார்கள். அந்தக் கிராமத்திலிருந்து முதன் முதலாக அவன்தான் மேற்படிப்புக்காக கொழும்புக்கு போனான். அங்கேயே வேலையும் கிடைத்து விட்டது.

தான் கோயிலுக்கு போட்ட பூவினால்தான் மகனுக்கு எல்லாமே நல்லதாக நடக்கிறதென, கிழவி நினைத்தாள். கிணற்றடிப் பிள்ளையாருக்கு பொங்கிப் படைத்தாள்.

அதன் பின்பு, மகன் அந்தக் கிராமத்திற்கு வருவதில்லை. புழுதிபடிந்த அந்தப்பட்டிக்காட்டுக்கு வர அவனுக்கு விருப்பமுமில்லை.

ஓர் அறுவடைகாலம். வெயில் தெறிச்சுக் கொண்டிருந்த காலை நேரத்தில் தபாற்காரன் கடதாசியை தந்துவிட்டுப் போனான்.

'மகனுக்கு கல்யாணம் முடிஞ்சுதாம்'

கிழவிக்கு நெஞ்சில் அடித்தமாதிரி இருந்தது. தேகம் சிலிர்த்தது. கண்கள் கலங்கியது. நம்ப முடியாமல் திரும்பத் திரும்பக் கேட்டாள். கண்களில் நீர். அது ஆனந்தக் கண்ணீர் அல்ல; நெஞ்சில் பட்ட காயத்திலிருந்து வடிந்த இரத்தம். ஏதாவதாகவும் இருந்திட்டுப் போகட்டும். அதுஇப்போது முக்கியமல்ல. கிழவி பூப்பறித்துக்கொண்டு பிள்ளையாரிடம் போனாள்.

காலம், ஒரு குதிரையைப் போல நாலுகால் பாய்ச்சலில் எத்தனை வேகமாகப் பாய்கிறது! அந்தக் கிராமத்தில் இருபத்தைந்து வருடத்துக்கு பிந்திய எல்லாப் பிறப்புகளுக்கும் கிழவரின் மகனின் முகம் தெரியாது. மற்றவர்களும் அவனது முகத்தை மறந்துபோய் விட்ட நேரத்தில்தான், அவனதுசாவுச்செய்தியும் வந்தது. கிழவி உடைந்து போனாள். கிழவர் ஆரம்பத்தில் தாங்கிக்கொண்ட மாதிரி இருந்தார். அல்லது பாவனை செய்தார். சில நாட்களில் தொய்ந்து போனார். அதுநடந்து கூட இப்போது பத்துவருடங்கள் கடந்துவிட்டன.

அதன் பின்புதான், கிழவரும் கிழவியும் நன்றாகத் தளர்ந்து போனார்கள். கூன் விழுந்து பார்வை மங்கிவிட்டது. தசைகள் உருகிப்போய் என்புக்கும் தோலுக்கும் மிக நெருக்கம் வந்துவிட்டது. நடையில் நிதானம் இல்லை,

இந்தப் பத்து வருடத்தில் கிராமமும்தான் எப்படி எல்லாம் மாறிவிட்டது!

இருந்திருந்தாற் போல் தூரத்திலும், கிட்டத்திலும் குண்டுகள் விழுந்து வெடிக்கும். அது எப்போதென்று யாருக்குத் தெரியும்? காற்றில் வெடிமருந்து வாடை நிரந்தரமாக கலந்து மூச்சைமுட்டும். முன்பு எப்போதாவது எழுந்த அழுகுரல்கள் இப்போது தினமும்..

குடிசனத்தில் அரைவாசியைக் காணவில்லை. அவர்கள் எங்கோ தூரத்திற்கு போய்விட்டார்கள். சுடலைக்குப் பக்கத்தில் குடியிருக்க யாராலதான் இயலும்? பேய்களுக்கு அருகில் சீவியம்நடத்த எவரால்தான் முடியும்?

மனிதரின் உறவு விடுபட்டுப்போன நிலம், வரண்டு புழுதிபறக்கத் தொடங்கிவிட்டது. இரவுகள் மிகக்கொடியன. பொதுவாகவே இரவுகளில் பேய்களின் அட்டகாசத்திற்கு குறைவிருப்பதில்லை.

இப்போதெல்லாம், பாழடைந்த அந்த வீதிகளில் இளைஞர்கள் சிலர் அங்கும் இங்கும் செல்வார்கள். தோள்களில் துப்பாக்கிகள் தொங்கும். முகங்களில் அமைதியும், களிப்பும் பொங்கும்.

சில நேரங்களில், வாசலில் நிற்பார்கள் சிரிப்பார்கள். அமைதியான, ஆளைமயக்கும் சிரிப்பு.

''எப்பிடி ஆச்சி'' என்பார்கள். கிழவி அருகில் போவாள். கண்களை வெட்டி உற்றுப்பார்ப்பாள். பின்பு சிரிப்பாள். பற்கள் விழுந்து போன முரசு வெளித்தெரியும். கன்னங்களும் அகன்று சிரிக்கும்.

''எங்க மோனை போறியல்'' என்பாள்.

''பொயின்டுக்கு'' என்பார்கள். பின்பு போய் விடுவார்கள். கிழவி பார்த்துக்கொண்டே நிற்பாள். தன்னுடைய கடைசிப் பேரப்பிள்ளையும் இப்படித்தான் இருப்பான் என நினைப்பாள். பின்பு பூப் பறித்துக்கொண்டு கிணற்றடிப் பிள்ளையாரிடம் போவாள்; புதிய பேரர்களுக்காய்.

அவளுக்குத் தெரியும், அந்த இளசுகள் காவல் கடவுள்கள் என்று. அவர்கள் பேய்களுடன் சண்டையிடுவார்கள். பேய்கள் ஒருபோதும் வெற்றியடையக் கூடாது. அவளுக்கு வயது நன்றாகப் போய்விட்டது. ஆனாலும் இவ்வளவு காலத்தில் ஒருமுறைகூட அவள், பேய்கள் வென்றதாக கேள்விப்பட்டதில்லை.

அந்த இரவு, வழமைக்கு மாறாக அமைதியாக இருந்தது. காற்று மரங்களைத் தடவவில்லை, விளையாடவில்லை. கிழவரும் கிழவியும் வாசல் திண்ணையில் உறங்க முயன்றனர். முடியவில்லை.

நடுச்சாமம். ஊர் உறக்கத்தில். அமைதியைச் சிதைத்துக்கொண்டு திடீரென குண்டொன்று விழுந்ததிர்ந்தது. நெஞ்சங்கள் அதிர்ந்தன. தொடர்ந்து அடுத்தடுத்துக் குண்டுகள் வெடித்ததிர்ந்தன.

காற்றெங்கும், வெடிமருந்து நாற்றம்; அவலம் நிறைந்த கூக்குரல்கள்.

வெடிச்சத்தங்களும், வண்டிகளின் உறுமல்களும் நெஞ்சை வெருட்டின. ஊர் கலவரப்பட்டது.

''வாறான்கள், வாறாங்கள், ஓடுங்கோ'' சனங்கள் ஓடினர். கிழவரும், கிழவியும் எழுந்து ஓடினார்கள். முன்னாலும் பக்கங்களாலும் சனங்கள் ஓடினர்.

''ஆச்சி, வாறியேணை'' கிழவர் கேட்டுக் கொண்டு ஓடினார்.

''ஓம், ஓம், நீங்கள் நடவுங்கோ'' கிழவி இரண்டு மூன்று தரம் பதில் சொன்னாள்.


ஓட்டம் இருளுக்குள் முடிவைத் தேடி ஓட்டம். வெடிச்சத்தங்கள் விலகி பின்னால் கேட்டன. கிழவர் நிதானமாக நின்றார். சுற்றிவரப் பார்த்தார். எவரும் இல்லை. விளங்காத கடுமையான இருட்டு. அவர் மட்டும் தனிய... 'பாதை எப்படி மாறினது. சனங்கள் எங்க, கடவுளே! ஆச்சி எங்க' ''ஆச்சி'' அழைத்தார். குரலில் தடுமாற்றம்; தேடலின் அவலம். பதிலில்லை.

''ஆச்சி நிக்கிறியே?'' கிழவர் திரும்பினார். ஏதோ தடுக்கி விழுந்தார். தட்டுத் தடுமாறி எழுந்தார். தேகம் நடுங்கியது. பதறியது.

''ஆச்சி நிக்கிறியே?'' குரல் தளுதளுத்தது. அழுதது. கிழவர் திரும்பி நடந்தார். ஓடினார். ''ஆச்சி, ஆச்சி'' மெல்லிய குரலில் விம்மலும் விழுங்கலுமாக அழுகை வெளிவந்தது. வெடிச் சத்தங்கள் ஒய்ந்து அமைதி. இருள். கிழவர் நடந்தார். ஓடினார்; முடிவில்லாத இருளுக்குள்.

★ ★

பள்ளிக்கூடம். அந்த இரவின் தற்காலிக தங்குமிடம்; அகதி முகாம். அவர்கள் படுத்திருந்தார்கள். உறங்கவில்லை. உறக்கம் வரப்போவதும் இல்லை. ஆச்சி ஒரு மூலையில் குந்தியிருந்தாள். மனம் கலவரப்பட்டுக் கொண்டிருந்தது.



''அப்பு, வந்திட்டாரே'' என சத்தமாக இடை இடையே கேட்டாள்.

''அப்பு வந்திருப்பாராச்சி, வேறெங்கயாவது நிப்பார். விடியப் பாப்பம்'' - யாராவது கிழவிக்கு பதில் சொல்வார்கள்.

ஆச்சிக்கு நம்பமுடியாமலிருந்தது. மனம் ஆறுதலடைய மறுத்தது. சற்று நேரம் கழித்து மீண்டும் கேட்டாள்.

''அப்பு வந்திட்டாரே''

''இல்லை ஆச்சி, அவர் வந்திருப்பார். வேறெங்கையாவது நிப்பார். படுங்கோ, விடியப் பாப்பம்'' திரும்பவும் அதே பதில். ஆச்சி விழித்தே இருந்தாள். மனம் அழுதது. கண்களில் நீர் முட்டி வழிந்தது.

விடிந்ததும் அப்புவைத் தேடினாள். காணவில்லை. 'பிரச்சினை இல்லையாம்' என ஊருக்கு சனம் நடந்தது. ஆச்சியும் நடந்தாள். கலவரம் நிறைந்த பதற்றமான பாய்ச்சல்.

வீட்டுக்குள் நுழைந்து பார்த்தாள். அப்புவைக் காணவில்லை. மனம் சஞ்சலப்பட்டது; அழுதது. வெளியில் வந்து பின்னுக்கு போனாள்.

வெள்ளைப் பசு சரிந்து கிடந்தது. நிலத்தில் இரத்தம் வெள்ளம் போட்டிருந்தது. ஆச்சி ஏங்கிப்போனாள். கதறி அழுதாள். வெள்ளைப் பசு அவளுக்குப் பிள்ளை மாதிரி. திரும்பி அப்புவைத் தேடினாள். காணவில்லை.

★ ★

அன்று தொடக்கம்தான். ஆச்சி இப்படித் தனித்துப் போனாள்.

விடிந்தால் திண்ணையில் வந்து இருப்பாள். வீதியில் வரும் ஒவ்வொரு மனிதர்களையும் உற்

(18ஆம் பக்கம் பார்க்க)

நாட்டின் நடப்புகளை நமக்கு
எட்டச் செய்திடும் பணியில்
வீறுடன் வெற்றிநடை போடும்
ஈழநாதமே உன்னை வாழ்த்துகிறோம்

★ நியூ ஸ்ரான்லீஸ் ★

'டியூகோ', டியூலக்ஸ், பென்ரலைற், பெயின்ற் வகைகளுக்கு
உத்தரவுபெற்ற வியாபார நிறுவனம்
95/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-5995)

நம்பிக்கையான செய்திகளை
நயமுடன் எடுத்தியம்பும்
எம் அபிமான தினசரியே
வாழ்த்துகின்றோம் உன்பணியை

ரூபி நகை மாளிகை
111/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/5993)

வைகறையில் துயில் எழுப்பும் சேவலென
தாயகத்தின் விடியலுக்காய் குரல் கொடுக்கும்
"ஈழநாதமே"
உன் பணிதொடர வாழ்த்துகின்றோம்.

பொஸ்கோ
இல. 3, மருத்துவமனை வீதி.
யாழ்ப்பாணம்.
(சி/5990)

நான்காம் ஆண்டில் காலடி பதிக்கும்

ஈழநாதத்திற்கு

எமது மனமகிழ்ச்சியான வாழ்த்துக்கள்



தரமான இமிற்ரேசன் கோல்ட்கவறிங் நகைகள்
வெளிநாட்டு, உள்நாட்டு
அழகுசாதனப் பொருள்களை
நிதான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

ஜெயா அழகுசாதன மாளிகை

177A, மின்நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/5968)

கிளை:
ஜெயா பென்சி ஹவுஸ்
160, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

மூன்றாவது
அண்டு நிறைவுச்

# வெகுஜனத் தொடர்பு அமைப்பும் மரபுவழித் தொடர்பும்

சமூகத்தின் வளர்ச்சிக்கும் அது நிலைத்து நிற்பதற்கும் தொடர்பு மூலாதாரமானது. பேபிள் கோபுரம் போன்று ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்வதில் குழப்பமான சூழ்நிலை நிலவுமானால் சமூகவாழ்வு சாத்தியமாகாது. சமூகத்தில் வாழ்வுக்கும், வளத்துக்கும் தொடர்பு கொள்ளும் மூலங்கள் இன்றியமையாதவைகளாக கருதப்படுகின்றன.

வளர்ச்சி அடைந்த நாடுகளின் முன்னேற்றமடைந்த வெகுஜனத் தொடர்புச்சாதனத் தொழில் நுட்பம் 3ஆம் உலக நாடுகளில் பாதிப்புக்களை உருவாக்கியுள்ளன. வெகுஜனத்தொடர்புச்சாதனத்துறையில் (MassCommunication) வளர்ச்சியடைந்த நாடுகளில் நவீன மயப்போக்கிற்கு ஈடாக மூன்றாம் உலகநாடுகளில் தகவல் தொடர்புச் சாதனங்கள் வளர்ச்சியடையவில்லை. இதனால் மூன்றாம் உலகநாடுகளில் தகவல் தொடர்புகள் பின்தங்கிய நிலையில் உள்ளன என்று பொதுவாக நம்பப்படுகிறது. இந்தக் கருத்து அபத்தமானது. எமது பார்வையில் தகவல் தொடர்பு என்றவுடன் நவீன வெகுஜனத் தகவல் தொடர்புச் சாதனங்களை மையப்படுத்துகிறோம். ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் தகவல் தொடர்பு ஆற்றல்மிகு சாதனமாக இன்றுவரை நிலவி வருகிறது என்பது உணரப்படவில்லை. செய்தித்தாள், வானொலி, தொலைக் காட்சி, செய்மதித் தகவல் போன்ற நவீன தொடர்புச் சாதனங்களின் எதிர்ப்புச் சூழலின் மத்தியிலும் மரபார்த்த தகவல் தொடர்பு முறை எதிர் நீச்சல் போட்டு வந்திருக்கிறது.

## மரபும் மனித ஊடாட்டமும்

1940களில் இந்திய சுதந்திர இயக்கம் மக்கள் இயக்கமாகப் பரிணமித்த காலத்தில் மகாத்மா காந்தியும், சீனாவில் விடுதலைப் போராட்ட காலத்தில் மா-சே-துங்கும் படிப்பறிவில்லாத கோடிக்கணக்கான மக்களுடன் தொடர்பு கொண்டனர். நவீன பத்திரிகைத் தொழில் நுட்பம் இந்தியாவிலும், சீனாவிலும் ஆரம்ப நிலையில் இருந்தகாலம் அது. எவ்வாறு இந்த ஊடாட்டம் சாத்தியமாயிற்று? இந்தியாவில் ஒரு முறையாகத் தொடர்ந்து வந்த மரபுவழித் தகவல் தொடர்பு முறை இதற்கு வழி வகுத்துக் கொடுத்திருக்கிறது. கிராமங்களில் மக்கள் மதித்துப் பாராட்டும் தகுதியும், சிறப்புடைய உயர் குழாத்துடன் மகாத்மா காந்தி கொண்டிருந்த உறவுகளின் மூலம் தன் கருத்துக்களை வெளிக்காட்டிக் கொண்டார். சீனாவில் மா-சே-துங் சராசரி அறிவும், அரசியல் ஞானமும் உள்ள கட்சித் தோழர்களை மக்களுக்கும் கட்சிக்கும் இடையிலான ஊடகமாக உபயோகித்தார். ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளும் (Inter personal Communication) உறவுகள் தவிர வேறு எந்த விதமாகவும் மா-சே-துங்கும், காந்தியும் வெற்றிகரமாகச் செயல்பட்டிருக்க முடியாது.

இத்தகைய ஒரு பலத்தபாரம்பரியமான ஓர் தளத்தில், ஓர் இலக்கினை நோக்கி காந்தியும், மா-சே-துங்கும் தகவல் பரிமாற்றத் திட்டத்தை வகுத்தனர். இரு நாடுகளிலும் சமூக பொருளாதாரப் பகைப்புலம் ஒத்த தன்மையுடையதாய் இருந்ததால், மா-சே-துங் காந்தி ஆகிய இருவரினதும் அணுகுமுறையின் குணவிசேஷங்கள் ஏறத்தாழ ஒரே மாதிரியாக அமைந்தன. இருவரினதும் தகவல் பரிமாற்றமுறையில் பல பரிமாணங்கள் இருந்த போதிலும், மூன்று அம்சங்கள் பெருமை பெற்று இருக்கின்றன.

— நாட்டிலுள்ள தகவல் மூல வளங்களைப் பயன்படுத்தித் தகவல் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. தொடர்பு மூலங்கள் மக்களோடு தொடர்பு படுத்தப்பட்டன,

— வெகுஜன அமைப்புக்கள் மற்றும் கட்சி அமைப்புக்களின் ஆற்றல் அனைத்தினையும் பயன்படுத்தி தகவல்கள் பரிமாறப்பட்டன.

— சிறு பத்திரிகைகள் உயர் குழாத்தினருக்கும், அறிவுஜீவிகளுக்கும் திட்டங்களைத் தொகுத்துக் கூறின.

இந்தியாவிலும், சீனாவிலும் செய்திப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கக் கூடிய வகையில் பத்திரிகைகளின் பங்குப் பணி இருக்கவில்லை. அத்துடன் சீனாவிலும், இந்தியாவிலும் படிப்பறிவில்லாத மக்களுக்குப் பத்திரிகைகள் நம்பகரமான வழிகாட்டிகளாக அமையவில்லை. காந்தி **யங் இந்தியா நவஜீவா** இதழ்களை நடத்தினார். இவை முறையே 45,000 பிரதிகளும், 20,000 பிரதிகளும் விற்பனையாகின. **ஹரிஜன்** மாத இதழும் வெளியாகியது. நாற்பது கோடி ஜனத்தொகை (அன்று) கொண்ட ஒரு நாட்டுக்கு மேற்படி பிரதிகளின் எண்ணிக்கை கடலில் புளியைக் கரைத்ததற்கு ஒப்பாகும். இத்தகைய பின்னணியில், 1942 இல் ஆங்கில அரசு 96 செய்தித்தாள்களுக்குத் தடை விதித்தது. இதனால், இந்தியாவில் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் உருக்குலைந்தன. இத்தகைய வரலாற்று நிர்ப்பந்த தருணத்தில் மக்களின் வெளிப்பாடு பாரம்பரியமாக அமைந்த மூலங்கள் மூலமே வெளிப்பட்டன. பழமையான தகவல் மூலங்கள் கிராம மக்களின் பொது நிகழ்வுகளை மாத்திரம்தான் வெளிப்படுத்தும் என்பதல்ல. தேச விடுதலை இயக்கங்கள் சார்ந்த உண்மைகள் இந்தியாவில் மரபுவழி வந்த தகவல் பரிவர்த்தனைச் சார்பாலேயே வளர்ந்திருக்கின்றன என்பது இந்திய அனுபவ உண்மை.

ஆனால் தகவல் பரிவர்த்தனையில் மற்றொரு பரிமாணமும் இருக்கிறது. அதைத்தான் நாம் நன்றாகக் கவனிக்க வேண்டும். இது தகவல் பரிவர்த்தனை பற்றியதல்ல. தகவல் நாயகனைப் பற்றியதாகும். தகவல் பரிவர்த்தனையில் காந்தியின் படிமமும் (Image) முக்கியமானதாகக் கருதப்படுகிறது. காந்தியின் கதராடையும், மா-சே-துங்கின் போர்க்குணமும் யதார்த்தக் கருத்துக்களை வலியுறுத்தின. யுத்தப்பிரபுக்களைப் (War Lords) போற்றி வந்த சீனாவில் மா-சே-துங்கின் படிமம் ஏற்புடையதாயிருந்தது.

மதன்

காந்தி போதித்த நீதி நெறிகளும், கதராடையும், கைராட்டினமும் அடிமைப்பட்டுக் கிடந்த மக்கள் வாழ்க்கையில் புனர்ஜீவிக்கப் புதிய பாதையைக் காட்டக் கூடிய 'அவதார'மாக அவரைக் கருதத் தூண்டின.

இந்தியாவைப் பொறுத்த வரையில் காந்தியின் படிமம் தெய்வ சாந்நித்யம் வாய்ந்ததாகக்கொள்ளப்பட்ட போதிலும், எல்லாவற்றிற்கும் மேலாக மரபுவழி வந்த தொடர்பியல் பரிவர்த்தனையே இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு ஒரு காரணமாக அமைந்ததாகக் குசும் சிங் என்ற ஆய்வாளர் கருதுகிறார். தலைவரிடமிருந்து கொள்கை எடுத்துரைப்பாளர், அவரிடமிருந்து சாதாரண கட்சி ஊழியர்கள் மற்றும்படி தலைவர்-மக்கள் நேரடித் தொடர்பே செய்திப்பரிவர்த்தனைக்கு உயிரூட்டியதாக அவர் வலியுறுத்துகிறார்.

## நடைமுறைத் தன்மைகள்

இலங்கைபோன்ற வளர்ச்சியடையாத நாடுகளில் தகவல் சாதனங்களால் கிடைக்கிற பயனைக் காட்டிலும் நேரடித் தொடர்பு உறவுகள் அதிக பயனைத் தருவதாகக் கருதப்படுகின்றது.

மலேசியாவில் ஜோகடார்தொகுதியில் அந்நிய சூழலுக்குப் பழக்கப்பட்ட ஒருவர் மேற்கத்திய தகவல் தொடர்புச் சாதன உதவியுடன் தேர்தலில் போட்டியிட்டார். அவரால் பெரும் பணச் செலவின் மத்தியிலும் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை. ஆனால் எதிர் வேட்பாளர் மரபு வழித் தகவல் என்னும்அமைப்புக்கு வெளியே வந்து விடாமல் தேர்தலில் ஜெயித்தார். வெற்றி பெற்றவர் சூழலைக் கணக்கில் எடுத்துக் கொண்டு நடைமுறைத் தகவல் சாதனங்களையே பயன்படுத்தினார். (பை 1956) ஏன், தென்இலங்கையில் இன்னும் கூட கிராமப்புற வாக்காளருக்கு அரசியல் 'போதம்' தருவதற்கு அரசியல் கட்சிகள், வெத மாத்தையா (நாட்டு வைத்தியர்கள்), பிக்குகள், சுயபாஷை ஆசிரியர்கள், கிராம சேவையாளர்களைப் பயன்படுத்தும் முறையே அனுசரிக்கப்படுகின்றது. இங்குதான் கிராம பொருளாதார - சமூக அமைப்பு வலைப் பின்னலுக்கிடையில் மரபுவழி தகவல் பரிவர்த்தனையில் நேரடித் தொடர்பின் தளம் தொடங்குகிறது.

இதற்கு நல்ல உதாரணம் ஈரான். ஈரானில் நவீன தகவல் தொழில் நுட்ப அம்சங்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டன. ஐரோப்பிய வெகுஜன தகவல் தொடர்புச் சாதனங்களுடன் ஒன்றிய தகவல் தொழில் நுட்பம் மூன்றாம் உலக நாடுகளில் ஈரானில் சிறந்த முறையில் அமைந்திருந்தது. மேற்கத்தைய மயமான மத்திய தர மற்றும் உயர் வர்க்கத்தினர் தகவல் தொடர்புகளுக்குப் பெரும்பாலும் நவீன வெகுஜனத் தொடர்புச் சாதனங்களையே நம்பியிருந்தனர். தமது நாட்டைப் பற்றிய மதிப்பீட்டை அந்நிய தொடர்புச் சாதனங்கள் மூலம் அறிவதிலேயே அக்கறை காட்டினர் மரபு வழியாக தகவல் தொடர்புகளின் அர்த்தங்கள் இவர்களால் உணரப்படவில்லை. ஆனால் அயத்துல்லா கொமெய்னி தனது சமூக, பொருளாதார கலாசார, அரசியல் கோரிக்கைகளைப் பள்ளிவாசல்கள் மூலமே தெரியப்படுத்தினர். ஈரானில்உள்ள 90,000 பள்ளிவாசல்களில் கடமை புரிந்த 2,00,000 முல்லாக்கள் (இஸ்லாமிய மதகுருக்கள்) பிரசாரகராகச்செயற்பட்டார்கள். பாரம்பரியமான மூலங்கள் மூலம் தகவல் பரிவர்த்தனை நேருக்கு நேர் இடம்பெற்றது

> தகவல் தொடர்பு என்றவுடன் நவீன வெகுஜனத் தகவல் தொடர்புச் சாதனங்களை மையப்படுத்துகிறோம். ஆனால்மூன்றாம் உலக நாடுகளில் மரபுவழி தகவல் தொடர்புஆற்றல்மிகு சாதனமாக இன்றுவரை நிலவி வருகிறதுஎன்பது உணரப்பட வில்லை

ஈரானிய ஷாவைச் சுற்றிய மாயையும் அழிந்தது. அடிக்கடி தொலைக் காட்சியில் தோன்றியதால் 'ஆரியரின் ஒளி' ராஜாதி ராஜன், கடவுளின்நிழல் என்ற படிமத்தை இழக்க நேரிட்டது. இறுதியில் ஷா பதவியை இழந்து அந்நிய வாடையில் அமுங்கிப்போவதாகக் காணுகிறோம்.

மரபு வழிச் செய்தித் தகவல் முறை ஆபிரிக்க நாடுகளின் அரசியல் அணுகு முறைக்கும் பொருத்தமானதாகக் கருதப்படுகிறது. 1965 இல் கஸபிளங்கா கலவரச் செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன. ஆனால் இந்தச் சம்பவம் நேரடித் தகவல் பரிவர்த்தனையின் மூலம் சில மணி நேரங்களில் மொறொக்கோவில் பட்டி தொட்டி எல்லாம் பரவியது. மேற்கு ஆபிரிக்காவில் Mammy Wagons என்ற வாகனங்களில் பயணம் செய்யும் வியாபாரிகளான பெண்களே நிகழ்ச்சிகளை ஊர்களில் கதையாகச் சொல்லுறார்கள். என்குருமா சாரதிகள் மூலமே தகவல்களைப் பரிமாறினர். பாமாஸ் தீவில் உள்ள மக்கள் வெகுசனத் தொடர்புச் சாதனங்களை விட மரபு வழித் தகவல் மூலம் வரும் செய்திகளையே பெரிதும் நம்புகிறார்கள்.

எமது மரபு வழி ஊடகங்களைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் எச்.எஸ் ரங்கநாத் ''மக்களுடன் நெருங்கிய தொடர்புடையது. மற்றத் தொடர்பு சாதனங்களை விடச் செழிப்பானது. குறைந்த செலவினையுடையது. எல்லோரும் எல்லா வயதினரும் பங்கு கொள்ளக் கூடியது. மக்களுடன் நேருக்கு நேர் தொடர்பு கொள்ளும் வலுவான சாதனம். வலுவான சாதனங்களாக கிராமிய நாடகங்கள், நடனங்கள், நிழலாட்டம், கதை சொல்லுதல், பொம்மலாட்டம், மேளம் கொட்டுதல், பாடுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்'' என்கிறார்.

## அமைப்பும் உள்ளடக்கமும்


மரபு வழித் தொடர்புமூலங்களின் அமைப்பில் புதிய கருத்துக்களைப் பிரயோகம் செய்யும் போது, இரண்டிற்கும் இடையிலான உறவுகள் கவனிக்கப்படவில்லையெனில் மக்கள் அந்த வடிவத்தை நிராகரிக்கவும் செய்யலாம். வேறொரு உள்ளடக்கத்தைச் செயற்கையாகப் புகுத்தியதால் ஏற்பட்ட ஒத்திகையின்மையால் சௌதாத்திமலை அடிவாரத்தில் குடும்பக் கட்டுப்பாட்டை பிரசாரம் செய்ய அனுப்பப்பட்ட ஒரு கோஷ்டியின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டது. குடும்பக் கட்டுப்பாட்டுப் பாடலை ஒரு தெய்வத்தில் ஏற்றிப் பாடிய போது அதன் நம்பகத் தன்மையில் சந்தேகம் கொண்ட மக்கள் கட்டுக்கடங்காமல் அந்தக் குழுவையே தாக்க முற்பட்டனர். சென்னையில் சேரிப்பகுதி ஒன்றில் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரம் மேற்கொள்ள பிரபல சினிமா நடிகர் தலைமையில் பாடகர் குழு ஒன்று அனுப்பப்பட்டது. மாலையில் தொழிலாளர் வீட்டில் இருப்பார்கள் என்று இந்தக் குழு அங்கு சென்றது. இந்த நிகழ்ச்சியைச் சூழ்ந்து பார்க்கச் சிறுவர்கள்தான் அனுப்பப்பட்டார்கள். பெற்றோர் தனிமையை விரும்பினார்களாம்.

மரபு எல்லைகளை விதிக்கிறது. எல்லைகளைத் தாண்டிய மீறல் என்றால் சாதாரண மக்கள் தமது பாரம்பரிய தொடர்பு மூலகங்களை நிராகரிக்கலாம். ஆகவே மக்களின் தேவைகள் கருதிக் குறிப்பிட்ட அர்த்தங்களுக்கு இசைவாக தொடர்பு மூலகங்கள் அமைய வேண்டும்.

கர்ணபரம்பரைக் கதை ஒன்று உண்டு. ஒரு ஆந்திர அரசனின் அழைப்பின் பேரில் குச்சுப்பிடி நாட்டியக்குழு ஒன்று அவைக்குச் சென்றது. வழியில் சந்தித்த கிராமத்தில் நிலவிய பஞ்சத்தையும், பசியையும், வரிச்சுமையையும் அவர்கள் அரச சபையில் ஆடினார்கள். சிருங்கார ரஸம் ததும்பும் நடனங்களை ஆடிக்காட்டவில்லை. குறிப்பால் உணர்ந்த அரசன் அந்தக் கிராமத்துக்கு வேண்டிய நிவாரணங்களை வழங்கினான். இது கர்ண பரம்பரைக் கதை. இது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் இக்கதை ஒரு செய்தியை உணர்த்துகிறது. மக்கள் தமது அபிலாசைகளை வெளிப்படுத்தத்தான் மரபுவழி மக்கள் தொடர்புச் சாதனங்கள் என்பதை இக்கதை வலியுறுத்துகின்றது.

# சிறுகதை

## மெழுகுவர்த்தி



கே.ஆர்.டேவிட்

"குமரன்... என்னைச் சுட்டுப்போட்டு நீங்கள் தப்பிச்சுக் கொள்ளுங்கோ..." வேலு இப்படிக்கூறுகின்றான். தென்னை மரத்தின் உச்சியில்இடிவிழுந்து தென்னங் குருத்துக்கள் கருகிச் சோர்வது போல, வேலுவின் வார்த்தைகள் பெருமிடியாய் குமரனின் செவிப்பறையில் வீழ்ந்துஅவனதுஉயிர்க்குருத்து கருகிச் சோர்கின்றது!

குமரனோ, சிவாவோ, கணபதியோ, வேலு இப்படியொரு முடிவுக்கு வருவானென்று எதிர்பார்க்கவில்லை. மூவரும் திகைத்துப்போய் நிற்கின்றனர்.

இந்த நால்வரும் போராளிகள். வேலுதான் இவர்களின் தலைவன்.

"என்ன வேலு சொல்றாய்.." குமரன் ஆச்சரியத்தோடு கேட்கிறான்.

"என்னாலை இனி நடக்கேலாது. என்னாலை நீங்களும் சாகவேண்டிவரும்... தாமதிக்காமல் என்னைச்சுட்டுப்போட்டுத் தப்பிச்சுக் கொள்ளுங்கோ..." வேலு சொன்னதையே திரும்பவும் கூறுகின்றான்.

குமரன் எத்தனையோ போராட்ட வரலாறுகளைப் படித்திருக்கின்றான். ஆனால் இப்படி ஒரு சம்பவத்தைப் படித்ததில்லை.

இராணுவத்தினரின் துப்பாக்கிக் குண்டுக்கு இலக்கான வேலு நெடுமரமாய் வீழ்ந்து கிடக்கின்றான். அவனைச் சுற்றி மூன்று போராளிகளும் செய்வதறியாதுநிற்கின்றனர். இவர்களைச் சுற்றி இராணுவத்தினர் நிற்கின்றனர்.

அதிகாலை ஐந்தரைமணி-தைமாதப்பிற்பகுதி, கடுமையான குளிர், எங்கும் பனிப்புகார்...

இரண்டு வாகனங்களில் வந்த இராணுவத்தினர் இந்த நான்கு போராளிகளையும் சுற்றிவளைத்து நிற்கின்றனர். மாலைக் கருக்கலில் வீதியில் வண்டடிப்பதுபோல், இராணுவத்தினரின் துப்பாக்கிக் குண்டுகள் பறக்கின்றன! கிராமத்து மக்கள் நித்திரை மயக்கத்தோடு செய்வதறியாமல் அங்குள்ள ஆலயத்தை நோக்கி ஓடுகின்றனர் நாய்கள் அவதியவதியாய்க்குலைக்கின்றன!...

"ஆமிக்காறரை முன்னேற விடாதையுங்கோ" குமரன் தன் தோழர்களான சிவாவையும், கணபதியையும் பார்த்துக் கூறுகின்றான். கணபதியும், சிவாவும் குண்டுவரும் திசை நோக்கி கிட்டத்தட்ட நூறடிகள் முன்னேறி நின்று எதிர்த் தாக்குதல் செய்கின்றனர்.

வேலுவுக்கு அருகில் நின்ற குமரன், வலது காலைமடித்து முழங்காலை மண்ணில் பதித்து, இடதுகாலை மடித்தமர்ந்து, வேலுவின் வலது கால் லோங்ஸ் துணியை மேல் நோக்கி இழுத்துச் சுருக்கி, முழங்காலுக்கு மேல் கொண்டு வருகின்றான்.

சிவப்பு மையில் தோய்த்து எடுக்கப்பட்ட தூரிகையின் நுனியிலிருந்து சிவப்புமை சொட்டிடுவதுபோலகுமரனின் விரல் நுனிகளால், வேலுவின் உடற்சூடுமாறாத குருதி வடிகின்றது!

வேலுவின் முழங்காலில் ஏற்பட்ட காயத்தைக் குமரன் தெளிவாகப் பார்க்கிறான்.

போரடிப் போட்டியில் அடிபட்டு நொருங்கிய தேங்காய்-தேங்காய்ச் சொட்டும், சிரட்டையுமாகச் சிதைந்து, இளநீரில் தோய்ந்து கிடப்பது போல், வேலுவின் முழங்கால் சில்லு நொருங்கி, எலும்பும் தசையுமாகக்குருதியில் தோய்ந்து கிடக்கின்றது.

காயம்பட்ட காலின் பாதத்தைப்பிடித்து தூக்குகிறான் குமரன்... பலாப்பழப்பால் உதடுகளில் ஒட்டி இழுபட்டு வலையிடுவதுபோல், முழங்கால் சிதைந்து, அதன் தோற்பகுதி இழுபட்டு வலையிடுகின்றது. அந்த வலைப் பின்னலூடாக அரிதட்டில் பனம்பழச் சாறு வடிவதுபோல் குருதிவழிகின்றது!

வேலுவால் இனிநடக்க முடியாதென்பதைக் குமரன்உணர்கிறான்.

வேலுவைக் காப்பாற்ற வேண்டும், அதேநேரத்தில் எதிரிகளிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் தாங்களும் தப்பவேண்டும்... குமரனின் சிந்தனைச்சக்கரம் வேகமாகச் சுழல்கின்றது...வேலுவைப்பற்றிய உணர்வுகள் சக்கரத்தின் கூரிய பற்களாய் குமரனின் இதயத்தைக் குத்தி ஆழப்பதிந்து மீள்கின்றன...

வேலு..

ஒரு மனிதன், நண்பன், தோழன்......சகலத்துக்கும் மேலாக அவன் ஒரு போராளி அவனைச்சுடவேண்டும்... முடியுமா ?

"குமரன் யோசிக்காதை... என்னைச் சுட்டுப்போட்டுத் தப்பிச்சுக் கொள்ளுங்கோ..."

போராளிகள் காப்பாற்றப் படவேண்டும், ஆயுதங்கள் பாதுகாக்கப்பட வேண்டும், எதிரியிடம் உயிரோடு அகப்பட்டுக் கொள்ளக் கூடாது, போராட்டம் வாழவேண்டும், இந்த மண்ணும் மக்களும் விடுதலை பெறவேண்டும்..

இவைகள் தான் வேலுவின் சிந்தனைக்கூறுகள். சலனமோ, சபலமோ அற்ற கொள்கைப் பிடிப்பு. அதனால்தான் மனிதனின் இறுதிச் சந்திப்பான மரணத்தைக் குறுணிக்கல்லாய் மதித்துச் சந்திக்க விரும்புகிறான் வேலு!

நாய்கள் குரைக்கும் ஒலி மிக அண்மையில் கேட்கின்றது. இராணுவத்தினர் இவர்களை அண்மித்துவிட்டனர். தங்களைச் சுற்றி நிற்கும் இராணுவத்தினருக்கெதிராகத் தாக்குதல் செய்ய இவர்களிடம் இப்போது ஆட்பலமோ, ஆயுதபலமோ இல்லை. பின்வாங்கித் தப்பித்துக்கொள்வதுதான் ஒரே வழி!

ஆனால் வேலு..?

குமரனின் மனச்சக்கரம்இன்னும் வேகமாகச் சுழல்கின்றது...

எதையோ சிந்தித்த குமரன் தனது சேட்டைக்கழட்டி, மடித்து விடப்பட்டிருந்த கைப்பகுதியைக் குலைத்து, கைப்பகுதிகள் இரண்டையும் கிழித்தெடுத்து இரண்டையும் முடிந்து கயிறாக்கி, வேலுவின் முழங்காலுக்கு மேல் இறுகக்கட்டுகிறான். இரத்தோட்டத்தைக் கட்டுப்படுத்தும் முதலுதவி.

வேலுவின் வலது கைப்பிடிக்குள் இன்னமும் அவனது துப்பாக்கி கிடக்கின்றது. அவனது ஆட்காட்டி விரல்கூட இன்னமும் துப்பாக்கி விசையிலேயே பதிந்து கிடக்கின்றது... எதிரிகளை அழிக்க வேண்டுமென்ற அவனது போராட்ட உணர்வி விருந்து இன்னமும் அவன் விடுபடவில்லை.

எட்டத்தே.. இராணுவத்தினரை எதிர்த்துக் குலைத்த நாயொன்று சுடப்பட்டு அது மரணஓலமிடுவது தெளிவாகக் கேட்கின்றது.

இராணுவத்தினருக்கு நாயென்றாலும், மனிதரென்றாலும் ஒன்றுதான்!

" குமரன் அநியாயமாக நீங்கள் சாகக் கூடாது"! வேலு கூறுகிறான்

வேலு-

முருகனின் கையிலுள்ள வேலாயுதத்தை இவனதுபெற்றோர்கள் மனதில் கொண்டார்களோ என்னவோ இவனுக்கு வேலாயுதம் என்றபெயரைவைத்தனர். இவன் இயக்கத்தில்சேர்ந்தபின்னர்'வேலு' என்றும் 'வேலா' என்றும் அழைக்கப்படுகின்றான்.

சிவந்த -உரோமம் நிறைந்த உடற்கட்டு, கணக்கான உயரம், பக்க வகிடிட்டுவாரிவிடப் பட்டிருக்கும் தலைமயிர், சிவபெருமானின் நெற்றியைப் போன்ற அழகான நெற்றி. அழகானமூக்கு, தளதளப்பான சொக்கை, எதையும் ஊடுருவி நோக்கும் கூர்மையான கண்கள்,...ஆண்களே ஓரக்கண்ணால் பார்த்துவிடக்கூடிய அழகு..!

புரட்சிக்கவி பாரதியைத்தன் மனதில் மானசீகக் குருவாகக் கொண்டு தனக்குள்தானே என்றோ போராளியாகியவன் வேலு. இந்த மண்ணும் மக்களும் விடுதலை பெற வேண்டுமென்ற இவனது இதயக் கொதிப்பில் பாரதியின் கருத்துக்கள் புடமிடப்படும்.

சகலரிடமும் மிகவும் அன்பாகப் பழகிக் கொள்வான். சில வேளைகளில் கோபப்படுவதுமுண்டு... இவனதுகோபம் நிலக்கரி போன்றதல்ல, பெற்றோல் போன்றது... அடுத்த கணம் சாந்தமாகி தான்கோபப்பட்டுக் கொண்டதற்காக வேதனைப்பட்டு கோபத்துக்குள்ளானவரை அணைத்து முதுகைத் தடவிக் கொடுப்பான்!

கடந்த இரவு இக்கிராமத்து வாலிபர்களைச்சந்தித்து கருத்தரங்கு நடாத்துவதற்காக குமரன், சிவா, கணபதிஆகியோருடன் வந்திருந்தான். வந்த இடத்தில்தான் இச்சம்பவம் நடந்து விட்டது!

இப்போது இந்த நால்வரும் இராணுவ வலைக்குள்நிற்கின்றனர். மற்றைய மூவரால் தப்பித்துக் கொள்ள முயற்சியாவது செய்ய முடியும்... வேலுவால்...?

கிட்டத்தட்ட ஏழு பரப்பை உள்ளடக்கியகாணி, சுற்றிவர புதிய கம்பிக்கட்டைகள் நாட்டப்பட்டு மிக நெருக்கமாக உயர்த்தி அடிக்கப்பட்ட முட்கம்பி. மேற்பக்கம் மூன்றுவரிக் கிடுகு. ஏழுபரப்பு நிலத்திலும், மிகச் செழிப்பான செவ்விளை மரங்கள்...ஒரே யொரு பாதை அதுவும் இரும்புக் கேற் போடப்பட்டு சங்கிலியால் சுற்றி பூட்டுப்போடப்பட்டிருக்கின்றது.

காணியின் வலது பக்கமூலையில், சில அன்னமுண்ணா மரங்களும், ஒரு மஞ்சவுண்ணா மரமும், வளைந்து வளர்ந்த ஒரு பூவரசுமரமும் நிற்கின்றன.

இரும்புக் கேற்றால் ஏறிப் பாய்ந்துதான் நால்வரும் உள்ளேவந்தனர். இனியும் கம்பி வேலியைத் தாண்டித்தான் இவர்கள் செல்லவேண்டும்!

கேற்பக்கத்தை அண்மித்தே இராணுவத்தினர் நிற்கின்றனர்.

அந்தப்பக்கமாக நின்றே சிவாவும், கணபதியும் எதிர்த் தாக்குதல் செய்கின்றனர்.

விநாடிகள் நகர்ந்து நிமிடங்களாகிக் கொண்டிருக்கின்றன.

குமரன், சிவாவையும் கணபதியையும் அழைத்து வேலுவைத் தூக்கிக் கொண்டு போவது பற்றி ஆலோசிக்கின்றான். அவர்களும் அந்த யோசனையை ஏற்றுக் கொள்கின்றனர்.

குமரன் பூவரசு மரத்தைப் பிடித்து, கம்பியில் காலை வைத்து ஏறி மறுகாணிக்குள் பாய்கிறான். சிவாவும், கணபதியும் வேலுவைத் தூக்கி கம்பிவேலிக்கு மேலால் கொடுக்க குமரன் தனித்து நின்று வேலுவைத் தாங்கி, நிலத்தில் கிடத்துகிறான்.

சிவாவும் கணபதியும் வேலியால் ஏறிப் பாய்கின்றனர்.

போராளிகளின் தாக்குதல் ஓய்ந்ததைத் தொடர்ந்து இராணுவத்தினரின் தாக்குதல்அதிகரிக்கின்றது. பங்குனி மாத 'வம்புமழைத்தூற்றலில்' தடித்த துளிகள் தகரக் கூரையில் விழுவது போல், இராணுவத்தினரின் துப்பாக்கிக் குண்டுகள் செவ்விளை மர ஓலைகளில் படுவது தெளிவாகக் கேட்கின்றது.

அடுத்து என்ன செய்வது...? மீண்டும் சிந்தனைச் சக்கரம்...

கடந்த இரவு எட்டுமணியளவில் வேலுவும், அவனதுமூன்று நண்பர்களும் இக்கிராமத்திற்கு வந்தனர். அவர்கள் திட்டமிட்டபடி இரவு பத்துமணியளவில் இக்கிராமத்து வாலிபர்களைச் சந்தித்து கலந்துரையாடினர். அதன் பின்பு அங்கிருந்து புறப்படுவது ஆபத்தென்றெண்ணிய அவர்கள் கிராமத்தின் கிழக்குப் புறமாக அமைந்துள்ள வயல் கரைக் கொட்டில் ஒன்றில் தங்கிவிட்டனர்.

மழைக்கால இருட்டிலும் மரநாய், மரத்தின் உச்சியில் இருக்கும் கறுப்புக் கோழியைக் கூட இனங்கண்டு பிடிப்பது போல்... மனிதருக்குள் உள்ள சில மரநாய்கள்... வேலுவும் அவனது நண்பர்களும் இங்கு வந்த செய்தியை மோப்பம் பிடித்து.. அச்செய்தி இராணுவ முகாம் வரை நீண்டு..

அதிகாலை ஐந்து மணியிருக்கும்-

தனது தோழர்களைத் தூங்கவிட்டு வேலு மட்டும் விழித்திருந்தான். நித்திரையைத் தவிர்ப்பதற்காக, வீட்டுக்கும் வீட்டுப் படலைக்குமிடையேயுள்ள கிட்டத்தட்ட எழுபத்தைந்தடி நீளமான இடைவெளியில் திரும்பத் திரும்ப நடந்துகொண்டிருந்தான்.

எட்டத்தே பாரிய வாகனங்களின் இரைச்சல் ஒலி... வேலு காதைக் கூர்மைப்படுத்தினான்.

கோவிலடி வீதியிலும், வயல்கரை வீதியிலும் வாகனங்களின் இரைச்சல் ஒலி கேட்கின்றது. ... வேலு மிகவும் அனுபவசாலி. இரைச்சலை மிக இலகுவாக இனங்காண்கிறான்...

இராணுவ வாகனங்கள் தான்...! சந்தேகமில்லை!

வேலு தன் தோழர்களை எழுப்பி விஷயத்தைக் கூறி அங்கிருந்துபுறப்படுகின்றான். பதுங்கிப் பதுங்கி குறுக்கு ஒழுங்கைகளால் முன்னேறி - இரும்புக் கேற்றால்ஏறித்தாவி இக்காணிக்குள் வந்து விட்டனர். மஞ்சவுண்ணாமரத்தைப் பிடித்து கம்பி வேலியில் கால் வைத்து வேலு ஏறிய போது இராணுவத்தினரின் குண்டொன்று அவனது முழங்காலைத் துளைக்க அவன் பின் நோக்கி விழுகின்றான்.

( 18ஆம் பக்கம் பார்க்க)

# வாளேந்திய சிங்கக் கொடியின் தோற்றமும் பரிணாம வளர்ச்சியும்

"இந்தியாவிலுள்ள சாஞ்சி தூபியில் இலங்கையின் முதலாவது மன்னன் விஜயனின் வருகையைக் குறிப்பதாகக் கருதப்படும் சிற்பமொன்றுள்ளது. அதிலே சிங்க உருவத்தினையுடைய கொடியொன்று காணப்படுகிறது. இது புராதன சிங்களவரின் சின்னமாக இருந்திருக்கலாம் என்பது சிலருடைய ஊகம். அதுவே இன்றைய தேசியக் கொடியின் சின்னமாக கைக் கொள்ளப் பட்டிருக்கக் கூடும்."

இவ்வாறு ஆண்டு -6, மாணவர்களுக்கு சமூகக்கல்விபாடப் புத்தகத்தில் தேசியக் கொடி பற்றி அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. "கோட்டே இராசதானியாக விளங்கியகாலத்திலும், கண்டி இராசதானியாக விளங்கிய காலத்திலும் சிங்கக் கொடியே தேசியக் கொடியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இன்று நாம் கைக்கொள்ளும் தேசியக் கொடி கண்டியில் ஆட்சி புரிந்த ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கனின் கொடியை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பட்டது." இவ்வாறு அதில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. "இத் தேசியக் கொடியை மதிப்பது எமது அனைவரினதும் கடமையாகும்" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஒரு கொடியானது நாட்டு மக்களின் மதிப்பையும் பெருமையையும் தாராளமாகப் பெறுமாயின் அதுவெறும்வெள்ளைத்துணியாக இருந்தாலும் பாதகம் இல்லை. அப்படி அது மக்களின் ஆர்வத்தைப் பெறின் ஒருதேசியக்கொடிக்கு வேண்டிய முக்கிய தகைமையைப் பெற்று விடுகிறது" என தேசியக் கொடிக்கு இருக்க வேண்டிய இலக்கணத்தை அறிஞர் ஒருவர் கூறினார்.

இலங்கையின் சுதந்திரம் பற்றிய சிந்தனை எழுந்த போது, தேசியக் கொடி பற்றிய கருத்துக்கள் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டன. பிரித்தானியர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுபட முன்னர் 1947ஆம் ஆண்டு முற்பகுதியில் டில்லியில் நடைபெற்ற ஆசிய நாடுகளின் மாநாட்டில் இலங்கையின் கொடியாக பறக்கவிட என அப்போதைய சுகாதார அமைச்சர் ஈ. டி சில்வா கொடி யொன்றை எடுத்துச் சென்றார். அது செந்நிற பின்னணியில் அமைந்த பொன்னிற வாளேந்திய சிங்கத்தைக் கொண்ட கொடியாகும். இக் கொடிக்கு அப்பொழுதே தமிழர் தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப் பட்டது.

அப்போதிருந்த பிரதிநிதிகள் சபையிலும், சபைக்கு வெளியேயும், தேசியக்கொடியின் அமைப்பு பற்றி பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அன்று 'தேசிய வாதிகள்' என்று அழைக்கப் பட்ட தமிழர்களாலும்' வகுப்பு வாதிகள்' என்று அழைக்கப் பட்ட தமிழர்களாலும் தேசியக் கொடி குறித்து தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் சிங்களவர் தரப்பினரால் தூக்கி வீசப்பட்டன.

யாழ்ப்பாணம் முற்றவெளியிலே தமிழ்க் காங்கிரஸ் கட்சியினரால் தேசியக் கொடி பற்றிய கருத்துக்களை அறிய கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. இக்கூட்டத்தில் பெரும்பாலும் நியாயவாதிகளே (சட்டத்தரணிகள்) கலந்துகொண்டனர். அக் கூட்டத்தில் மஞ்சள், செந்நிற பின்னணியில் சிவனொளிபாதமலை தேசியக் கொடியாக அமையவேண்டும் என்ற ஒரு கருத்தை திரு. ஹண்டி பேரின்பநாயகம் என்பவர் முன்வைத்தார். இக் கருத்து இவரால் 1945ஆம் ஆண்டு முதல் முன்வைக்கப் பட்டுவந்ததாக தெரிவிக்கப் படுகிறது. சிவனொளிபாதமலை பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் அனைவராலும் போற்றப்படுவது. எனவே இவ் அமைப்பு சகல மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது என்பது இவரது கருத்தாக இருந்தது.

இன்னுமொருவரின் கருத்து "சிங்களவர் வாளேந்திய சிங்கத்தை விரும்புவதால் மூவர்ணக் கொடியில் சிங்கம் அமைதல் வேண்டும்" என்பதாக இருந்தது. இங்கே இந்திய தேசியக்கொடியிலுள்ள அசோகச் சக்கரத்திற்குப் பதிலாக வாளேந்தியசிங்கத்தைஅமைத்துக் கொள்ளலாம் என்பது இவரது கருத்து என தெரிகிறது.

சிங்கத்தை தேசியக் கொடியில் பதிக்க ஒப்புக் கொண்டவர்களும் சூரபத்மனுடைய கொடியிலே சிங்கம் (வாளேந்திய சிங்கம் அல்ல) பொறிக்கப்பட்டிருந்தது என்றும், சூரபத்மன் ஒரு தமிழ் மன்னன் (இவனைத்தான் முருகப்பெருமான் வதம் செய்தார்) என்றும் சிங்கம் (வாளேந்திய சிங்கமல்ல) துர்க்கையம்மனின் வாகனம் என்றும் கூறிக் கொண்டார்கள்.

சிலர் நந்தியையும் (யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் சங்கிலியனின் சின்னம்) சிங்கத்தையும் ஒருமித்து கொடியில் பொறிக்க வேண்டும் என ஆலோசனைகூறினர். ஆனால் சிங்கம் நந்தியைச்

**சிவபாலன்**

சாப்பிட்டு விடும் (சிங்கம்வாள் வேறு வைத்திருக்கிறது) என்று கூறி வேறு சிலர் அதனை ஆட்சேபித்தனர். தேசியக் கொடியில் யாழ் வாத்தியம் இடம் பெற வேண்டும் என யாழ்ப்பாணத்தில் இயங்கிய அமைப்பொன்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இதே வேளை சிங்கள அரசியல்வாதிகளின் கூட்டமொன்று காலிமுகத்திடலில் கூடி சிங்கக் கொடியை இலங்கை தேசியக் கொடியாக கொள்ள வேண்டும் என வற்புறுத்தினர்.

அப்போது எதிர்க்கட்சியாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சியினர் மாறுபாடானகருத்தொன்றை முன்வைத்தனர். 'வகுப்புவாதத்திற்கு தேசியப் பூச்சுப் பூசி சிங்கக்கொடியைஇலங்கை மீது திணிப்பதை' டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கண்டித்தார். "இன்றைய பாராளுமன்றம்சுதந்திர இலங்கையின்பாராளுமன்றம்அல்ல. நாடு இன்னமும் விடுதலை பெறவில்லை. இதற்கென உழைத்துவரும் சக்திகளே சுதந்திரக் கொடியையும் ஆக்கும் உரிமையைக் கொண்டவர்கள்" என கருத்துக் கூறினார்.

பின்னர் இவர் சுதந்திரம் பெற்று ஆக்கிய குடியரசு அரசியல் யாப்பில் தேசியக்கொடியாக சிங்கக் கொடியே உள்ளது. அதில் உள்ளது சில வேளைகளில் பாட்டாளிச்சிங்கமாக இருந்ததோ அது எமக்குப் புரியவில்லை.

16.01.1948 அன்று தேசியக் கொடி பற்றியபிரேரணைகள் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. வாள் ஏந்திய சிங்கக் கொடியை ஜனாப் ஏ. சின்ன லெப்பை பிரேரித்தார். சிங்களவருக்கு சிங்கக் கொடி, தமிழருக்கு நந்திக் கொடி, முஸ்லிம்களுக்கு பிறைக்கொடி என மூன்று தேசியக் கொடிகள் இருக்க வேண்டும் என திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரேரித்தார். மூவர்ணக்கொடியில் சிங்கம் அமைய வேண்டும் என ஜி. ஜி பொன்னம்பலம் பிரேரித்தார். செம்மஞ்சள், வெண்ணிறபட்டைகளில் சிங்கம் அமைய வேண்டும்என திரு. ஸி. சுந்தரலிங்கம் பிரேரித்தார். அப்போதுஉள்நாட்டு மந்திரியாக இருந்த சேர் ஒலிவர் குணதிலகா "இலங்கையின் கடைசிக் கோட்டையை பிரித்தானியர் கைப்பற்றிய போது சிங்கக் கொடி இறக்கப்பட்டது. இச் சிங்கக் கொடியைத் தவிர்ந்த வேறொரு கொடியை ஏற்ற அரசாங்கம் தயாராயில்லை" என்றார். ஆனால் இலங்கையில் மூன்று இராச்சியங்கள் இருந்தன. அவை ஒவ்வொன்றாக வீழ்ச்சி அடைந்து இறுதியாக 1815இல் கண்டி இராச்சியத்தின் சிங்கக் கொடி இறக்கப்பட்டது. அதாவது கண்டி இராச்சியத்தின் கொடியாக சிங்கக்கொடி இருந்ததே ஒழியஏனைய இரு இராச்சியங்களின் கொடியாக சிங்கக் கொடிஇருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து அப்போதைய பிரதமர் டி. எஸ் செனநாயக்க தேசியக் கொடிபற்றி தீர்மானிக்க குழு ஒன்று நியமிக்கப் படும் என்று அறிவித்தார்.

இதற்கிடையில் 50, 000 சிங்கக் கொடிகள் பிரித்தானியாவிலிருந்து சோடனைக்காக தருவிக்கப்பட்டதாகவும், அவை தேசியக் கொடிகள் அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும் சிறிலங்காவின் முதலாவது சுதந்திரதினத்தன்று "ஜாதிககொடி"யாகசெந்நிறப் பின்னணியில் மஞ்சள் நிற வாளேந்திய சிங்கக்கொடிசுதந்திர சிறிலங்காவின் முதலாவது பிரதமர் டி. எஸ். செனநாயக்காவினால் ஏற்றி வைக்கப்பட்டது.

பின்னர்1948 மார்ச்சில்தேசியக் கொடிபற்றி ஆராயவென நியமிக்கப்பட்ட குழு தமிழருக்கு செம்மஞ்சள்பட்டையையும், முஸ்லிம்களுக்கு பச்சை நிறபட்டையையும்வழங்கியது. சிறுபான்மையினர் கொடியில் கிடையாக கொடி முழுவதும் வர்ணப் பட்டைகளைக் கேட்டார்கள். ஆனால் கிடைத்ததோ இரண்டு நிலைக்குத்துப் பட்டைகள். கொடியின் ஓரத்தில் கொடிக்கம்பத்தில் இந்த இரு நிறப்பட்டைகள்இருக்கும் பகுதியை சுற்றி மறைத்துவிட்டால் . எனசிலர் சந்தேகித்தார்கள். ஆனால் சுலபமாக வெட்டி எடுத்துவிடலாம் என சிலர் எண்ணினார்கள்.

> தம்மை தேசியவாதிகள் என்று கூறிக் கொண்ட தமிழ் தலைவர்களோ, இனவாதிகள் என்று கூறப்பட்ட தமிழ்த்தலைவர்களோ சிங்கக் கொடியை தேசியக் கொடியாக ஏற்க தயாராக இருக்கவில்லை. சிங்கத்தை கொடியில் பொறிக்க சம்மதித்தவர்களும், சிங்கக் கொடி சூரபத்மனின் கொடி எனவும் சிங்கம் துர்க்கை அம்மனின் வாகனமென்றும் கூறி தம்மைச் சமாதானப் படுத்திக்கொண்டனர்.

பின்னர் 1978 செப்டெம்பர் 7 இல் ஜே.ஆர் ஜெயவர்த்தனவினால் கொண்டு வரப்பட்ட அரசியல் அமைப்பில் நான்கு புதிய வெள்ளரசு இலைகள் பொறிக்கப்பட்டு தேசியக் கொடி இன்றைய வடிவத்தை அடைந்தது. இதுவேசிறிலங்காவின்தேசியக்கொடியின் வரலாறாக உள்ளது.

இதேவேளை 1948ஆம் ஆண்டு சிறிலங்காவின்சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியுடன் நந்திக் கொடி பறக்கவிடப்பட்டது. எனினும் சுதந்திரதினத்தைக் கொண்டாடுவதிலோ, கொடியேற்றுவதிலோ மக்கள் ஆர்வம் காட்டவில்லை. இந்திய சுதந்திரதினமாகிய 1947 ஆகஸ்ட் 15ஆம்திகதி "தாயின் மணிக்கொடி பாரீர்" என்று இந்திய தேசியக் கொடியாழ்ப்பாணத்தில் கிராமங்களில் ஏற்றப்பட்டு சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. ஆனால், இவை 45 வருடங்களின் பின் இன்று கிராமம்கிராமமாக எரிக்கப்பட்டன.

பின்னர் கறுப்புக்கொடியுடனேயே தமிழர்கள் சிறிலங்காவின் ஒவ்வொரு சுதந்திர தினத்திலும் காணப்பட்டனர். 1956 இல் திருக்கோணமலையில் சிறிலங்காவின் சுதந்திர தினத்தன்று கறுப்புக்கொடி ஏற்ற முயன்ற திரு. நடராசன் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1972 மே 22இல் குடியரசு யாப்பு அமுல் செய்யப்பட்ட பின்னர் குடியரசு தினங்கள் எல்லாம்துக்கதினங்கள்ஆகின. அரச கட்டடங்களில் பறக்க விடப்பட்ட கொடிகள் இளைஞர்களால் அறுத்தெறியப்பட்டன.

1978 பெப்ரவரி 4ஆம்திகதி திருக்கோணமலை இந்துக்கல்லூரியில் பறந்த சிங்கக்கொடியைஅங்கு மாணவனாகஇருந்த லெப். சீலன் எரித்தார். 1978 இல் புதிய மாற்றத்துடனான சிங்கக்கொடிபறக்கவிடப்பட்டபோது அவ்ரோ விமானம் ஒன்று வெடித்துச் சிதறியது.

படிப்படியாகசிறிலங்காவின் தேசியக் கொடிக்கு தமிழீழத்தில் இடமில்லாது போயிற்று. இன்று தமிழ் மாணவர்கள் புத்தகங்களில் மட்டும் அக் கொடியைப் பார்க்கிறார்கள்.

கடந்த சில வருடங்களாக சிறிலங்காவின் பிரதமர் டி.பி. விஜயதுங்க தேசியக் கொடியினைப் பற்றியும் அதனை ஒவ்வொரு இல்லங்களிலும், வியாபார நிலையங்களிலும், சுதந்திர தின காலங்களில் ஏற்றும்படியும், சகல இடங்களிலும் பறக்க விடும்படியும் தொடர்பு சாதனங்கள் மூலம் சிறிலங்கா மக்களை வேண்டிக் கொண்டுள்ளார்.

மலிவு விலையிலும் இலவசமாகவும் தேசியக் கொடிகள் விநியோகிக்கப்பட்டன. தேசியக் கொடியினால் வீதிகள் அலங்கரிக்கப்பட்டன. மறுதினம் அவை தெருத்தெருவாக குப்பைத் தொட்டிகளில் காணப்பட்டன எனசிறிலங்கா பத்திரிகைகள் குற்றம் சாட்டுகின்றன. 1948 இல் "அலங்கார" த்திற்குப் பயன்படுத்தப்பட்ட கொடி இன்றும் அலங்கார பொருளாகவே பயன்படுத்தப்பட்டு வருவது போல் தெரிகிறது.

ஒரு நாட்டின்தேசியக்கொடி வெறும் அலங்காரப்பொருள் அல்ல. அந்த நாட்டின் அதி மதிப்புக்குரிய - நாட்டின் அதி கௌரவத்திற்குரிய பொருள் தேசியக் கொடிதான். அவற்றுக்கு வழங்கப்பட வேண்டிய கௌரவம் வழங்கப்பட்டே ஆகவேண்டும். ஒரு நாட்டின் தேசியக் கொடி மதிக்கப்படவில்லையானால்அந்நாடுமதிக்கப்படவில்லை என்பதே கருத்தாகும்.

மூன்றாவது ஆண்டு நிறைவுச்

# கவிதை இன்பம்

இளையவன்

உள்ளத்து உள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை.
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெளிந்து உரைப்பது கவிதை.

— கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

உள்ளத்தில் இருந்து எழும் உண்மையான உணர்ச்சிகளில் ஊற்றெடுத்துப் பிரவாகிக்கும் கவிதையானது தெள்ளத் தெளிவான மொழியில் உண்மைகளைத் தெளிந்து உரைப்பதற்கு ஏற்ற ஒரு வடிவம் ஆகும். தமிழில் உரைநடை இலக்கியம் வளர்ச்சி பெறுவதற்கு முன்பாகவே செய்யுள் இலக்கியம்என்ற வகையில், கவிதை வடிவங்கள் செழுமை பெற்றுத் திகழ்ந்தமை கண்கூடு. பழந்தமிழர் இலக்கியங்கள் பலவும், செய்யுள் வடிவில் படைக்கப்பட்டிருக்கின்றமையானது தமிழர்கள் ஒலி நயத்தோடமைந்த கவிதைகளின் ரசனையில் கூடிய அக்கறை காட்டியிருக்கின்றனர் என்பதை உணர்த்தப்போதுமானதாகும். ''ஆராரோ ஆரிவரோ'' எனத் தாலாட்டுப் பாடுவதில் தொடங்கும் தமிழர் வாழ்க்கை ஒப்பாரி சொல்லி அழுவதில் முடிவடையும் வரை ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கவிதையும், பாட்டும் ஆதிக்கம் செலுத்தி வருவதைக் காணலாம்.

கவிதையின் ஒலிநயம் என்பது உணர்ச்சியின் அடிப்படையில் அமைந்தது. கவிஞரின் உள்ளத்து உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்தும் வகையில் அமைவது. அது மட்டுமன்றிப் படிப்பவர்களின் உள்ளத்தில் உணர்ச்சிகளை சுரக்க வைப்பதும்,அதன் மூலமான உணர்ச்சிக்கிளர்த்தலுக்கும் கவிதையின்ஒலி நயம் பெரிதும் உதவுகின்றது.

இந்த இடத்திலே எது கவிதை என்ற வினாவை எழுப்பி விடைகாண முயல்வது பொருத்தமானதாகலாம்.

''பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற் பல
சொல்லாற் பொருட்கிடனாக உணர்வின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்''

என்பது பவுணந்தியார் கூறும் விளக்கம். பல பொருள்களாலுமான உடல்,உயிர் உலாவருவதற்கான இடமாக இருப்பது போல சொற்கள் பொருளை உணர்த்தும் இடமாக விளங்கி எளிதில் புலனாவதற்கு ஏற்ற வடிவமே செய்யுள் என்கிறார் அவர். செய்யுள், கவிதை என்பனவற்றை பௌதீகப் பொருள்களுக்கு கூறப்படுவது போன்ற வரைவிலக்கணங்களுக்கு உட்படுத்துவது பொருத்தமானது அல்ல என்பது ஏற்புடையதே. எனினும் சொற்பெருக்கு நிறைந்ததும், அதிகச் செய்திகளடங்கியும் விளங்கும் ஒரு சாதனமே கவிதை. சொற்செட்டும், உணர்ச்சிப் பெருக்கும் நிறைந்தது கவிதை. பொருட் செறிவுடைய சொற்கள் நிறைந்த கருவூலம்தான் கவிதை என்பதும், பேரிலக்கியம் என்பது உயர்ந்த எல்லை வரையில் பொருளூட்டம் பெற்ற மொழி என்பதும் மேல்நாட்டு அறிஞரான எஸ்ரா பவுண்ட் என்பவரது கூற்று ஆகும். அதாவது மேலும் விளக்குவதானால் கவிதை என்பது வெறுமனே சொற்களை அடுக்கிச் செல்வதோ அல்லது வார்த்தைகளால் வரையும் கோலமோ அல்ல.

கவிதை என்னும் இந்த மூன்றெழுத்துப் பற்றி கருணாநிதி ஒரு தடவை இவ்வாறு விளக்கினார்; கவி என்பது உள்ளத்தில் சென்று தைக்க வேண்டும். அப்போது தான் அது கவிதையாகும். கவிதை என்பதன் உட்பொருளாக ஒரு விதை, ஒரு வித்து இருக்கவேண்டும். அந்த வித்து முளைவிடும் பயன் தரும் அந்தக் காட்சியை வாசகனின் மனக்கண் முன் தோன்றச் செய்யவேண்டும். அத்துடன் கவிதை என்பது ஒரு கதையைக்கூறவேண்டும். ஒரு கதையை சுருக்கமாக எடுத்துக்கூற வேண்டும். சுருங்கச்சொல்லி விளங்க வைப்பது என்பது கவிதைக்கு அடிப்படையாக இருக்கவேண்டும். அப்போதுதான் ஒரு படைப்பானது கவிதை என்னும் தகுதியை அடைகின்றது என்பது கலைஞர் கருணாநிதியின் விளக்கம் ஆகும். அதாவதுகவிதை எனப்படும் போது வாசகனின் உள்ளத்தில் தைக்கக்கூடியதாக - ஒரு விதையை உள்ளடக்கியதாக - ஒரு கதையை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்று இதனைச் சுருக்கமாக விளங்க முடியும்.

இதனை மேலும் விளக்குவதற்காக இங்குசில உதாரணங்களைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகலாம்.

''ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருவன் போட்டது வெள்ளரிக்காய்
காசுக்கு இரண்டாக விற்கச்சொல்லி எல்லோ
கடிதம் போட்டாண்டி வெள்ளைக்காரன்''

என வரும் நாட்டார்பாடலில் நாடுஅடிமைபட்டு இருந்த அவல நிலை பற்றி எவ்வளவு லாவகமாக விளக்கப்பட்டிருக்கிறது. எங்கள் ஊரவனின் தோட்டம்-அதில் யாரோ போட்ட வெள்ளரிக்காய்க்கு' எங்கிருந்தோ வந்த வெள்ளைக்காரன் விலை நிர்ணயம் செய்கிறதும்' விற்கச் சொல்லி அதிகாரம் பண்ணுவதும்உள்ளச் சுவையுடன் விளக்கப்பட்டிருப்பதைக் காணும் போது பெயர் தெரியாத அக் கவிஞனை பூசிக்கத் தோன்றுகிறதல்லவா?

சில ஆண்டுகளுக்கு முனபாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்பட்ட பத்திரிகை ஒன்றில் அப்போது மழை பொழிந்து வெள்ளம் தேங்கிப் போயிருந்த சூழ் நிலையை விளக்க விழைந்த கவிஞன் ஒருவன்

''விழிநீர் சிந்தியதால் தரைஊறிப்போயி
ருந்தது - அதனால்
மழைநீர் பெய்தபோது தேங்கிப் போய்
விட்டது.

என்று வர்ணித்தான். பூசாவிலும், பலவத்தையிலும், இன்னும் இராணுவத் தடுப்பு முகாம்களிலும், சித்திரவதைப்பட்ட தமிழர் சிந்தும் கண்ணீரும், அவர்களை நினைத்து ஏங்கும் உறவுகள் சொரியும் விழிநீரும், கண்மூடித்தனமான எறிகணை வீச்சு,விமானக்குண்டு வீச்சு இன்னும் பிற வகையான இராணுவ அடக்கு முறையின் விளைவாகவும் தமிழ் மக்கள் சொரிந்த கண்ணீர் சேர்ந்து தரையைச் சேறாக்கி இருக்கின்றது. அதனால்தான் வானம் மழையெனப் பொழிந்த போது அது தேங்கிப் போய்விட்டது என்று கவிஞன் விளக்கம் கூறி நிற்கின்றான். அதாவது நீண்ட ஒரு கட்டுரையின் வாயிலாக விளக்கப்பட வேண்டிய ஒரு விடயத்தை மிக எளிமையாகவும் சுருக்கமாகவும், தெற்றெனப் புலப்படும் வகையிலும் இந்தக் கவிதை எடுத்துக்காட்டியுள்ளது எனலாம். இக்கவிதையின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வாக்கியத்தின் பொருளைஉள்ளடக்கியதாக இருப்பதைக் காணலாம்.

'மலர்களிலேஅவள் மல்லிகை'எனத் தொடங்கும் சினிமாப்பாடல் ஒன்றின் அடிகளை அடிக்கடி கேட்டிருக்கலாம். ஆனால் மலர்களுடன் பெண்ணை ஒப்பிட முனைந்த கவிஞன் மல்லிகையை ஏன் தேர்ந்தெடுத்தான்? இதுவெறும் எதுகை மோனைக்காக தெரிவு செய்யப்பட்டதாக இருக்க முடியாது என்பதை மல்லிகை மட்டும் தான் அந்திப் பொழுதில் மலருவது என்பதை புரிந்து கொள்ளும்போது உணர்ந்து கொள்ளலாம். அதேபோல இந்தப் பாடலில் ஒவ்வொரு அடியும் உள்ளர்த்தம் நிறைந்ததாக இருப்பதைப் புரிந்து கொண்டால் கவிதையை ரசிக்கும் உள்ளத்திற்கு இன்பம் பயப்பதாக இருப்பதைக் காணலாம்.

சொற்கள் புதுப்புது அர்த்தங்களைக்கொடுக்கும் வகையிலும் - வாசகனைப் புதுப்புதுக் கோணங்களில் சிந்திக்கத் தூண்டும் விதத்திலும் கோர்க்கப்பட்டு நெய்யப்படும் கவிதைகள் தான் வரலாற்றில் வாழும் சிறப்பைப் பெறும் எனலாம். எளிமையான வார்த்தைகளாக இருக்கும் அதே சமயம் கனதியான அர்த்தங்களை கொடுக்கக் கூடியதாக கவிதையின் சொற்கள் தெரிந்து எடுக்கப்படல் வேண்டும்.

''அக்கினிக் குஞ்சு ஒன்று கண்டேன்-அதை
ஆங்கோர் மரப் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு - தணல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்
டோ?

என்னும் மகாகவி பாரதியின் கவிதையை எடுத்துக் கொண்டால் இதில் புதியதான அல்லது புரியாத சொற்கள் எதுவும் இல்லாத போதும் இது புலப்படுத்தும் கருத்தும் தூண்டும் உணர்ச்சிகளும் இங்கு எண்ணிப்பார்க்க கூடியதே.

சொற்கள் என்பவை கருத்து, உணர்ச்சி' தொனி, உள்நோக்கம் என்னும் நான்கு அம்சங்களை உள்ளடக்கியதாகும். கருத்து என்பது பேசுவோர் கூறுவது; உணர்ச்சி என்பது பேசுபவரதும், கேட்பவரதும் உள்ளத்தில் கிளர்ந்து எழுவது; பேசுபவரும், கேட்பவரும் கொண்டுள்ள மனப்பான்மையே தொனி எனப்படுவது; உள்நோக்கம் என்பது இம் மூன்றுக்கும் அடிப்படையாக அமைவதோடு மட்டுமன்றி சொல் உணர்த்தும் பொருளையும் குறிப்பதாகும்.

## கவிதைகளில் அணிநயம்

கவிதைகளுக்கு அழகு சேர்ப்பவையாக- கவிதையின் பொருளை விரித்துச் சொல்வதற்கு உதவுபவையாக - மொழி ஆளுமையின் செழுமையை புலப்படுத்துவதாக அமைந்து வருபவை கவிதைகளில் கையாளப்படும் அணிகள் ஆகும். தமிழ் மொழியைப் பொறுத்த வரையில் நூற்றுக்கு மேற்பட்ட பெயர்களால் அழைக்கப்படும் அணிகள் புலவர்களால் கையாளப்பட்டு வருகின்றன. பொருளணி,சொல்லணி என்னும் இரு பிரிவும், அதனுட் பல உபபிரிவுகளும் கொண்டதாக அணியிலக்கணம் விளங்குகின்றது.

உதாரணமாக ''-தளிர்க்கொடியே
தாமரை போன்மலரும் நின்முக நின்முகம்
போற்
தாமரையும் செவ்வி தரும்''

என்னும் அடிகளை எடுத்துக் கொண்டால் பெண்ணே! உனது முகம் தாமரை போல மலருகின்றது. தாமரை உன் முகத்தைப் போல மலருகின்றது என்று கூறுவதன் ஊடாக தாமரையை விட அழகானது அவளது முகம் என்று புலவர்புகழ்ந்துரைத்தலைக் காணலாம். அகமலர்ச்சி அணி, உயர்வு நவிற்சி அணி, குறிப்பு நவிற்சி அணி, தற்குறிப்பேற்ற அணி என்பன போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட பெயர்களால் அழைக்கப்படும் ஒவ்வொரு அணியும் ஒவ்வொரு வகையில் சிறப்பு மிக்கதாக விளங்கி கவிதைகளுக்கு நயம் சேர்ப்பவையாகும்.

ஒன்றின் குறை நிறைகளை இன்னொன்றிற்கு இருப்பதாகக் கூறி ஒப்பிட்டு எடுத்துக் காட்டுவது அக மலர்ச்சி அணி எனப்படும். உதாரணமாக,

''இக்கற்பினள் மூழ்கித் தூய்மை
செய்யுமோவென

அக் கங்கை கொள்ளும் அவா'' என்னும் கவிதை அடிகளில் கற்புடைய இந்தப் பெண் வந்து நீராடி என்னைப் பெருமைப்படுத்த மாட்டாளா என்று கங்கை நதி ஏங்குவதாக குறிப்பிடப்படுகின்றது. கங்கைநதி புனிதம் நிறைந்தது என்றும், பாவங்களைப் போக்க வல்லது என்றும் குறிப்பிடப்படும் நிலையில் கங்கை நதியே அவள் வந்து நீராடுவதால் தான் பெருமை பெறுவதாகக் காட்டப்படுவதால் பெண்ணின் சிறப்பு புலப்படுத்தப்படுகிறது.

ஒரு பொருளானது தன் சொல்லால் சொல்லப்படாமல் கேட்போரை மகிழ்விப்பதும், இது அப்படியிருக்காது என்று தெரிந்தும் தன்னிச்சையாக எடுத்துக்காட்டும் உதாரணத்தால் பெருமைப்படுத்தப்படுதல் உயர்வு நவிற்சி அணி எனப்படும்.

''மன்னநின் கணையும் ஒன்னலர் கூட்டமும்
ஏக காலத்தின் அணி கந் தோடின வெனில்
உன் புகழ் திறத்தினை உணர்ந்து
மன்பதை உலகுள் யார் பாடவல்லாரே''

(ஒன்னலர் - பகைவர்)

என வரும் கவிதை அடியில் அம்பின் தாக்குதலும், அரசனின் காரியச் செய்கையும் எடுத்துக் காட்டப்பட்டு திறமை மிகுந்த அரசனது புகழ் பாடுவதற்கு உலகில் யாருமே இல்லை என்று கூறப்படுதலைக் காணலாம்.

அண்மையில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கேணல் கிட்டுவின் வீரச்சாவை விபரிக்கப் புகுந்த 'தமிழீழன்' என்னும் கவிஞர்,

''நயவஞ்சகர் வழி மறித்தார்
நஞ்சு இனித்தது'' என கூறியிருப்பதைக் காணலாம். நஞ்சு எப்போதும் கொடியது என்பதும், ஆபத்து விளைவிப்பது என்பதும் தெரிந்ததே. ஆனால் இந்திய அரசின் நயவஞ்சகம் வழிமறித்த போது கொடிய நஞ்சுகூட இனிக்கும் என்று குறிப்பிட்டிருப்பது சிறப்பு மிக்கதாகும்.

இவ்வாறாக ஒவ்வொரு அணிகள் பற்றியும் அணிகள் கையாளப்படுவதால் கவிதை பெறும் செழுமை குறித்தும் விபரிப்பது சுவையான அநுபவமாக விரியும்.

கவிதை இன்பத்தை முழுமையாக அனுபவிப்பதற்கு யாப்பு இலக்கணம் என்னும் இலக்கண அறிவு துணை செய்வதாகவே அமையும். இருந்தும் இலக்கணம் கண்டதுதான் இலக்கியமாகுமா? அல்லது இலக்கியம் எழுந்தபின் தான் இலக்கணம் வகுக்கப்பட்டதா என்னும் கேள்வியும் இங்கு எழுப்பப்படுவது தவிர்க்க முடியாததே. மொழிக்கு அழகு சேர்க்கும் கவிதை மற்றும் செய்யுள் வடிவங்களின் எலும்புக் கூட்டுத் தோற்றங்களாகவே இலக்கணம் விளங்குகின்றது. இலக்கணத்தில் தேர்ச்சி மிக்கவர்களால்தான் இலக்கியம் படைக்கப்படமுடியும் என்பது பெரும்பாலும் மாயையே. கவிதை எழுதப் புகுவதற்கு முன்பு இலக்கணத் தேர்ச்சி இருக்க வேண்டும் என்ற கருத்து ஒருபொழுதும் ஏற்புடையதாகாது என்பது ''காரிகை கற்றுக் கவிபாடுவதை விடப் பேரிகை கொட்டிப் பிழைப்பது மேலாம்'' என்னும் மூதுரை மூலம் மேலும் தெளிவாகின்றது. செய்யுள் இலக்கணத்தை விளக்கும் யாப்பருங்

(18ஆம் பக்கம் பார்க்க)

மூன்றாவது
ஆண்டு நிறைவுச்

# தமிழீழத் தேசியப் பண்பாட்டின் வேர்

மு. திருநாவுக்கரசு

தென்னாசியப்பிராந்தியத்தின் கலாசார வரலாற்றில் ஈழத் தமிழ்க் கலாசாரத்திற்கு ஒரு சிறப்பிடமுண்டு. தேசியஅடையாளத்தில் கலாசாரம் ஓர் இன்றியமையாத கூறாய்இருக்கிறது.

கலாசாரம் பற்றிய அமில்கார் கப்றாலின் மதிப்பீடு மிகவும் சரியானது. கலாசாரமானது மக்களின் வரலாற்றுக் கனியாகவும், அதேவேளை அது வரலாற்றை நிர்ணயிக்கும் ஒரு காரணியாகவும் இருக்கின்றது எனக் கப்றால் கூறுகிறார். அவரது முக்கிய கருத்துக்கள் சிலவற்றை நோக்குவோம்.

ஒரு மலரானது அதன் தாவரத்தில் இருந்து உருப் பெறுவது போல, கலாசாரமானது அதன் குறித்த வரலாற்றிலிருந்துபிறப்பெடுக்கின்றது.

கலாசாரமானது சமூக விளை நிலைத்தில் வேர்விட்டு அது சமூகத்திலிருந்து பிறக்கும் சத்திலேயே வளர்கின்றது. சமூக நரம்பு மண்டலத்தின் கூட்டு மொத்த உயிரோட்டத்தை கலாசாரமே பிரதிபலிக்கின்றது.

இவ்வாறாக கலாசாரத்தின் வேரையும் விழுதையும் கப்றால் வடிவுற விளக்கினார். தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலாசாரத்தின் அத்தியாவசியத்தையும் அதன்செழுமையான பக்கங்களையும் தெளிவுற எடுத்துரைத்தார். ஆக்கிரமிப்பாளர்கள் ஒரு மக்கள் கூட்டத்தை வெற்றிகொள்வதற்கு கை வைக்கும் முக்கிய துறை கலாசாரமே என்பதை இவர் சுட்டிக்காட்டினார். கிட்லர் தனது இனத்தைஒன்றுபடுத்தி தனது ஆட்சியை ஸ்திரப்படுத்தவும், மற்றைய இனங்களை அழிக்கவும் கலாசாரத்தை ஒரு முக்கிய கருவியாகக் கையாண்டான் என்பதை எடுத்துக் கூறுகிறார்.

அதாவது ஆரியர் உயர்ந்த கலாசாரத்தை உடையவர்கள் என்றும் யூதர்களும், மாக்ஸிஸமும் உயர்ந்த ஆரியக் கலாசாரத்தைப் பாழாக்கும்நஞ்சுகள் என்றும்ஆதலினால்இவை இரண்டும் முதலில் அழிக்கப்படுவதன் மூலமே தூய ஆரியக் கலாசாரத்தைப் பாதுகாத்து வளர்க்கலாமென்றும் கூறி ஜேர்மானியர்களுக்கு போதையூட்டி அதன் மூலம் ஆட்சியதிகாரத்தை இலகுவாகவே கைப்பற்றிக் கொண்டான். மேலும் கறுப்பினமக்களையும் கலாசாரத்தின் எதிரிகள் என வர்ணித்த இவன் காலகதியில் அவர்களும் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்றான். எனவே கிட்லர் பிற இன அழிப்புக்கும் தனது வளர்ச்சிக்கும் கலாசாரத்தையே முன்னிறுத்தியிருந்ததைக் காணலாம்.

காலனித்துவ ஆதிக்கத்தின் பொருட்டு ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க நாடுகளுக்குப்படையெடுத்த ஐரோப்பியர் கூறிய முக்கிய கருத்து என்னவெனில் காட்டுமிராண்டிகளாகவாழும் சுதேச மக்களைத் தாம் கலாசார மயப்படுத்தப் போவதாகக் கூறினார்கள். ''நாகரிகமற்ற'' ஆசிய, ஆபிரிக்க மக்களையும், மற்றும் அமெரிக்க கண்டங்களில் வாழ்ந்த செவ்விந்தியர், எஸ்கிமோ இனமக்களையும் ''நாகரிகப்படுத்துவதே'' தமது பணியெனக் கூறினார்கள்.

ஆனால் உண்மையில் இந்த ஐரோப்பியர்களால் கலாசாரத்தின் பெயரால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பும் அவர்களின் அநாகரிகப் பரப்பலும் வரலாற்றின் கறை படிந்த அத்தியாயங்களாகும்.

எனவே அழிப்புக்கும் சரி, ஆக்கத்திற்கும்சரி கலாசாரம் ஓர் இன்றியமையாத ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதே இங்கு தெளிவாகக் கண்டு கொள்ளக்கூடிய உண்மையாகும்.

ஆதலினால் மனிதன் தனது வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும், தன்னைச் செழுமைப்படுத்தவும், போராடவும் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய துறையாய்க் கலாசாரம் உள்ளது.

ஒரு குறித்தவரலாற்றுச் சூழலினதும், அதன் மொத்த வரலாற்று வளர்ச்சியினதும் திரட்டப்பட்ட கனியே கலாசாரம் என்பது. தொன்று தொட்டு வளர்ந்து வந்த கலாசாரமானது நவீன சூழலில் அது தேசியப் பரிணாமத்தை அடைந்து தேசியப் பரிமாணம் பெற வேண்டும். வெறும்பழமைமட்டு மல்ல அது தனது தொன்மையுடன் புதுமெருகு பெறவேண்டும்.

இவ்வாறாகத்தென்னாசியப் பிராந்தியத்தின் அதி தொன்மைவாய்ந்த கலாசாரமானது தமிழீழ மண்ணிற்தான் தனது தொன்மை வேருடனும் உயிருடனும் இருக்கின்றது.

தென்னாசியாவில் தொன்மை வாய்ந்த நாகரிகத்தைக் கொண்ட மக்கள் சிந்து வெளிப் பரப்பில்நகர நாகரிகம் அமைத்து வாழ்ந்து வந்தனர். சிந்து வெளிப் பரப்பில் அதன் நகர நாகரிகம் இருந்தபோதிலும் அதன் கலாசாரச் சிறகுகள் தெற்கு நோக்கி இலங்கை வரை பரந்திருந்தன. சிந்து வெளி தென்னாசியப் பிராந்தியப்பண்பாட்டின் தலைநகராய் இருந்தது. ஏறக்குறைய இன்றைய தென்னாசியா முழுவதும் திராவிட மூலப் பண்பாடு பரவியிருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் ஆனைக்கோட்டையில் மேற்கொண்ட ஓர் அகழ்வாய்வின் போது கண்டெடுத்த இற்றைக்கு ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குக் குறையாத பழமை வாய்ந்த முத்திரையில் சிந்துவெளி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது சிந்துவெளிக் கலாசாரப் பரம்பலின் ஒரு விளிம்பாய் இலங்கைத் தீவு இருந்துள்ளது என்பதை உணரவைக்கின்றது. மற்றும் வாழ்முறை அம்சங்களும் இதன் கலாசார நீட்டத் தன்மையை நிரூபிக்கின்றன எனலாம்.

துரதிஷ்ட வசமாகதொடர்ச்சியான படையெடுப்புக்களினால் இக்கலாசாரத் தொடர் சங்கிலி ஆங்காங்கே அறுக்கப்படலாயிற்று. வடமேற்கே இருந்து ஏற்படும் படையெடுப்பின் போதெல்லாம் இக் கலாசாரம் தெற்குநோக்கி ஒதுங்கலாயிற்று. இதனால் ஒப்பீட்டு ரீதியில் தெற்கு ஓர் அடைக்கலப்பிரதேசமாயிற்று. தெற்கே இலங்கை ஒரு தீவாக இருந்தமையால் இதன் பாதுகாப்புத் தன்மை மேலும் அதிகமானதாய் இருந்தது.

வடக்கே சிந்துவெளி நாகரிகத்தை அழித்த 'ஆரியர்' அங்கு தமது நாகரிகத்தை பெரிதும் ஸ்தாபித்த போதிலும் பின்பு இஸ்லாமியப் படையெடுப்பின் போது வட இந்தியர் தமது கலாசார அம்சங்களுக்கான அடைக்கலப் பிரதேசமாய் தெற்கையே பாவித்தனர். கலை, மற்றும் சமய அம்சங்கள் ஈறாகப் பல அம்சங்கள் தெற்கிலேயே பேணப்பட்டன. குறிப்பாகஇற்றைக்கு ஈராயிரத்து முந்நூறு ஆண்டுகள் பழமைவாய்ந்ததும் கௌடில்யரால் எழுதப்பட்டதுமான அர்த்தசாஸ்திரம் எனும் இராஜதந்திர நூலின் சமஸ்கிருத பிரதி 1906 ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் காஞ்சியிற் கண்டெடுக்கப்பட்டது. அர்த்தசாஸ்திரத்தின் மொழிப்புரைப் பிரதிகள் இரண்டு மலையாள மொழியில் கேரளாவில் கண்டெடுக்கப்பட்டன. தென்னிந்தியாவில் இம் மூலப்பிரதியும் பொழிப்புப்பிரதிகளும் கண்டெடுக்கப்படாது இருந்திருந்தால் அர்த்தசாஸ்திரம் என்ற இப்பழம் பெரும் நூல் உலகிற்குக் கிடைத்திருக்காது. இந்த வகையில் பல வகையிலும் தெற்கே அடைக்கலப் பிரதேசமாய் திகழ்ந்துள்ளது.

பொதுவாகத் தெற்கும், தீவுத் தன்மையால் தென்னிந்தியாவைவிட இலங்கையும் இலங்கைத் தீவிற்குள் பிரதேசத்தன்மையாலும்அமைவிடத்தாலும் தமிழீழ மண்ணும், அதிக பாதுகாப்புப்பிரதேசமாய் உள்ளது.எனவே தமிழீழ மண்ணே ஆதித்தென்னாசியக் கலாசாரத்தினது இறுதித் தங்குமிடமாய், அடைக்கலப் பிரதேசமாய் உள்ளதெனலாம்.

ஒப்பீட்டு ரீதியில் தென்னிந்தியாவில் ஏற்படும் கலாசாரக் கலப்பை விடவும் இலங்கையில் ஏற்படும் கலாசாரக்கலப்பும் சிதைவும் குறைவானதே ஆகும். அதிலும் தமிழ் மண் இன்னும் அதிகம் பாதுகாக்கப்படக்கூடிய தன்மை வாய்ந்ததாகும்.

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டநிலையில் முழு இலங்கைத் தீவையும்எடுத்துக்கொண்டால் சிந்துவெளி நாகரிகத்தின் தொன்மையைக் கூறின் ஒரு தொடர் மக்கள் கூட்டமாய் இலங்கையில் வாழ்ந்த மக்கள் அனைவரும் காணப்பட்டனர். இன்றைய சிங்கள பௌத்தப் பண்பாடு இதிலிருந்தே பிற்காலத்திற் தோன்றியதாகும் இன்றும் சிங்கள பௌத்தர்களிடம் திராவிட மூலப் பண்பாட்டம்சங்கள் நிலவுவதை காணலாம் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள சிறு தெய்வ வழிபாடும், 'கபுறால' மார் போன்றஅமைப்பு தொடர்ந்தும் இவற்றை நிரூபிப்பவையாய் உள்ளன. ஆனால் பௌத்த மதத்தின் வருகையின் பின்பு ஏற்பட்ட ''ஆரியமயமாக்கலும்'' பிற்காலத்தில் ஏற்பட்ட அந்நிய ஆதிக்கமும் தொடர்புகளும் இதில்விரைவான மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

வடபகுதி ஓர் ஒதுக்குப்புறம் என்பதுடன் வரண்ட பிரதேசமாகவும் இருந்தமையால் அந்நியர்களின் அக்கறை இங்கு குறைவாகவே இருந்தது. ஆதலினால் அது தனது கலாசார மூலங்களை ஒப்பீட்டுரீதியிற் தொடர்ந்து பேணி வளர்க்கக் கூடிய தன்மையதாய்க்காணப் படுகின்றது.

இந்த வகையில்சிந்துவெளிக் கலாசாரத்தின் மூல அலகின் ஒரு பரம்பக்கூறு தமிழீழ மண்ணில் எஞ்சியிருக்கின்றது. என்று கூறலாம். எனவே ஒரு பெரும் செழுமையான கலாசாரப் பரப்பின் சொந்தக்காரராகிய தமிழ் மக்கள் ஈழ மண்ணில் சுருங்கியுள்ளோமாயினும்ஈழத்தமிழரேதொன்மையின் தொடர்வளர்ச்சியின் எஞ்சியிருக்கும் ஒரு முக்கிய பகுதியினர் ஆவர்.

எப்போதும் ஒரு மக்கள் கூட்டம் தனது கலாசார மூலத்தை அடையாளம்காண வேண்டுமென கப்றால் கூறுவது போல ஈழத்தமிழரின் கலாசார மூலம் சிந்துவெளிக் கலாசாரத்துடன் தொடர்புடையது.

சிந்துவெளிக் கலாசாரம் திராவிட மூலத்தைக்கொண்டதென்பதையும் அதன் உன்னதங்களைப் பற்றியும் ஜவஹர்லால் நேரு புகழ்ந்தெழுதியுள்ளார். ஆரியர் வருகையின் பின்பேநிற அடிப்படையிலான வர்ணப் பாகுபாட்டால் பிற்காலத்திற்சாதிப்பாகுபாடு ஏற்பட்டதைப் பற்றியும் அவர் எழுதியுள்ளார்.

உண்மையிற் சிந்துவெளி மக்களோ அதன் நாகரிகப் பரப்பிற்குட்பட்ட அக்காலத் தென்னாசிய மக்களோ சாதிப் பாகுபாடற்ற உயர்ந்த பண்பாட்டுடன் வாழ்ந்துள்ளனர். இந்தியாவை விடவும் இலங்கையிற் சாதிப்பாகுபாடு மற்றும் தீண்டாமையின் உக்கிரம் ஒப்பீட்டுரீதியிற் குறைவு.ஆதலினால் சாதிப்பாகுபாடற்ற உன்னதமான ஒரு பண்பாடு எமது மூதாதையரிடம் இருந்துள்ளதையும் ஒப்பீட்டுரீதியில் அதன் பாதுகாப்பு எமதுமண்ணிலேயே அதிகம் உள்ளது என்பது தெரிகின்றது.

மொத்தத்தில் தமிழீழத் தேசிய கலாசாரத்தின் ஆணிவேரைச் சிந்துவெளிக் கலாசாரப் பரம்பலில் இருந்து அடையாளம் காண்பதுடன் அதனை நவீன தேவைக்கு மேற்ப மெருகிடவும் வேண்டியது அவசியமாகும். பொதுவில் தொன்மைக்கு ஒரு மெருகுண்டு. சிந்து வெளியை தலைநகராகக் கொண்ட தொன்மை வாய்ந்த கலாசாரத்தின் வாரிசுகளால் எஞ்சிநிற்கும் ஈழத்தமிழர் உலகிற்கு உயிருள்ள தொன்மை கலாசாரத்தின் எடுத்துக் காட்டுக்களாய் விளங்க வேண்டியவர்கள் என்பதிற் சந்தேகமில்லை.

நீண்ட பெரும் வரலாற்றனுபவத்துடன் அதன் அறுவடையாய் ஒரு கலாசாரத் தொல்கனியை உலகிற்கு வழங்க வேண்டிய பொறுப்பு இன்று ஈழமண்ணுக்கு உண்டு.

## மயக்க மருந்து கொடுக்கும் கம்பியூட்டர்

இன்றைய உலகம் கம்பியூட்டர் உலகம் என்று சொல்லக் கூடியளவுக்கு கம்பியூட்டர் துறை உலக மக்களிடம் பிரபல்யம் பெற்று வருகின்றன. கம்பியூட்டர் துறையின் வளர்ச்சியும் அளப்பரியது. விஞ்ஞானம் மருத்துவ துறையில் அளவுக்கதிகமான சேவை புரிந்து வருகின்றது.

எதிர்காலத்தில் சத்திர சிகிச்சையின் போது நோயாளிகளுக்கு மயக்க மருந்து கொடுக்கும் வேலையையும் கம்பியூட்டரே செய்யப் போகின்றது. நோயாளியின் நிலைமைக்கு ஏற்ப தேவையான அளவு மயக்க மருந்தை கொடுக்கும் மருத்துவ துறையில் கம்பியூட்டர் சேவை வியப்புக்குரியதே!.

மூன்றாவது

மூன்றாண்டை பூர்த்தி செய்யும்

ஈழநாதத்திற்கு

எமது நல்வாழ்த்துக்கள் !

வளரும் ஆண்டுகளிலும் அதன் இலட்சியம் ஈடேற வாழ்த்துகிறோம்

# சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிட்டெட்

## General Hardware Merchants

**சகல விதமான**

**தராசுகள் பழுது பார்த்தல், சீர் செய்தல், முத்திரையிடல்**

**ஆகியவற்றுக்கு தொடர்பு கொள்ளவும்**

*விற்பனை நிலையம்:*
206, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

*தொழிற்சாலை:*
17, செம்மணி வீதி,
நல்லூர்.

சி 5982

நான்காம் ஆண்டில் பிரவேசிக்கும் ஈழநாதத்திற்கு
எமது வாழ்த்துக்கள்!

# எவர் விஷன்

21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

வீடியோ கமரா திருத்தலும், வீடியோ படப்பிடிப்பு செய்பவர்களும்.

---

நான்காம் ஆண்டில் கால் பதிக்கும் ஈழநாதம் பத்திரிகைக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

# குணம் அன்கோ.

21A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

சகல விதமான மணிக்கூடுகளும் திருத்துபவர்கள்

சி 5980

நான்காம் ஆண்டில் வீறுடன் நுழையும்

ஈழநாதத்திற்கு

எமது வாழ்த்துக்கள்

**கடந்த ஆண்டுகளைப்போலவே வரும் ஆண்டுகளிலும்**
**அதன் பணி சிறக்க வாழ்த்துகிறோம்.**

# யாழ் கண்ணாடி நிலையம்

இல. 234, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

# எக்ஸ்போ பேணிச்சர்ஸ்

இல. 441, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

சி 5981

மூன்றாவது

# யுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் நடுவில் பிரேமதாசா தடுமாறுகிறாரா?

நிலாந்தன்

அங்கிலிக்கன் ஆயரின் சமாதான முயற்சிகள் அவற்றின் வேகத்தை இழந்து விட்டன போல் தோன்றுகிறது.

இப்பொழுதுகத்தோலிக்கத் திருச்சபையின் மன்னார்ஆயர் கொழும்பு போயிருக்கிறார்.

யாழ்ப்பாண ஆயரின் முறையீடொன்றையும் அவர் எடுத்துச் சென்றிருக்கிறார்.

திரும்பவும் திரும்பவும் துறவிகளே சமாதானத்தின் தூதுவர்களாக வந்து போகும் நிலை.

யுத்தத்திற்காக எந்த ஒரு விலையையும் செலுத்தத்தயாராயிருக்கும் ஒரு நாடு சமாதானத்திற்காகச் சில துறவிகளை மட்டும் பேச விட்டிருக்கிறது.

இங்கு,சமாதானம்என்பதை அதன் மிகச் சாத்தியமான அர்த்தத்தில் நாங்கள் வரையறை செய்து கொள்ள வேண்டும். வேண்டுமானால் அதைச் சகஜநிலை என்று சொல்லலாம்.

இப்படிப்பட்ட ஒரு சமாதானத்தின் விலையும் கூட, யுத்தத்தின் விலையையும் விட அதிகமாயிருக்கிறது என்பதே இங்குள்ள முக்கிய பிரச்சினை ஜனாதிபதி பிரேமதாஸ அப்படியொரு விலையைச் செலுத்தத் தயாரா?

தமிழர்களில் ஒரு பகுதியினரும் சிங்களவர்களில் பெரும் பகுதியினரும் பிரேமதாஸ ஏதாவது ஒரு சமரசத்திற்கு இணங்கிவரக் கூடியவர்என்றே கருதுவது போல் தோன்றுகிறது.

தமிழர்களிடமும் சிங்களவர்களிடமும் காணப்படும் மேற்படி முற்கற்பிதம் சற்றுமிகைப்படுத்தப்பட்டதும் கற்பனைகள் கலந்ததும் என்று சில விமர்சகர்கள் கூறிவருகிறார்கள்,

கொழும்பிலிருந்து வெளிவரும் ஏரிக்கரைப் பத்திரிகைகள் அல்லாத ஏனைய பத்திரிகைகள் சகலதும் குறிப்பாக ''ராவய'' ''யுக்திய'' போன்றன. இப்படிப்பட்ட முற்கற்பிதத்தின் மீது செய்திகளையும் பத்திகளையும் பிரசுரித்து வருகின்றன.

போர் முனையில் அமைதியாகக் காணப்பட்டால் இப்பத்திரிகைகள் அரசாங்கம் புலிகளோடு ஏதோ ஒரு ரகசியப் புரிந்துணர்விற்கு வந்து விட்டது என்று எழுதுகின்றன. அல்லது இராணுவம் பெரிய அளவில் படையெடுக்கும் போது புலிகள் தந்திரோபாயமாகப் பின்வாங்கிவிட அதனால் இராணுவம் குறைந்தளவு சேதங்களோடு சிலபகுதிகளைப் பிடிக்குமானல் இது புலிகளும், அரசும் ஏற்கனவே திட்டமிட்ட ஒரு நாடகம் என்று மேற்படி பத்திரிகைகள் எழுதுகின்றன. யுக்திய,பிரேமதாஸவைச் ''கொழும்பிலிருக்கும் ஒரு புலி'' என்று வர்ணிக்கின்றது. 'ஐலண்ட்' பத்திரிகையின் பத்தி எழுத்தாளர்கள் யுத்தத்தைக் குறித்து அரசாங்கத்திடம் திட்டவட்டமான சிந்தனைகள் இல்லையென்று விமர்சிக்கிறார்கள். இராணுவம் இறுதியாக எதைச் சாதிக்க வேண்டும் என்பதில் அரசிடம் உறுதியானதும்தொடர்ச்சியானதுமான திட்டங்கள் இல்லாதது தான் கடந்த ஆண்டில் துருப்புக்கள் மோசமான பின்னடைவுகளைச் சந்திக்க காரணம் எனவும் அவர்கள் எழுதி வருகிறார்கள். அதாவது ஜனாதிபதி பிரேமதாஸ யுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் நடுவில் தடுமாறுகிறார் என்று பெரும்பாலான சிங்களவர்கள் குறிப்பாக எதிர்க்கட்சிகள், பத்திரிகையாளர்கள் புத்திஜீவிகள், பிக்குகள் போன்றோரும், ஒரு பகுதி தமிழர்களும் நம்புகிறார்கள்.

பிரேமதாஸ பற்றிய இத்தகைய முற்கற்பிதங்களோடிருப்பவர்கள் அதற்குச் சில காரணங்களைக் கூறுகிறார்கள். முக்கியமானது,அவர் ஒருகடும் இந்திய எதிரி எள்பது. முன்னரும் இந்திய எதிர்ப்பில் அவரும் புலிகளும் ஒரே கோட்டில் சந்தித்திருக்கிறார்கள். புலிகளுடனான சமாதானத்தின் பெறுமதிபிரேமதாஸவிற்குஏற்கனவே நன்கு தெரியும்.

மேலும், மேற்படி முற்கற்பிதக்கோடிருக்கும்பலரும்பிரேமதாஸ சிங்கள உயர் குழாத்தைச் சேர்ந்தவரல்ல என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்கள். அவற்றிற்கும் உயர் குழாத்துக்குமான முரண்பாடுகள் நிரந்தரமானவை.இந்தமுரண்பாடுகளே அவரைஒரு கடும் இந்திய எதிரியாகஉருவாக்கின என்றும், ஒப்பீட்டளவில் அவரிற்கு முன்பிருந்த சிங்கள உயர் குழாத்தைச் சேர்ந்த அரசுத்தலைவர்களை விட தமிழர்களோடு அதிகபட்ச உடன்பாட்டிற்கு வரக்கூடியவராகஅவர் காணப்படுவதிற்கும் இதுவே காரணம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் பிரேமதாஸபற்றிய மேற்படி முற்கற்பிதத்தைக் தமிழர்கள் எச்சரிக்கையுணர்வோடு ஆராய வேண்டியிருக்கிறது என்று கூறும் யாழ்ப்பாணத்திலுள்ள சில விமர்சகர்கள், பிரேமதாஸாவின்இந்திய எதிர்ப்பை ஒரு மாறாக் கணியமாகக்கொள்ளக்கூடாது என்பதை வற்புறுத்துகிறார்கள். அரசியலில் நிரந்தர நட்போ, பகையோ இல்லை என்பதை நினைவுபடுத்தும் இவர்கள் சமீப காலங்களில் பிரேமதாஸ புதுடில்லியை நோக்கி மெல்லச்சாய்ந்துசெல்வதையும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

புலிகளுடனான சமாதானத்தின்பெறுமதிபிரேமதாஸவிற்கு நன்கு தெரியும்தான். ஆனால் ஐ.பி.கே.எவ். விலகிய பின் மூன்று மாதங்கள் மட்டுமே நீடிக்கக்கூடியதாயிருந்த மேற்படி சமாதானத்தை, அதுஉருவாகிய காலகட்டத்திற்குரிய விஷேசமான அரசியல் பின்னணிகளிற்கூடாகவே புரிந்து கொள்ளவும் வேண்டும். அப்பொழுது ஐ.பி.கே.எவ் நிலைகொண்டிருந்ததுஜே. வி. பி. கொழும்பை முற்றுகையிட்டிருந்தது. இந்நிலையில் புலிகளுடனான சமாதானம் பிரேமதாஸவிற்கு இன்றியமையாததாகஇருந்ததுஅதன்தொடர்ச்சியாகஅவரால் ஜே.வி.பியை நசுக்கவும் முடிந்தது. ஆனால் நிகழும் இரண்டாவது ஈழப் போரில் அத்தகைய இன்றியமையாத தேவைகளோ, வெளிநிர்ப்பந்தங்களோ அவருக்கில்லை. சிங்களவர்கள், இனி யுருவாகக் கூடிய எந்த ஒரு இணக்கத்தையும், இரண்டாவது ஈழப்போரின் படிப்பினைகளிற்கூடாகவே பார்க்கப் போகிறார்கள். இவ்வாண்டு சிங்களவர்களிற்கு ஒரு தேர்தல் ஆண்டு. எனவே பிரேமதாஸ தனது தேர்தல் வெற்றிகளை சமாதானத்திற்காகப் பணயம் வைக்கத் தயாராயிருப்பாரா?

அடுத்தது பிரேமதாஸஉயர் குழாத்தைச் சேர்ந்தவரில்லை என்பது சிங்கள உயர் குழாம் பிரேமதாஸாவைச் சசிக்கமுடியாமலிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.. உயர்குழாத்திற்கும்அவரிற்கும் இடையிலான முரண்பாடுகளே அவருடைய அரசியலைப் பெரிதும் தீர்மானிக்கின்றன. சிங்கள ஆட்சிஎந்திரம் எப்பொழுதும் உயர் குழாம் மயப்பட்டதாகவே காணப்படுகிறது. இராணுவம் பத்திரிகைகள், புத்திஜீவிகள் போன்ற சகல இனவாத மையங்களிலும் உயர்குழாம் பலத்தோடிருக்கிறது இங்கு பிரேமதாஸ ஒரு தனியன். திறமைசாலிகளான ஆனால் அரசியல் பலமற்ற அதிகாரிகளைத்தான் அவர் தன்னோடு வைத்திருக்கிறார். இந்த அதிகாரிகளின் ஆட்சி பலதடவை உயர்குழாத்தின் தாக்குதல்களிற்கு இலக்காகியுள்ளது. இது பிரேமதாசாவை எப்பொழுதும் தற்காப்பு நிலையில்வைத்திருக்கிறது. தனது ஸ்தானத்திற்கு அச்சுறுத்தலாக வளராத வரை உயர்குழாத்தை அதன் போக்கில் விட அவர் தயார். இத்தகைய தற்காப்பு நிலையிலிருந்தே ஈழப்போரையும் அவர் கையாண்டு வருகின்றார். இத்தற்காப்பு நிலையிலிருந்து அவர் உருவாக்கியதே தெரிவுக்குழு. அது அவருடைய இயலாமைகளின் குழந்தை. இத்தற்காப்பு நிலைதான் பல சமயங்களில் அவர் யுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் நடுவில் தடுமாறுவது போன்ற தோற்றத்தையும் தருகிறது.

சிங்கள உயர்குழாம் ஈழப்போரில்இராணுவத்தீர்வையே நம்பிக்கையோடு பார்க்கிறது. தோற்கடிக்கப்பட்ட தமிழர்களோடு அல்லதுபுகலிடம் தேடி வரும் தமிழர்களோடு பேரம் பேசுவதைத்தான் அது பேச்சுவார்த்தைகள் என்றோ சமாதான முயற்சிகள் என்றோ காட்ட முயற்சிக்கிறது. குறிப்பாகஇரண்டாவது ஈழப்போர் உயர் குழாத்தின் பிடியிலுள்ள இராணுவத்தை கொழும்பில் மகாசங்கங்களிற்கு நிகரானதீர்மானிக்கும் சக்திகளில் ஒன்றாகஉருவாக்கியிருக்கிறது. இராணுவம் தனக்குப் பாதகமான விதத்தில் வீங்கியிருப்பது பிரேமதாஸவிற்குத்தெரிகிறது. தளபதிகளிற்கிடையிலான முரண்பாடுகளைக் கையாள்வதின்மூலமும் பேணுவதின் மூலமும் இராணுவத்தின் மீது தனது பிடியை ஸ்திரப்படுத்துவதற்காகஅவர் கடந்த ஆண்டு முழுவதும் இராணுவ உயர் பீடத்தில் பல திடீர் மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது. கடந்த ஆண்டு இராணுவத்திற்கு ஒரு படு மோசமான தோல்வியாண்டாக அமைந்து விட்டதிற்கு இதுவும் ஒரு காரணம். சமீபத்திலும் கூட்டுப் படைத்தலைமையகம் அநுராதபுரத்திற்கு இடம்மாற்றப் பட்டதை மேற்படி தளபதிகளிற்கிடையிலான முரண்பாடுகளைக் கையாளும் நோக்கில் செய்யப்பட்டதாகக் கருத இடமுண்டு. இராணுவத்தின் மிகை வளர்ச்சி ஈழப்போரைத் தீர்வுகளற்றதாக்கிய முக்கிய காரணங்களில் ஒன்று. இன்று கொழும்பில் சிங்கள அரசியல் வாதிகள், புத்தி ஜீவிகள்,பத்திரிகையாளர் போன்றோரின் விமர்சனங்களிற்கு ஆளாகாத ஒரேசலுகை பெற்ற அமைப்பு இராணுவம்தான். எல்லாருமாகச் சேர்ந்து இராணுவத்திற்கு ஒரு வித புனிதத் தன்மையைக் கொடுத்துவிட்டார்கள். இத்தகைய விமர்சனங்களிற்கு அப்பாற்பட்ட புனிதத்தன்மைகளைப் பெற்றிருந்த அல்லது ஐதீகத் தன்மைகளைப் பெற்றிருந்த மறைந்த தளபதி கொப்பேகடுவ கடந்த ஒகஸ்றில் யாழ்ப்பாணத்தைத் தாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தார். கொழும்பில் புலிகளுடான இறுதிக் கணக்கைத் தீர்க்கும் நிகழ்ச்சி என வர்ணிக்கப்பட்ட மேற்படிதாக்குதல் திட்டம் மானிப்பாயும் உட்பட வலிகாமத்தின் ஒரு பகுதியையும் யாழ்நகரத்தையும் லைடன் தீவுகளுடன் இணைப்பதை இலக்காகக் கொண்டிருந்தது. முழுத்தீவையும் யுத்தத்தின் மீட்சியற்ற குருதி சிந்தும் வழியில் இட்டுச் செல்லக்கூடிய மேற்படி தாக்குதல் திட்டத்திற்கு பிரேமதாஸ (முன்சொன்ன முற்கற்பிதங்களின் படி) எத்தகைய தடுமாற்றமும் இன்றி ஒப்புதல் தந்திருந்தார். அதாவது கடந்த ஒகஸ்றிலேயே அவர் புலிகளோடான சமாதானத்தை இழப்பதற்குச் சித்தமாயிருந்தார்.

ஆனால் அராலி வெளியில் வெடித்த நிலவெடி யுத்தமுஸ்தீபுகளில் ஈடுபட்டிருந்த முக்கிய தளபதிகளை அவர்கள் எதிர்பாராத ஒரு தருணத்தில் எதிர்பாராத ஓர் இடத்தில் ஒரேடியாகச் சாய்த்துவிட்டது. யாழ்ப்பாணத்துக்கான சமர் மேலும் ஒரு தடவை ஒத்திவைக்கப்பட்டது (பிரேமதாஸ பற்றிய முன்சொன்ன முற்கற்பிதங்களோடிருக்கும் சிங்களவர்கள் அராலிச் சம்பவத்தை மேற்படி முற்கற்பிதங்களிற்கூடாகவே பார்க்கிறார்கள். அவர்கள் இப்பொழுதும் பிரேமதாஸாவைச் சந்தேகிக்கிறார்கள்.)

மேற்படி சம்பவத்தின் பின்னரான கடந்த ஐந்து மாதங்களிலும் இராணுவம் மேற்படி தாக்குதலின் அதிர்ச்சியிலிருந்து மீள்வதிலும் இழப்புக்களை ஈடுசெய்வதிலும், துருப்புக்களிற்குப்புதியபிரகாசமான நம்பிக்கைகளை ஊட்டுவதிலும் ஈடுபட்டு வருகின்றது. ஈழப்போரில் இராணுவம் நீண்டகாலத்திட்டங்களோடும் தயாரிப்புக்களோடும் இருப்பதைஅவதானிகள் ஏற்கனவே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். கடந்த ஆகஸ்டில் யாழ்ப்பாணத்தைத் தாக்குவதாயிருந்த திட்டம் ஒத்திவைக்கப்பட்டதேயெனினும் அதன் பின்னரான கடந்த ஐந்துமாதகாலங்களிலும் இராணுவம் முற்றுகையை மேலும் இறுக்குவதில் முயன்றுவருகிறது. இருவருடங்களிற்கு மேலான பொருளாதார தடையும்,குடாநாட்டை அதன் வாசல்கள் தோறும் முற்றுகையிட்டதும், யாழ்ப்பாணத்துக்கான சமரை ஆரம்பிப்பதற்குரிய முன்னோடித் தயாரிப்புக்கள்தான். இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானதிலிருந்து பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட யாழ்ப்பாணத்துக்கான சமரை, இந்த ஆண்டிலும் அவர்கள் ஒத்திவைப்பார்கள்என்று நம்புவதற்குரிய வாய்ப்புக்கள் மிகக் குறைவே பொருளாதாரத் தடையிலும், முற்றுகையினதும் ஆதாயங்களை அவற்றின் இறுதி வடிவத்தில் அநுபவிப்பதற்கு இராணுவம் விரும்புகிறது. இது அநேகமாக யாழ்ப்பாணத்துக்கான சமரில்தான் முடியும்.

இடையில் முற்றுகையைத் தளர்த்துவது என்பது இராணுவம் அதன் நீண்டகாலத் தயாரிப்புக்களிலிருந்து பின்வாங்குவதற்குச் சமம். இது குடாநாட்டுச் சமரை மேலும் ஒத்திப்போடுவதாகவே அர்த்தப்படும். முற்றுகையின் இறுக்கம் காரணமாக, சுமார் ஏழு மைல் நீளக் கிளாலிக் கடற்பரப்பு இப்பொழுது ஈழப்போரின் கவன ஈர்ப்பு மையமாக மாறியிருக்கிறது.

இனப்பிரச்சினையில் பேச்சுவார்த்தைகளை ஊக்குவித்து வரும் மேற்கத்தைய நாடுகளின் வற்புறுத்தல்கள், சிலசமயம் முற்றுகையைத் தளர்த்த (ஏதாவது ஒரு வழியை பயணத்திற்கு அனுமதிக்க) உதவக்கூடும். ஆனால், தெரிவுக் குழுவுவிற்கு வெளியிலானஎந்த ஓர்இரகசியச்சமாதான முயற்சியையும் பிரேமதாஸ தற்காப்பு நிலையிலிருந்தே அணுகுவார்.

( 18ஆம் பக்கம் பார்க்க)

புதிய
உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி.
யாழ்ப்பாணம்.

பாரதிதாசன்
கல்வி நிறுவனம்

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நியூ மாஸ்டர்
இன்ஸ்ரிரியூட்

B. M. C. லேன்,
யாழ்ப்பாணம்.

பட்டப் படிப்புக்கள்
கல்லூரி

148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

யூனிக்கோ
கம்பியூட்டர் சென்ரர்

இல. 37 மணிக்கூட்டு வீதி:
யாழ்ப்பாணம்.

விக்னா
கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# எழும் காலம் இதுவென உணர்த்தும்

# ஈழநாதம்

# 4 ஆவது ஆண்டில்

# வாழ்த்துகிறோம்!

# பல்லாண்டு வாழி!

வட இலங்கை
தொழில்நுட்பக் கல்லூரி

14, சென்பீற்றர்ஸ் லேன்,
யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக
கல்லூரி
C. C. A.

வெலிங்டன் சந்திக்கு அருகாமை,
யாழ்ப்பாணம்.

சாயி
மருத்துவக் கல்லூரி

இல. 10. பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

எடிசன் அக்கடமி
(யாழ். இந்துக் கல்லூரி அருகாமை)

41/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கலாலயா
நுண்கலைக் கல்லூரி

விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

நிரு
டியூசன் சென்ரர்

ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில்.

(சி-6009)

**ஈழநாதம்**
மூன்றாம் ஆண்டு நிறைவுப் போட்டி
முதலாவது பரிசுபெற்ற கவிதை

# இனியும் சுருண்டு படுக்காதே

பூமித்தாய் பூரித்துப் போனாள்
புதியதோர் தேசக்குழந்தையை
கருத்தரித்ததால்!

★ ★ ★

ஊர்ந்து துடிக்கின்ற தேசக் குழந்தையின்
உதைப்பினால் திகைத்துப் போயினர் ஏரோதின் புதல்வர்கள்!
இயேசு பாலனைக் கொன்றிடச் சொன்னோர்
மீண்டுமொரு முறை ஏகமாய்க்கத்தினர்
தொப்புள் கொடியைத் துணித்தேனும் கருச்சிதைவாக்குக!
காவலர் வந்தனர், வெட்டினர், கொத்தினர் சுட்டுக் கொளுத்தினராயினும்
பின் வெட்கினர் குருதியைத் தொப்புள் கொடியாய் ஆக்கியோர் முன்வெட்கி,
தலைகுனிந்தனர்
வெட்டவெட்டத் தழைத்திடு மந்திரமறியாது மலைத்தனர்; விழித்தவர்
தம் வித்தகர் கூடினர். நாற்றிசைப் பேய்களும் சாமரம் வீச
கற்றவர் ஆய்ந்தனர், கனக்கக் கதைத்தனர், முடிவாய் பட்டினி
விசத்தை மெல்லென வேற்றிக் கருவைக் கலைத்திடல் உத்தமமென்றனர்

★ ★ ★

உன்னுதிரத்தால் வளர்கின்ற குழந்தையப்பா!
அவன், பட்டினி விசத்தால்
பாதியில் தவறிடப் பொறுப்பதுவோ!
எழும்பு; எழும்பி ஏதாவது செய்; கொத்து
வெட்டு, குளங்களைக் கட்டு, உன்னுழைப்பயே விடமுறியாக்கு.
சும்மாயிருப்பதே சுகம் என்போர் மீது காறியுமிழ்.

ஏரோதுக்களுக்கெதிராய் ஏர்தனை யெடு
தெருவோடும், வயலோடும் பெரு மரங்களை நடு
கார்காலம் வெயிற்காலம் கனத்த பனிக்காலமென்ற
கதையினைக் கைவிடு காற்றோடும் மழையோடும்
ஈஞ்சடர்ந்த கட்டாந்தரையோடும் புதுக்கணக்கினைத் தொடங்கு
உன் உடலினை யங்கே செலவுவை!
குனிந்து நிமிர்ந்துன் தோள்களை வலிதாக்கு!
பிறக்கின்ற குழந்தைக்குன் தோள் கொடு அவன் நடை பயில
விடிகின்ற காலக் குளிரிற்காய் பசுமைப்பட்டாடையால் போர்த்து
ம், எழும்பு; எழும்பி ஏதாவது செய்து கொண்டேயிரு!

கி. சிவஞானம்


இதய நாதமாம் ஈழநாதம் நான்காவது ஆண்டில்
நுழைவதறிந்து வாழ்த்துகின்றோம்.
திக்கெட்டும் புகழ் பரப்பி வாழ்க! வாழ்க!!

ஐஸ் கோப்பி ஐஸ் ஜெலி
சொக்லெட் கிறிப்ஸ் ஸ்ரோபறி கிறீம்
குளிர்பான வகைகள் சிற்றுண்டி வகைகள்
மற்றும் கேக் வகைகளில்

தரம் நாடுவோர் யாழ். நகரில் தவறாமல் நாடும் இடம் :

**கல்யாணி கிறீம் கவுஸ்**
75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-6013)



புத்தூக்கம் தரும் புதினத்தாள்
ஈழநாதம்!
சித்திகள் பலபெற்று சிறக்கட்டுமென
வாழ்த்துக்கள் கோடி சொல்வோம்!

**லிங்கம் கூல் பார்**
52, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-6014)


## அப்புவும் நானும்

ஓடாதாம். என்ரை அவசரம் அதுக்கு விளங்குமோ ? . . . . இந்தச் சைக்கிளை ஓடுற நேரம்ஒரு தேங்காயெண்ணைப் பரலை உருட்டலாம். ஆருக்குச் சொல்ல. . . .?அண்ணைக்குச் சொல்லலாம். அண்ணை இல்லை. அண்ணை எங்கேயோ ஒரு வெளிநாட்டிலை படிச்சவர். அவையின்ரை பக்தியைப் பற்றியும் வழிபாட்டு முறைகளையும் அண்ணை சொல்லும்.

''பக்தி, வழிபாடு, மூட நம்பிக்கை மூன்றையும் எங்கட சனம் கலந்து போட்டுது. வழிபாடு, கேளிக்கையும் நல்லெண்ணெயிக்கை கடலை எண்ணெய் கலந்த மாதிரி வித்தியாசம் தெரியாதாம்''. அண்ணை அதிகம் கதையாது. சாம்பிராணிக்குச்சு எரியுற மாதிரி மெல்லிசாக் கதைக்கும் என்ரை தவிப்பு-ஆத்திரம்-எல்லாம் அண்ணைக்குத்தான் விளங்கும். அண்ணை தான் இல்லையே.

தூரத்தில வரவே முருகையன் கோவிலில சிதம்பரம் பிரசங்கம் பண்ணுவது கேட்குது. சிதம்பரம் என்றால் எனக்கு விருப்பம். தமிழைக் கேட்டால் சிதம்பரத்தின் வாயாலை கேட்க வேணும். தமிழமுதம் என்றால் அது தானே. சிதம்பரத்தின் பட்டிமன்றம் என்றால் விடமாட்டன். தேனிலை ஊறப்போட்ட முந்திரிகை வற்றல் மாதிரி ஒரே இனிப்பு. ஆனால் இண்டைக்கு ஏதோ ஒரு சினம். கோயில் நெருங்க நெருங்க சிதம்பரத்தின் குரல் பெரிதாக கேக்குது.

''முருகப்பெருமான் தமது அடியார்களின் பாவங்களைக் கழுவ மயிலேறி வந்து . . .''

ஐயோ! ஒலிபெருக்கியைப் புடுங்கி குளத்துக்கை எறியட்டோ. . . ? அப்பு மாதிரித் தான இந்த சிதம்பரம் எந்த நேரத்திலே எந்த உணர்ச்சியை மக்களுக்கு குடுக்க வேணும் என்று ஒரு விவஸ்தை வேண்டாம். உயிருக்கே பங்கம் வரப்போற நேரம் இவர் பக்தித் தாலாட்டுச் சொல்லி பக்தர்களை ஓராட்டுகிறாரோ? கோயில் நெருங்க நெருங்க எனக்கு கால்கள் சிலிக்கிட்டி அடிக்குது. ஒரு விதமான பயம் தெரியுது! அப்பாடா ஒரே சனம், ஒரு சேன சனம். இந்த சனம் வந்தது ஆருக்காக? முருகனுக்காகவா? சிதம்பரத்துக்காகவா? சீனி மூட்டையை எறும்பு மொய்ச்ச மாதிரி சிதம்பரத்தை மொய்த்து இருக்கிற இந்த பக்தி எறும்புகளுக்கு மலத்தியன் பவுடர் போடுவது எப்படி? நான் இதை ஆருக்குச் சொல்ல? அம்மாவுக்குச் சொல்லுவம். அம்மா சொன்னால் அப்பு கேட்பர். எனக்குத் தெரியும். வீட்டை போறன் அம்மா தோய்ஞ்சு கோயிலுக்கு போகப் போறா. முன் விறாந்தையில இருந்த எனக்கு அம்மா சொன்னது கேட்டது.

''குஞ்சு.... . வேட்டி எடுத்து கதிரையில போட்டிருக்கு தோஞ்சிட்டு கட்டிக் கொண்டு வா''.

கொழும்புச் சோடாவை உடைச்ச மாதிரி ஒரு கோவம் வந்தது. அம்மாவுக்கு கிட்ட போய்ச் சொன்னன்.

''அம்மா நீங்கள் சொன்னால் அப்பு கேட்பர்தானே''

''ஓமப்பு, நான் சொன்னால் அப்பு செய்வர். அவர் செய்யக்கூடியதைத் தான் நான் கேட்பன்''. போச்சு போச்சு மேல் றாக்கையால் விழுந்த சோடாப் போத்தல் மாதிரி என்ரை நம்பிக்கையும் சிதறிப் போச்சு.

''அம்மா இந்த சூரன் போர் நடத்த வேணுமா? ''

''ஓமப்பு சூரன் போர் முடிஞ்சாத்தானே பாறணை செய்யலாம்.''

ஐயோ அம்மாவுக்கே விளங்காதாம். ஆறு நாளும் விரதம் பிடிச்சஅம்மாவுக்குப்பாறணை தானே பெரிசு. இதுக்கு மேலை யோசிக்க அம்மாவுக்கு ஏலாது தானே. என்னை ஏன் ஒருத்தருக்கும் விளங்காதாம். எனக்கு வாற கோபத்துக்கு அப்புவின்ரை தலையில ஒரு பரல் மண்ணெண்ணெயை ஊத்தி யானைப் பெட்டியைத் தட்டி வைச்சால்என்ன?சீ. . . மண்ணெண்ணெய் இல்லாத நேரம் எப்படி இந்த யோசினை ஆருக்கு சொல்ல ..?

அப்பாச்சி ஆட்டடியில சேர்வை அரியுறா. அவவுக்குச் சொல்லுவமோ? அவவுக்கு விளங்காது. அவவுக்கு கிட்டப் போய் உரலில இருந்து கொள்ளுறன்.

''அப்பாச்சி யுத்தம் நடக்கிற நேரம் இல்லை. இந்த நேரம். இந்த நேரத்தில இந்தச் சூரன் போர் ஆட்ட வேணுமேனை. அப்புவுக்கு நீ சொல்லணை''.

அவ ஒன்றும் பேச இல்லை.

''மாவிட்டபுரத்தில முந்தி சூரன் ஆட்டுறவை. இப்ப இல்லை. அங்கை ஆமி. இஞ்சையும் வந்த பிறகே அப்பு உதை விடுவர்''. அப்பாச்சி பிறகும் பேசாமல் இருந்தா. எனக்கு பொறுமை இல்லை. எழும்பிப் போறன். அப்பாச்சி மெதுவா சொன்னது எனக்கு கேட்டது.

'குஞ்சுவுக்கு கோயில் குறை திருநீறு போடுவிக்க வேணும்'.

உரலைத் தூக்கி அப்பாச்சியின்ரை தலையில போட்டால் என்ன? அவ என்னில பிழை பிடிக்கிறா. எனக்கு கோயில் குறையாம். நான் என்ன பக்தி கூடாது என்டே சொல்லுறன். கடவுள் இல்லை என்டே சொல்லுறன். ஐயோ கடவுளே! அப்பு - அம்மா - அப்பாச்சி மூன்றுபேருமே என்னை விளங்காயினமாம். இன்னும் எத்தனை பேர் என்னில பிழை பிடிக்க போகினமோ?......?


நாலாவது ஆண்டை ஆரம்பிக்கும்
ஈழநாதம் தினசரிக்கு
அதன் பணி தொடர
வாழ்த்துகின்றோம்..

(சி-6021)

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


மூன்றாவது
ஆண்டு நிறைவுச்

## உன் சாவு எழுதும் சரிதம்

வவுனியா - திலீபன்

இலை அசையும்
சப்தம் போல
மனசுக்குள்
மெல்ல நீ கிசுகிசுக்கிறாய்!

நேற்றிராவும்
நீ என்னுடன் பேசிவிட்டே
சென்றாய்!

விழி திறக்கும் பொழுதில்
நீ எதிரே இராய்...
ஆனால்-
நினைவில்...
கனவில் எப்போதும் நீ
என்னுடன் தான்!
எப்படி.. எதை நான் சொல்ல...
உன் புனிதத் தியாகத்தைச்
சொல்லவா?
பூவைப் போல
நீ-
பூரித்துப் போராடச் சென்றதைச்
சொல்லவா
தோழனே!
இத் தேசத்தின்
சோகத்தைச் சுமந்துதிரிந்தவனே...
என் துக்கத்தைச் சுமந்து கொள்ள மாட்டாயா?

வன்னியின்
தகரைச் செடியும்,
கோரைப் புற்களும்
நீண்டு வளர்ந்து
வானையுரசும்
தேக்க மரங்களும்
அசைந்து அசைந்தே
உன் இசை பாடுகின்றன!
மழை வெள்ளத்தில்
மூடிப் பாயும்
பறங்கியாறு கூட
உன் பெயரை பாடுகின்றது,
நீ கேட்கிறாயா?
அடடா!
உன்னைத் தழுவிய
சாவு
உனக்கொரு
சரிதம் எழுதுகிறது
நண்பனே
இத்தேசத்தின்
இருட்டை
விரட்டச் சென்றவனே
உன்
குருதியின் நிறத்தில்
இதோ
சூரியன் மெல்ல.. இனிதாய்
உதிக்கப் போகிறது
விடுதலை
வெளிச்சம் பாயும்
மண்ணில்
உன் கல்லறையில்
என்
கண்ணீருக்குப் பதிலாக
கவிதை மலர் தூவப்படும்
என் கவிதையும்
அங்கே வீழும்
அது-உன்
எழுச்சியைச் சொல்லும்!

## மெழுகுவர்த்தி

வேலுவின் முழங்கால்காயத்திலிருந்து இன்னமும் இரத்தம் வழிந்து கொண்டிருக்கின்றது.

ஒருவாறு நால்வரும் கம்பி வேலியைத் தாண்டி மறுகாணிக்குள் வந்துவிட்டனர்.

அடுத்து என்ன செய்வது...? மூவரும் சேர்ந்து வேலுவைத் தூக்குகின்றனர் சிறிது தூரம் நகர்ந்திருப்பார்கள்...

... போராளிகளின் தாக்குதல் ஓய்ந்ததால் இராணுவத்தினரின் தாக்குதல் அதிகரிக்கின்றது. சரமாரியான குண்டுகள்...

ஒரு குண்டு குமரனின் காதுச் சோணையில் பட்டுத் துளைக்கின்றது !

வேலுவைக் கிடத்தி விட்டு மூவரும் நிலத்தில் படுக்கின்றனர். கம்பி வேலியால் இராணுவத்தினர் ஏறிப்பாய்கின்ற பாதணிகளின் ஓசை கேட்கின்றது.

''குமரன் நான் சொல்வதைக் கேள் என்னைச் சுட்டுப் போட்டுத் தப்பிச்சுக் கொள்ளுங்கோ..'' வேலு கூறுகிறான். அவனது வார்த்தைகளில் இலேசான ஆத்திரவுணர்வு தெரிகின்றது.

குமரன்
விடுதலைப் போராட்டத்தின் அச்சாணியில் குமரனின் சிந்தனைச்சக்கரம் சுழல்கிறது!

''குமரன் நான் சொல்றன் என்னை சுட்டுப் போட்டுத் தப்பிச்சுக் கொள்ளுங்கோ'' வேலு வேண்டுகோள் கலந்த கட்டளையாகக்கூறுகின்றான்.

குமரனின் மனதில் சிந்தனைச் சக்கரம் மிக வேகமாகச் சுழல்கிறது மிக வேகமாக சக்கரத்தின் சகல உணர்வுக் கூர்களும்மறைந்து... பனிப்புகார் வெண்மையாக..

விடுதலைப் போராட்டம் என்ற அந்த அச்சாணி மட்டும் தெளிவாகத் தெரிகின்றது..

''குமரன்.. நான் சொல்றன். உங்கடை தலைவன் வேலு கட்டளை இடுகிறான் என்னைச் சுட்டுப் போட்டுத் தப்பிச்சுக் கொள்ளுங்கோ'' வேலுவின் கண்டிப்பான கட்டளை! மாசுமறுவற்ற கட்டளை ! விடுதலை உணர்வு கொண்ட ஒரு ஆத்மாவின் ஆணித்தரமான பணிப்பு !

குமரன் எழுந்து நிற்கிறான்...

''சிவா,... வேலுவின் துப்பாக்கியை வாங்கு'' குமரன் கூறுகிறான்.

''குமரா நான் உயிரோடு இருக்கும் வரை நான் ஏந்திய ஆயுதத்தைஇழக்கமாட்டன். நான் செத்தாப்பிறகு எடுத்துக் கொள்...'' யுத்த களத்திலே கிருஷ்ணன், அருச்சுனனுக்கு யுத்த தர்மத்தைப் போதித்தது போல், வேலு தனது இறுதி நிலையில் ஒரு போராளிக்குரிய பெரிய பொறுப்பை கூறுகிறான் வேலு கூறிய அர்த்த புஷ்டியான வார்த்தைகள் மீண்டும் ஒரு இடியாய் குமரனின் செவிப்பறையில் வீழ்கிறது... குமரனின் இதயத் துடிப்பு சில வினாடிகள் தரித்து மீண்டும் இயங்குகின்றது...!

வேலு கண்களை மூடி' தலையைச் சரித்து கன்னப் பக்கத்தை வசதியாக வைக்கிறான்.

வேலு மரணத்தை யாசித்தான் இப்போது மரணத்தை வழங்குபவனுக்கு வசதியாகத் தன் கன்னத்தைக் காட்டிப் படுக்கின்றான்!

குமரனின் இதயம் கல்லு நெரிக்கும் உருளையால் நசிபடுவது போல்...

குமரனின் துப்பாக்கிமுனை வேலுவின் கன்னத்தைக் குறி வைக்கின்றது. குமரனின். கண்கள் ஆகாயத்தை நோக்குகின்றன. ... சிவாவும், கணபதியும் கண்களைப் பொத்திக் கொள்கின்றனர்...

குமரனின் துப்பாக்கி வெடிக்கின்றது!

குண்டு வேலுவின் கன்னத்தைத் துளைத்து மறு கன்னத்தால் வெளியேறி நிலத்தில் புதைகிறது...

வேலுவின் துப்பாக்கியோடு மூவரும் தப்பித்துக் கொள்கின்றனர்.

### யுத்தத்திற்கும்

யுத்தம் அதன் தர்க்கபூர்வ வளர்ச்சியை அடைந்து விட்டது. இராணுவம் அதற்கேயான தர்க்கபூர்வ வளர்ச்சிக்கு வந்து விட்டது. இங்கு பிரேமதாஸவின் பாத்திரம் பலவீனமானது எப்பொழுதும் தற்காப்பு நிலையில் காணப்படுவது. வெல்ல முடியாத யுத்தத்திற்கும், தீர்வுகளற்ற சமாதானத்திற்கும் இடையில் மிக நுட்பமான. பாரதூரமான ஒருதெரிவைச்செய்வதி லிருந்து அவர் அநேகமாகத் தப்பவே முயல்வார்.

## நீள நாதமாய் ''ஈழநாதமே'' வாழியவே!

-சுரேஷ்

ஈழ நாதமே
  நீள நாதமாய்
ஈழ மண்ணிலே
  காலங் காலமாய்
பாலுந் தேனுமாய்
  நாளும் சுவைத்திட
வாழ வேண்டியே
  வாழ்த்துப் பாடுறன்!

முண்டும் துயரிலும்
  மூழ்கி எழுந்துமே
கொண்ட இலட்சியம்
  காக்கும் பணியிலே
நான்காம் அகவையை
  நாடும் வேளையில்
நற்பணி யில்ஓங்கவே
  நானும் வாழ்த்துறன்!

நாலு தேசமும்
  நடக்கும் நிகழ்வினை
நாட்டில் அனைவரும்
  நயக்கும் வகையிலே
நுட்ப திட்பமாய்
  நினைத்து வழங்கிடும்
ஈழ நாதமே நீயென்றும்
நீளநாதமாய் வாழியவே!

### கவிதை இன்பம்

கலக்காரிகை என்னும் நூலைக் கற்றுத் தேர்ச்சிமிக்கவராகி அதன் பின்பு கவிதை பாடுவதை விட பேரிகை என்னும் முரசு கொட்டிப்பிழைப்புநடத்துவது மேலானது என்பது இம் மூதுரையின் விளக்கமாகும். ஆனாலும் கவிதை எழுதும் ஆற்றலும், கவிதை உள்ளமும் கொண்டவர்கள் இலக்கணத் தேர்ச்சிபெறுவது அவர்களது படைப்புகளுக்கு மேலும் செழுமையையும், வலிமையையும் சேர்க்கும் எனத் துணிந்து கூறலாம்.

ஒருகோடி கவிதைகளால்
உலகம் போற்றும் பெருங்
கவிஞன் என நாமம் பெற்
றால் - அஃது ஒரு சொட்டு
ரத்தத்தை உரிமைப்போரில்
தருபவனின் புகழ் முன்னே
தூசு! தூசு!! என்பது தென் தமிழீழப் பகுதியைச் சேர்ந்தவரும் காலஞ் சென்றவருமான கவிஞர் சுபத்திரனின் கூற்று. அதாவது கவிஞன் என்னும் பெயரைப் பெற்று உலகம் போற்றும் நிலைமை எட்டப்பட்டாலும் கூட, உரிமைப் போரில் ஈடுபட்டு ஒரு சொட்டு ரத்தத்தையாவது உரிமைக்காகத்தருபவனின் புகழின் முன்னே கவிஞன் என்பவனின் புகழ் தூசாகிப்போய் விடுகின்றது என்பது கவிஞர் சுபத்திரன் சொல்லும் செய்தியாகும்.

## புதிய பேரர்களுக்காய்...

றுப் பார்ப்பாள். தூரத்தில் அப்புவாகத் தெரிபவர்கள் கிட்ட வந்ததும் வேறாகத் தெரிவார்கள் ஆச்சி கலங்கிப் போவாள். ஆனாலும், அவள்அடிமனம் அப்பு வருவார் எனச் சொல்லும்.

அதுதான் அவள் வாழ்வின் அர்த்தம்.

அன்றும் ஆச்சி வாசல் திண்ணையில் இருந்தாள். தூரத்தில் அப்புவைப்போல .. வைத்த கண் எடுக்காமல் உற்றுப்பார்த்தாள்.

கிட்டவாக, அவளிடம்தான் கிழவி துடித்துப் பதைத்து எழுந்தாள். கண்கள் ஏக்கத்துடன் கலவரப்பட்டன.

அது அப்பு இல்லை, விதானையார். ஆச்சி ஏமாந்து போனாள். சோர்ந்துவாடிப் போனாள்.

''ஆச்சி,அப்புவை கனநாளாகாணேலை,இனி வரமாட்டார்'' விதானையின் வார்த்தைகளைக் கேட்டு ஆச்சி திகைத்துப் போனாள்

''அப்பிடிச் சொல்லாத ராசா'' விதானையைகெஞ்சுமாப் போல் பார்த்தாள்.

''இல்லை ஆச்சி, ஆள் செத்திட்டார் போல கிடக்குது. நான் கூப்பன் முத்திரையை வெட்ட வேணும்'' என்றார் விதானை.

ஆச்சி விளங்காமல் பார்த்தாள்.

''அப்பிடிச் சொல்லாத அப்பன். நீ உங்கை எத்தினை செத்தாக்களுக்கு கூப்பன் கொடுத்திருக்கிறாய்,வேணுமெண்டா முத்திரையை கொண்டுபோ உப்பிடி இன்னொரு தரம் சொல்லாத ராசா'' கிழவி விதானையாரின்கன்னத்தைத்தடவினாள். மெலிந்த கைகள் நடுங்கின. சுருக்கம் விழுந்த விழிகளின் ஓரங்களில் கண்ணீர்.

விதானைக்கு நெஞ்சத்தில் தைத்தது. அந்த முதியவர்களின் அன்புப்பிணைப்புக்கு முன்னால், அவன் ஒரு சிறு பூச்சி போல குறுகிப்போனான்.

விதானையார் சத்தமில்லாமல் போவதை ஆச்சி பார்த்தபடி நின்றாள். 'விதானை நல்ல பெடியன், இப்படிக் கதையான் இண்டைக்குமட்டும் இப்பிடி... ஏன் ..?' 'சந்தேகம் தலை தூக்கியது'. போயிட்டாரோ என்னை தனிய விட்டுட்டுஅந்த மனுசன் தான்மட்டும் போயிட்டுதோ? அனுங்கினாள் பின்பு சத்தமாக கேவினாள். 'இப்பிடி நினைக்க கூடாது, அதுவும் இந்த நேரத்தில.. அவர் வருவார். நான் போனபிறகு தான் அந்த மனுசன்'

இப்போதெல்லாம் கிழவிக்கு திண்ணைதான் வாழ்விடம். தூரத்தைப் பார்த்தபடி யோசனையில் இருப்பாள். உலகத்து நடப்புகளை அவள் கவனிப்பதில்லை. தோள்களில் துவக்குத் தொங்கும் அந்தப் பொடியனைக் கண்டால்தான் அவளுக்கு உள்ளம் குளிரும். சிரிப்பாள்.

''அப்புவைக் கண்டநீங்களே ராசா?'' ஆச்சி வழமையாக கேட்கும் கேள்விதான். ஆவல்நிறைந்தஅவள் முகத்தைக் கறுக்க வைக்க அவர்கள் விரும்புவதில்லை.

''இல்லை. அப்பு வந்திடுவாரணை ஆச்சி'' அமைதியாக வார்த்தைகள் வரும். அவர்களின் முகங்களில் கருணை பொழியும்.

கிழவிக்கு ஆறுதலாக இருக்கும். அவள் சிரிப்பாள். கண்களின் சுருக்கங்களில்நீர் வடியும். எதிரில் நிற்பவனை எட்டிப்பிடித்து நெற்றியில் எச்சிலோடு முத்தமிடுவாள் பின்பு பூப்பறித்துக் கொண்டுகிணற்றடிப் பிள்ளையாரிடம்போவாள்; புதிய பேரர்களுக்காய்.

இப்போதெல்லாம், அவளுக்கு வாழ்வோடு புதிவித ஒட்டுதல். புதிய பிடிமானம்.

அன்று இரவும் அப்படித்தான். நடுஇரவு கடக்கும் வரை சிவப்பிப் பசுவின் கதறலைத் தவிர மற்றும்படி அமைதியாகவே இருந்தது. அதன் பின்புதான் ஊர் கலவரப்பட்டது.

குண்டுகளின் அதிர்வுகள். வெடிச்சத்தங்கள். வண்டிகளின் பேய் போன்ற உறுமல்.

காற்றில் முறிந்து சிதைந்தமரங்களின்மணம், வெடிமருந்து வாடை

''ஆச்சி. ஓடணை, ஓடணை'' சனங்கள் விழுந்தடித்து அவலப்பட்டு ஓடினர். கிழவி வெளித்திண்ணையில் இருந்தாள். மெலிந்து வற்றிப்போன தேகம் நடுங்கியது.

''நான் ஒரு இடமும் வரன். அப்பு வருவார். நான் இருக்க வேணும். அந்தப்பெட்டியள் வருவாங்கள் நான் இருக்கவேணும்''

ஆச்சி கண்களை வெட்டியும், அகட்டியும் இருளுக்குள் உற்றுப் பார்த்தாள்.

# இந்தியாவின் கொடுமையால் இரத்தம் சிந்தும் காஷ்மீர்

பாலகுமாரன்


காஷ்மீரின் பனிமூடிய விடியற் காலைக்கு சற்று முன் பொழுது. நேரம் 2 மணி. சிறிநகரின், புறநகர்ப் பகுதியான 'கசரத்பர்' எனுமிடத்தில் ஒவ்வொரு வீட்டுக் கதவும் உதைக்கப்படுகிறது. நித்திரைக் கலக்கத் தோடிருந்த - ஒவ்வொரு வீட்டுக் குடும்பத்தினரும் வீதிக்குக் கொண்டு வரப்படுகின்றனர். பெண்கள் குழந்தைகள் ஒரு வரிசை, முதியோர் இன்னொரு வரிசை, மூன்றாம் வரிசை வாலிபர், நடுவயதினர் என திடகாத்தரமான ஆண்களுக்கானது என இவர்கள் வகையாகப் பிரிக்கப்பட்டு நிற்க வைக்கப்படுகின்றனர். இவர்களை நோக்கி நீள்கின்றது, இந்திய இராணுவத்தின் துப்பாக்கிகள். விடியு மட்டும் இதே நிலை; விடியும் தறுவாயில் உறுமியபடி ஜீப் வண்டிகள் வருகின்றன. கறுப்புத் துணியால் முற்றிலும் மூடப்பட்ட நிலையில் பத்து, பன்னிரண்டு 'தலையாட்டிகள்' வந்திறங்குகின்றனர். மூன்றாம் நிரையிலிருந்த 16 ஆண்களை அடையாளம் காட்டுகின்றனர். அடையாளம் காட்டப்பட்டோர் இராணுவ வண்டிகளில் ஏற்றப்படுகின்றனர். வண்டிகள் விரைகின்றன. அவ்வளவுதான். பின் அவர்களைப் பற்றி எத்தகவலும் இல்லை. இவர்களின் அன்னையர், மனைவியர், சோதரியர் சிறிநகர் இராணுவ தங்ககங்களில் தவம் கிடக்கின்றனர், பலன் ஏதுமில்லை. இது நடந்தது கடந்த வருடம் நவம்பர் 14ம் திகதி.

ஒப்பரேசன்டைகர்(Opperaton Tigre) எனப் பெயரிடப்பட்டுக் கடந்த கோடையிலிருந்துமிகப்பெரியஇராணுவஅழுத்தமொன்று காஷ்மீர் மக்கள் மேல் பிரயோகிக்கப் படுகின்றது. மேலே சொல்லப்பட்டது அதனொரு பகுதியே. நடு இரவு கதவுதட்டல், 'வரிசையாய் நிற்கவைத்தல்,' தலையாட்டிகள் அடையாளம் காட்டல், காட்டப்பட்டோர் காணாமல் போதல், பின்னர் உயிரற்ற உடலங்களாக தெருவோரங்களில் காணப்படல், இவையே இந்திய இராணுவத்தின் வழமையான நிகழ்ச்சி நிரல் என மனிதஉரிமை அமைப்புக்கள் பட்டியலிடுகின்றன. அவர்களின் தகவல்களின்படி இப்படியானஅதிரடி நடவடிக்கைகள் Crack downs சிறிநகரில் தினம் தோறும் ஒன்றாவது நடக்கின்றது. சிறிநகருக்கு வெளியே பல இவ்வாறு நாள் தப்பாது நடக்கின்றன. ஒப்பரேஷன் டைகருக்காக நான்கு இலட்சம் இராணுவத்தினரும்,பொலிசாரும் காஷ்மீரத்தை முற்றுகை இட்டுள்ளனர். இவர்கள் ஊரடங்கைப் பிறப்பித்து வீதித் தடைகளைஏற்படுத்தி பெரும் தொகை கைதுகளை செய்து தடுப்புக் காவல்கைதிகளைசித்திரவதைக்கு உட்படுத்தி நீதி விசாரணைக்கு புறம்பான பழி வாங்கல் கொலைகளை மேற்கொண்டு... இவ்வாறு பாரிய இராணுவ அடக்குமுறையை காஷ்மீர்மக்கள் மேல் இந்தியா கட்டவிழ்த்துவிட்டுள்ளது.பஞ்சாப்பில் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு காஷ்மீரில் இப்போதுதொடரும் இவ் அடக்கு முறைகள் ஏனைய அசாம், திரிபுரா போன்ற பகுதிகளில் உள்ள பிரிவினை கிளர்ச்சி வாதிகளுக்கு விடப்படும் முன்னெச்சரிக்கையாக கருதப்படவேண்டும் என்பதே இந்திய அரசின் நோக்கம். ''நாங்கள் கடுமையாக நடக்கிறோம் என்பது உண்மைதான். காஷ்மீரில் பிரிவினைவாதிகள் வெற்றிபெற்றால் இந்தியாவின் கதி என்ன? அதோகதிதான்'' என்கிறார் இந்திய உயர் அரசு அதிகாரி ஒருவர்.

''ஏசியா வோச்'' (Asia Watch) என்கிற மனித உரிமை காப்பியக்கத்தின் பிரதி நிதியொருவர் காஷ்மீர் சென்று நேரடியாகத் தகவல்களைத் திரட்டிய பின் வெளியிட்ட அறிக்கை இந்திய இராணுவத்தின் வெறியாட்டங்களை வெளிப்படுத்தியுள்ளது. மேற்குலகம் இதைக்கண்டு அதிர்ச்சியுற்றுள்ளது. மனித உரிமைகள் விடயத்தின் இந்தியாவின் நிலையே இன்று கேள்விக் குறியாக மாறிவிட்டது. இவ் அறிக்கையில் தடுப்புக்காவல் வதைகள், மின் அதிர்ச்சியைப் பாய்ச்சல், பாலியல் வன்முறை, போன்ற பல கொடுமைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் ''உருளை முறை'' (Roller) எனப்படும் இந்தியஇராணுவத்தின் நவீன வதை முறைபற்றி விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதிக கனமுள்ள உருக்குக் குழாய் அல்லது மரக்குற்றியின் இரண்டு பக்கங்களிலும் 2, 3 பேர் தொங்கி நிற்க அவ்வுருளையை வதை செய்யப்படுவோர் உடல் மேல் மாறிமாறி உருட்டல். இவ்வாறு உருட்டப்படும் போது வதைக்குட்படுபவர் உடலின் தசைகள், திசுக்கள், இழையங்கள்போன்றவை நசுக்கப்படுகின்றன. இவ்வாறு நசுக்கப்படும்போது பிதுக்கப்படும் நச்சுப்பொருள்கள் வெள்ளமென சென்று சிறுநீரகங்களை நிரப்புகின்றன. பாரிய வாகன மோதலின் போதோ, பெரும் தொழிற்சாலை விபத்தொன்றின் போதே மட்டும் காணக்கூடிய உருக்குலைந்த நிலையை இவ்வுருளை வதைக்குட்பட்டோரிடம் பார்த்ததாக வைத்தியர் ஒருவர் கூறுகிறார். உடனடி சிகிச்சை இன்றேல் மரணம் நிச்சயம் என்கிறார் இவர்.

ஒப்பரேஷன் டைகரின்நோக்கமே பிடித்தலும் கொல்வதும் தான் (Catch and Kill) காஷ்மீர் போராளிக்குழுக்களின் தலைமைகளை கொன்றொழிப்பதே இந்திய அரசின் திட்டம் ஆனால் வதைகளை செய்து தலைமைகளை அழித்து வரலாற்றுப் போக்கினை மாற்றமுடியுமா என்ன? மிகக் கடுமையான இராணுவ நடவடிக்கைகள் நேர் எதிர்மாறான விளைவுகளையே காஷ்மீரில் ஏற்படுத்தியுள்ளன. கடந்தமூன்று வருடங்கட்கு முன் ஆரம்ப நிலையிலிருந்த காஷ்மீர் மக்களின் எதிர்ப்புப்போராட்டம் இன்று நன்குபலம் பொருந்திய நேர்த்தியான கெரில்லா போராட்ட வடிவத்தை (Classic Gueril la Campaign) பெற்று விட்டதாக ''நியுஸ்வீக்'' மதிப்பிடுகிறது. இன்று காஷ்மீரம் முடக்கப்பட்டுவிட்டது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தொலைத்தொடர்பு நிலையங்கள் மின் உற்பத்தி நிலையங்கள் அரச நிருவாக மையங்கள் தாக்கி அழிக்கப்படுகின்றன.மிக அண்மையில்இந்தியாவிற்கும்காஷ்மீருக்கும் தொடர்புகளை ஏற்படுத்தும் தொலைத்தொடர்பு நிலையமே குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது. அழகு கொழிக்கும் காஷ்மீர் பள்ளத்தாக்கு இப்போது குருதி வடியும் போர்க்களமாகிவிட்டது. உல்லாசப்பயண விடுதிகள், உலகப் புகழ் பெற்ற கம்பளி தரைவிரிப்பு நிறுவனங்கள் எல்லாமே மூடப்பட்டு விட்டன. ஒரு காலகட்டத்தில் மிகப் பிரபல்யம் வாய்ந்த ஒபரோய் பலஸ் பயண விடுதி இன்று இராணுவப் புலனாய்வுத்துறையின் இருப்பிடமாகிவிட்டது. காஷ்மீரில் இன்றுலவும் வதந்தியே, இதற்குள் விசாரணைக்கென முன்வழியால் அழைத்துச் செல்லப்படுவோர் பின் வழியால் பிணமாக வருகின்றனர் என்பது தான்.

இம்மோதலின் பின்னணி பழமையானது. சுதந்திரம் என்கிற பெயரில் இந்திய துணைக் கண்டம் 1947இல் மத அடிப்படையில் இரண்டு நாடாகியது. ஆனால் காஷ்மீரைப் பொறுத்தவரையில் கதை வேறாக இருந்தது. மிகப் பெரும்பான்மை முஸ்லிம் மக்களைக் கொண்ட அப்போதைய காஷ்மீர் பகுதியின் இந்து மகாராஜா நேருவின் தூண்டுதலால் முஸ்லிம் மக்கள் கருத்துக்கு மாறாக இந்தியாவோடு காஷ்மீரத்தை இணைத்தார். நேருவும் படையை அனுப்பி இணைப்பை ஏற்படுத்தினார். அன்று ஆரம்பித்த மோதல் பின்னர் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான பெரும் போர்க்களமாக வெடித்தன. இவற்றின் விளைவாக காஷ்மீர் துண்டாடப்பட்டு இரண்டாகிய காஷ்மீரின் எல்லைப் பகுதியே நிரந்தர மோதலின் இருப்பிடமாயிற்று. நேரு முன்னர் காஷ்மீரின் தனித்துவம் பேணப்படும் எனக் கொடுத்த வாக்குறுதி பின்னர் மீறப்பட்டது. இந்திய இராணுவத்தின் பிடியிலிருக்கும் காஷ்மீர் பகுதி இன்று ஜம்மு காஷ்மீர் என இந்திய மாநிலமாக்கப்பட்டது. இந்தியாவின் இந்த நயவஞ்சகத்தனத்தை பாகிஸ்தான் முறையாக பயன்படுத்தி வருகின்றது. அத்தோடு ஆப்கான் போர் முடிவடைந்தது மேலும் பாகிஸ்தானுக்கு வாய்ப்பாகிறது. 1989ஆம் ஆண்டிலிருந்தே ஆப்கான் கெரில்லாக்கட்கு மேற்குலகு அனுப்பிய நவீன ஆயுதங்கள் காஷ்மீருக்கு பாதை மாற்றப்பட்டன இன்று ஆப்கான்போராளிக்குழுவினர் காஷ்மீரில் சண்டையிடுவதாக இந்தியாமுறைப்படுகின்றது. 25 ஆயிரம் பொதுமக்களை இந்தியா கொன்றுவிட்டதாகவும், பாகிஸ்தான் உதவி பெறும் குழுக்கள் 400 இந்திய இராணுவத்தையும், 2000 பொது மக்களையும் கொன்றதாகப் பாகிஸ்தானும், இந்தியாவும் மாறி மாறி குற்றம் சாட்டுகின்றன.இறந்தோர் தொகை இன்னமும் சரிவரத் தெரியவில்லை. எது எப்படியிருப்பினும் இப்போது காஷ்மீரில் குருதியாறு ஓடத் தொடங்கிவிட்டது. அது மட்டுமன்றி சிறிநகரின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இறந்த போராளிகள் புதைகுழிகளை கொண்டுள்ள அமைவிடங்கள் வீரவணக்கத்திற்குரிய தியாகிகள் பூமியாக மாறி வருகின்றன. பத்துப் போராளி இயக்கங்கள் இருந்தபோதும் இரண்டே இரண்டுதான் முக்கியமானவை. இவை இரண்டும் காஷ்மீர் விடுதலை என்கிற ஒன்றில் மட்டும் ஒற்றுமையாக இருக்கின்றன. ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணியே (JKLF) பெரியது. பிரபல்யம் மிக்கது. இம் முன்னணியினர் காஷ்மீர் விடுதலை பெற்று தனி நாடாகத் திகழ வேண்டும் என விரும்புபவர்கள். மற்றையது 'கிஸ்புல்-முஜாகுதீன்(HIZBUL MUJAHEDIN) முஸ்லிம் பழமைவாத மதக் கோட்பாட்டை பின்பற்றும் இவர்கள் விடுதலை பெற்ற காஷ்மீர் பாகிஸ்தானோடு இணைய வேண்டும் என்கிற நிலைப்பாட்டைக் கொண்டவர்கள். எனவே முன்னையதை விட பின்னையதிற்கே பாகிஸ்தான் கூடிய உதவிகள் செய்வது வியப்பானதல்ல.




முன்னர் ஐ. நா. மேற்கொண்ட தீர்மானம் ஒன்றின்படி இந்தியாவுடன் இருப்பதா? அல்லது பாகிஸ்தானுடன் இணைவதா? என்பதை தீர்மானிக்க காஷ்மீரில் ''நேரடி வாக்கெடுப்பு (Referendum) நடாத்தப்பட வேண்டும் என பாகிஸ்தான் பிடிவாதமாக நிற்கின்றது. இருக்கும் நிலைமைகளை வைத்துப் பார்க்குமிடத்து பாகிஸ்தான் இணைவதையே காஷ்மீர் மக்கள் விரும்புவார்கள் என்பது மிகத்தெளிவு. ஆனால் பூரணமான மனமகிழ்வோடுஅல்ல; ஏனென்றால் பாகிஸ்தானில் உள்ள பழமை பேண்வாதிகள் மிகத் தீவிரமான முஸ்லிம் சமய பழமை வாதத்தை தம்மீது திணிக்கக் கூடும் என இம்மக்கள் ஐயுறவைகொண்டுள்ளார்கள். இந்தியாவோ காஷ்மீருக்கு கூடிய சுயாட்சி வழங்கத் தயார் என பேச்சுக்கொரு தரம் கூறினாலும் காஷ்மீர் மக்களை திருப்திப்படுத்துமளவிற்கு வழங்க அவர்கள் தயாராக இல்லை. இதுவே இன்றைய நிலை.

மிகக் கொந்தளிப்பாக இருக்கும் தமது எல்லையில் சிறிய புதிய நாடொன்று உருவாவதை இவ்விரு நாடுகளுமே இன்று விரும்பவில்லை. எல்லாவற்றிலும் பெரிதும் முரண்படும்இவ்விருநாடுகளும் இவ் விடயத்தில் மட்டும் ஒரே கருத்தினைக் கொண்டிருக்கின்றன. எந்தவொரு நாடும் எந்தவொரு உதவியைச் செய்தாலும் அது தனது சொந்த நலனுக்கேயாகும் என்கிற அரசியல் வாய்ப்பாடை முன்னர் தமிழீழ மக்கள் உணர்ந்தனர். இப்போது காஷ்மீர் மக்கள் உணர்கின்றனர். நேற்று தமிழீழம் இன்று காஷ்மீர் என நீளும் இந்தியக் கொடுங்கரங்கள் மடங்கும் காலம் விரைவில் வரும். எனவே விடுதலை தாகம் கொண்ட காஷ்மீர் மக்களுக்கு தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. அதைத்தான் அவர்கள் இன்று செய்கிறார்கள்.

## பொதுக் கூட்டம்

வடபிராந்தியசிகைஅலங்கரிப்பாளர் சங்க யாழ். உபபணிமனையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத்தலைவர் திரு. அல்பேட் தலைமையில் இன்று காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (21)

புலிகள்

க்கவில்லை எனக் கூறினார். பூநகரியில் நிலைகொண்டுள்ள இராணுவம் பாதையிலிருந்து ஒரு மைல் தூரம் விலகி நின்று மக்கள் சுதந்திரமாக சோதனையின்றி பயணம் செய்ய அனுமதிக்குமாறு புலிகள் கோரிக்கை விடுத்தனரெனவும் தெரிவித்தார்.

## "ஸ்பெஷல் இன்சினியர்"



36, அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

நாலாம் ஆண்டிற்கு கால் எடுத்து
வைக்கும்
ஈழநாதமே, நீ வள்ளுவனின்
பாப்போல்
பல்லாண்டு வாழ்கவென
வாழ்த்துகின்றோம்!

(சி-6052)

இளங்கலைஞர் மன்றத்தின்

## இசை விழா

நீர்வேலி ப.நோ.கூ. சங்கத்தின் ஆதரவில்
பதினொராம் நாள் நிகழ்ச்சிகள்
19.02 93 (வெள்ளி) இன்று
இடம்:- மன்றக் கலா மண்டபம்

சிவராத்திரி தினம்

**மாலை 4.00 — 5.00 மங்கள இசை**

| நாதஸ்வரம்: | தவில்: |
|---|---|
| கே. ரி. சுப்பிரமணியம் | ரி. சுந்தரலிங்கம் |
| என். ராஜன் | ஆர். யசோதரன் |
| வி. செல்வராஜா | என். உதயகுமார் |
| பி. வரதன் | வி. சபேசன் |

**5.00 — 5.15 வயலின்**

சந்தானலட்சுமி, பாமினி, பாமா, அகிலன், தயாளினி, சுசித்திரா, குமுதா, சுகன்யா,
மிருதங்கம்: சதாவேல்மாறன்

**5.15 — 5.30 பாட்டு**

க. தீபன், பா. நிரஜா, ச. சிவா, கு. அனுஷா, வே. மணிமேகலை, இ. வைதேகி, சி. மதிவதனி, ஆ. ரோகினி, அ. சாந்தமலர், க. பிரேமிளா, வ. அருந்ததி, பூ. அகிலா
வயலின்: கிருஷ்ணவேணி மயில்வாகனம்
மிருதங்கம்: சதாவேல்மாறன்

**5.30 — 6.00 இருவயலினிசை**

ரி. குகரஞ்சனி வி. கௌரி
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்

**6.00 — 6.45 பாட்டு: ராதிகா சுப்பிரமணியம்**

வயலின்: சாந்தநாயகி சுப்பிரமணியம்
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்

**6.45 — 7.00 மங்கள விளக்கேற்றல்**

கே. கே. ஏ. கந்தையாப்பிள்ளை
செ. கனகரெத்தினம் (வர்த்தகர்)
திரு. ஆ. சுப்பிரமணியம் (விநாயகர் ஸ்ரோர்ஸ்)
தலைவர்: திருமதி லலிதா மகேந்திரன்
(விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் பயிற்சிகலாசாலை)
சிறப்புவிருந்தினர்: எஸ். பி. ஜெயலிங்கம்
(கட்டடக் கலைஞர்)
மா. ராமதாஸன் (மராமத்துப் பொறியியலாளர்)

**7.00 — 8.00 இசைக் கச்சேரி**

பாட்டு: மேரி சறோஜா ஜஸ்ரின்
வயலின்: ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம்: எஸ். துரைராஜா

வாழ்த்துவோர்:

**ரூபன் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி மார்க்கட்
திருநெல்வேலி. (சி5965)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

குமண

சேர்ந்தது. அதேவேளை நோயாளிகளுடன் 90 பேர் கொழும்புக்கு புறப்பட்டனர்.

இக்கப்பலில் தபால் திணைக்களம் 94 தபால் பொதிகளையும் அனுப்பி வைத்துள்ளது. அரசாங்க அதிபரும் புறப்பட்டார். (யோ)

பூநகரி

அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், "பூநகரியிலிருந்து இராணுவம் விலகிநிற்க மறுக்கும் பட்சத்தில், கிளாலி கடற்பரப்பு மீது அரசாங்கம் விதித்துள்ள தடையை நீக்கி மக்களின் போக்கு வரத்திற்கு அனுமதிக்குமாறு புதிய யோசனை ஒன்றை தெரிவித்திருந்தோம். இந்த யோசனையை அரசாங்கத்திற்கு அறிவித்து பதிலை அறிவிப்பதாகவும் திரு ரியூட்டர் கூறியிருந்தார்" என்று திரு. பாலசிங்கம் தெரிவித்தார்.

உண்மைநிலை இப்படியிருக்க, கொழும்பில் ஐ. நா. அதிகாரி தெரிவித்ததாக பத்திரிகையில் வெளிவந்த செய்தி கவலையையும், ஏமாற்றத்தையும் அளித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

வெளிச்சம்

கடந்தகால நினைவுகளைக் காட்டும் பன்னிரண்டு படங்களும் கேணல் கிட்டு பற்றி தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்கள், மூத்த தளபதி ச. பொட்டு உட்பட விடுதலைப்புலிகள் உறுப்பினர்களான கஸ்ரோ, சிங்காரம், தேவர் அண்ணா, சி. பாவரசன் ஆகியோரின் கட்டுரைகளையும் புதுவை இரத்தினதுரை, இளந்திரையன், தமிழவள் ஆகியோரின் கவிதைகளையும் இன்னும்பல நினைவலைகளையும் சுமந்த வெளிச்சம் இன்று வெளிவருகின்றது.

தபால்

★ மாணவர்களுக்கு தேவையான கொப்பிகளை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கும்படி நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற திணைக்களங்களுக்கான கூட்டத்தில் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

★ கமநல சேவைகள் திணைக்களம் தமது திணைக்களத்திலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்ப அரச அதிபரிடம் கோரியுள்ளது.

இவ் உத்தியோகத்தரின் வெற்றிடங்கள் பலகாலமாக நிரப்பப்படாததால் தமது பணிகள் பெரிதும் பாதிப்படைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

★ தமது போக்கு வரத்துக்கு தேவையான எரிபொருள்களைப் பெற்றுத் தருமாறு உதவி அரசாங்க அதிபர்கள் நேற்று அரச அதிபரிடம் கேட்டுள்ளனர்.

தற்பொழுது துவிச்சக்கர வண்டிகளில சென்றே கடமைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் யாழ் மாவட்டத்திலுள்ள விளையாட்டுத்துறை உத்தியோகஸ்தர்களின் வெற்றிடங்களை நிரப்பித் தருமாறும் அவர்கள்கோரியுள்ளனர்.

★ மாதாந்தம் 15 மில்லியன் ரூபா பணத்தை கொழும்பிலிருந்து பெற்றுத்தருமாறு வங்கி அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (பா) (சி) (நி)

உப உணவுச்

பயிரிட ஊக்குவிப்பது எனவும் பிரதேசவாரியாகத் தீர்மானிக்கப்பட்டு அவற்றிற்கேற்ப மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விடுமுறை

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கத்தினர் நாளை வர்த்தக விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர் இத்தகவலை நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது

## நிறைவு விழா

மதிகல்வி வளர்ச்சிக் கழகத்தின் ஓராண்டு நிறைவு விழா சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் .00மணிக்கு இடம்பெறவுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### இலங்கையர் குருசாமி

காங்கேசன்துறையைச் சேர்ந்த இளைப்பாறிய சிரேஷ்ட புகையிரத பாதுகாவலரும், காங்கேசன் பட்டினசபை முன்னாள் தலைவரும் ஆகிய இலங்கையர் குருசாமி இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற ஞானேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சண்முகவடிவு (ஆசிரியை. அடம்பன்மகாவித்தியாலயம்). நாவுக்கரசி(பாதுகாப்பு இலாகா (U.K )பரிமாளகாந்தி, Dr. இலங்கை நாராயணன் (அரசினர் வைத்தியசாலை. முல்லைத்தீவு). விஜயலட்சுமி, காஞ்சனமாலா (swiss) தங்கலட்சுமி (U K ),யோகாம்பிகை (U K.). ஞானாம்பிகை (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

பஞ்சாட்சரம் (இளைப்பாறிய நிர்வாக உதவியாளர் அடம்பன்). பொன்னம்பலம்(பொறியியலாளர் தொலைதொடர்பு இலாகா U K.). பண்டிக வரதன் (இளைப்பாறிய Chemist இரசாயன தொழிற்சாலை பரந்தன்) பத்மினி, பரமசிவம் (வரைபட இலாகா, சவுதி அரேபியா). தர்மபாலசிங்கம் (கணக்காளர்U K ) கஜேந்திரா (கணக்காய்வாளர் U.K.) ,சண்முகராசா (Canada) ஆகியோரின் மாமனாரும்,

பிரேமலதா (U S A.). ரஜனி [இணுவில்], கௌசல்யா. கிருஷ்ணகுமார் (France). சாந்தினி (Dubai) பத்மலோசனி (U.K.), வாசவன் (Australia). யசோதா (கொழும்பு), யமுனா, கோகுலன் (Canada). சுமதி (Medical College U. K ). ரங்கன் (U.K.) யாதவன், ஜெனனி [இந்தியா), ராகுலன் (U. K ), வானதி, பகீரதி (கொழும்பு). அபிராமி (Swiss). அனந்தன் (swiss), துவாரகன் (U. K.), சுமங்கலா (U K ), சங்கீதா (U-K.] பார்கவி (U. K.) ஆகியோரின் அன்புப் பேரனும்,

காயத்திரி ((USA), மீனாட்சி (USA). நித்தியராம் நாராயணன், துளசிராம் நாராயணன், சங்கரராம் நாராயணன், ஆரணி, (France), அருணன் (France), சாரங்கி (கொழுமபு), ஸ்ரீலட்சுமணன் (U K.), லட்சுமி (Dubai), ஆரூரன் (Canada). ஆகியோரின் அன்புப் பூட்டனும்,

காலஞ்சென்ற திருமதி வன்னித்தம்பி, பொன்னுச்சாமியின் சகோதரரும் அழகேசு, சங்கரப்பிள்ளை. பொன்னம்பலம், சிவஞானம், முருகையா, திருமதி அன்னப்பிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 18-2-93 வியாழக்கிழமை நேற்று காரைக்கால் மயானத்தில் இடம்பெற்றது. இத்தகவலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

(4313) தகவல் : திரு. பஞ்சாசட்சரம்

### கந்தையா வினாயகமூர்த்தி (K.V.)

முன்னாள் பிரபல யாழ் / கொழும்பு வியாபாரி

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், மறுவன்புலோவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வினாயகமூர்த்தி அவர்கள் நேற்று (18-02-93) வியாழக்கிழமை காலமானார். இவர் பன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா செல்லமுத்து தம்பதிகளின் மூத்த புதல்வனும், மறுவன்புலோவைச் சேர்ந்தகாலஞ்சென்ற S. K ஆறுமுகம் வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜயக்குமார் (ஜேர்மனி), வினோதினி (மாணவி யா. கனகரத்தினம் மகாவித்தியாலயம்), விக்னகரன், விஜிந்தினி, விஜயரதனி (மூவரும் யா. நாவற்குழி மகா வித்தியாலயம் மாணவர்கள்) ஆகியோரின்அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி மனோன்மணி கந்தசாமிப்பிள்ளை, திருமதி ஞானசக்தி கந்தையா, திரு இராசரத்தினம் ஆகியோரின் சகோதரரும், திருமதி தங்கம்மா சின்னத்தம்பி, திரு. துரைரத்தினம் (U K ), திருமதி சாந்தநாயகி தணிகாசலம், திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம், திரு பஞ்சரத்தினம், திருமதி மகேஸ்வரி திருநீலகண்டன், திரு. சிறிகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் (19 - 02 - 93) வெள்ளிக்கிழமை இன்று பிற்பகல் 2.30 மணிக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி பரமேஸ்வரி வினாயகமூர்த்தி
[4319] (மனைவி)

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள் 18-02-1993

எமது பதிவில் உள்ள கடைசி இல: 8365
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள் இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

26-6398, 41-5417, 24-5041, 26-8138, 27-7263, 42-3267, 27-5845, 26-7612, 28-3735, 41-9111, 27-9033, 26-9283, 43-1019, 26-5810, 40-7584, 27-5217, 27-5535, 26-1741.